Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3110)

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 29 செவ்வாய்க்கிழமை (15.10.2013) பக்கங்கள் 20 ஓசை – 015

## முள்ளிவாய்க்காலில் சிவாஜிலிங்கம் சத்தியப்பிரமாணம்



(முள்ளியவளை)

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொள்வதற்கு மறுத்திருந்த 9 மாகாண சபை உறுப்பினர்களில் ஒருவராகிய எம்.கே.சிவாஜிலிங்கம் நேற்றைய தினம் முள்ளிவாய்க்காலில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவருக்கான சத்தியப் பிரமாணத்தை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த டாக்டர் மயிலேறும் பெருமாள் செய்து வைத்தார்.

இந்தச் சத்தியப்பிரமாண நிகழ்வு குறித்து கருத்து வெளியிட்ட சிவாஜிலிங்கம், முள்ளிவாய்க்காலில் சத்தியப் பிரமாணம் செய்து கொள்வதைக் கைவிடுமாறு

(19) ஆம் பக்கம் பார்க்க

## வட்டுக்கோட்டையில் புளொட் உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம்

(வட்டுக்கோட்டை)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் புளொட் அமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர்கள் இருவர் நேற்று சத்தியப்பிரமாணம் மேற்கொண்டுள்ளனர்.


புளொட் அமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும், தாமோதரம்பிள்ளை லிங்கநாதன் ஆகியோர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளனர்.

யாழ்.வட்டுக்கோட்டை பிரதேசத்தில் புளொட் அமைப்பின் செயலாளர் சுப்பிரமணியம் சதானந்தம் முன்னிலையில் இவர்கள் சத்தியப்பிரமாணம் மேற்கொண்டுள்ளனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வடமாகாண சபை

(19) ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாண முதல்வரின் கொழும்பு இல்லத்தில் இருவர் சத்தியப்பிரமாணம்



(கொழும்பு)

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற வடமாகணா சபை உறுப்பினர்களின் சந்தியப்பிரமாணத்தல் பங்கேற்காது பகிஷ்கரிதத தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ என்பனவற்றின் உறுப்பினர்கள் இருவர் வடமாகாண சபை முதலமைச்சரின் கொழும்பு இல்லத்திற்குச் சென்று சத்தியப்பிரமாணம் செய்துள்ளனர்.

நேற்று மாலை 5 மணி

(19) ஆம் பக்கம் பார்க்க

# மனித உரிமை மீறல் மறுப்பு எதிர்விளைவை தீவிரமாக்கும்



## அரசுக்கு கூறுகிறார் சொல்ஹெய்ம்

மனிதஉரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை அப்பட்டமாக மறுக்கும் இலங்கை அரசின் போக்கு, இந்த விவகாரம் தொடர்பாக ஏனையவர்கள் கொண்டுள்ள உறுதிப்பாட்டை அதிகரிக்கவே செய்யுமென நோர்வேயின் முன்னாள் அமைச்சரும், இலங்கையின் சமாதான ஏற்பாட்டாளராக கடமையாற்றியவருமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

போரின் இறுதிக்கட்டத்தில், அரசாங்கம் எவ்வித மனித உரிமை மீறல்களிலும் ஈடுபடவில்லையென ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளது குறித்து, கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத, பூச்சிய நிலை இழப்புக் கொள்கையை அரசாங்கம் கடைப்பிடித்ததாகவும், ஆனால், தனியான சில சம்பவங்கள் நடந்திருக்கலாம் என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டிருந்தார்.

எதற்காக 30 ஆண்டு காலப் போரை கருத்தில் கொள்ளாமல், போரின் இறுதிக்கட்டம் மட்டும் முக்கியத்துவப்படுத்தப்படுகிறது என்றும், அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட எரிக் சொல்ஹெய்ம், மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை அப்

(19) ஆம் பக்கம் பார்க்க

## முன்னுக்குப் பின் முரணான வகையில் மக்களைக் குழப்புகிறது கூட்டமைப்பு

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வடமாகாண சபைத்தேர்தலிற்கு முன்னரும், தேர்தலுக்குப் பின்னரும் முன்னுக்குப் பின் முரணாக மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்திவருவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றஞ் சாட்டியுள்ளது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் நேற்று யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பி

(19) ஆம் பக்கம் பார்க்க



## ஐ.நா. குற்றச்சாட்டு; பதிலளிக்காது அரசு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை இலங்கை தொடர்பாக தெரிவிக்கும் அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் தாம் பதிலளிக்க முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது .

இலங்கையின் இறுதிக்கட்டப் போரின் போது பொதுமக்களின் சிறந்த பாதுகாப்புக்கு அழுத்தம் கொடுப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் ஐ.நா. மேற்கொண்டது.

இதற்காக ஐ.நா. முன்வைத்த யோசனைகளை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த


(19) ஆம் பக்கம் பார்க்க

08



அசத்தல்

11



175 கோடி ஆண்டுகள்

12



கண்காட்சி

## பொதுநலவாய மாநாடு கூட்டமைப்பு எதிர்ப்பு

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவர்கள் அமர்வுகளை இலங்கையில் நடாத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வு நடைபெறவுள்ளது. எனினும், இலங்கையில் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளை நடாத்துவதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்பதாக கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் பொதுநலவாய நாடுகள் கொள்கைகள் கோட்பாடுகளை மீறிச் செயற்

(19) ஆம் பக்கம் பார்க்க

## பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பாரா மன்மோகன்?

(புதுடில்லி)

இந்திய பிரதமர் மன்மோகன் சிங் எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்க மாட்டார் என இந்துஸ்தான் ரைம்ஸ் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை கருத்திற்கொண்டு பிரதமர் இந்தத் தீர்மானத்தை எடுக்க வேண்டியேற்படும் என அவ் ஊடகம் தெரிவித்துள்ளது.

தமிழக கட்சிகளுடன் கூட்டணி வைத்துக் கொள்வது நாடாளுமன்றத் தேர்தலில் முக்கியமானது, இவ்வாறு கூட்டணி வைத்துக்கொள்ள இலங்கை விஜயத்தை தவிர்க்க நேரிடும்.

தமிழகத்தின் முதலமைச்சர் ஜெயலலிதா மட்டுமன்றி, திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் கருணாநிதி மற்றும்

(19) ஆம் பக்கம் பார்க்க

# தீவக ஆசிரியர்களுக்கு இடமாற்றம் மாகாண கல்வி பணிப்பாளருக்கு சிபாரிசு

(யாழ்ப்பாணம்)

யாழ். தீவகக் கல்வி வலயத்திலிருந்து 83 ஆசிரியர்கள் இடமாற்றத்திற்காக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது. ஆசிரியர் இடமாற்ற சபையினாலேயே இவ்வாறு சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களின் ஆசிரியர்கள் இடமாற்றம் தொடர்பான சிபார்சுகளை அந்தந்த கல்வி வலயங்களில் அமைந்திருக்கும் ஆசிரியர் இடமாற்ற சபை, மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வருகின்றது.

அந்த வகையில், தீவகக் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் 166 ஆசிரியர்கள் இடமாற்றம் பெறுவதற்கான விண்ணப்பங்களை கல்வி வலய ஆசிரியர் இடமாற்ற சபைக்கு அனுப்பியிருந்தனர்.

கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட தீவகக் கல்வி வலய ஆசிரியர் இடமாற்ற சபை, யாழ். மாவட்ட வலயங்களிற்கிடையிலான இடமாற்றங்களில் மூன்று வருடங்கள் தீவகத்தில் சேவையாற்றிய 9 ஆசிரியர்களை பதிலாசிரியர் இல்லாமல் விடுவிப்பதாகவும், 69 ஆசிரியர்களை பதிலாசிரியர்களுடன் விடுவிப்பதாகவும் சிபார்சு செய்தது.

மேலும், வடமாகாண மாவட்டங்களுக்கிடையிலான இடமாற்றத்தில் ஒரு ஆசிரியரை பதிலாசிரியர் இல்லாமலும், இன்னுமொரு ஆசிரியரை பதிலாசிரியருடனும் விடுப்பதற்கும், மாகாணங்களுக்கிடையிலான இடமாற்றத்தில் ஒரு ஆசிரியரை பதிலாசிரியருடனும், இரண்டு ஆசிரியர்களை பதிலாசிரியர்கள் இல்லாமலும் இடமாற்றம் செய்வதற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

## வெள்ளைப் பிரம்பு தினம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் லயன்ஸ் கழகமும் வாழ்வகமும் இணைந்து நடத்தும் வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வு நாளை சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க முன்றலில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கூட்டுறவுச் சங்க முன்றலில் விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெறவுள்ளதுடன், தொடர்ந்து வாழ்வகத்தில் பொதுக்கூட்டம் இடம்பெறும்.

இப்பொதுக்கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக லயன்ஸ் கழக பிராந்தியத் தலைவர் லயன் மகாதேவா, லயன் சீமாட்டி மாதேவி மகாதேவா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## தீக்காயங்களுடன் குடும்பப் பெண்

தீக்காயங்களுடன் குடும்பப் பெண்ணொருவர் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கணுக்கேணி, முள்ளியவளையைச் சேர்ந்த திருமதி யோக மலர் (வயது - 35) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு தனக்குத்தானே தீ மூட்டிய நிலையில் தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாண்டில் இவ்வாறான தற்கொலைச் சம்பவங்களுடன் தற்கொலை முயற்சிகளும் அதிகரித்திருப்பதாக மாஞ்சோலை வைத்தியசாலை வைத்தியர்கள் தெரிவித்தனர். (125)


வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : சி. யாதுளா

முகவரி : வரணி, இயற்றாலை.

அகவை 3 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : சி. தாதுளன்

முகவரி : வரணி, இயற்றாலை.

அகவை 6 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : ம. அஸ்வின்

முகவரி : இல 432, பண்டிவெட்டி வீதி, ஜெயபுரம் தெற்கு.

அகவை 2 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்




# மாந்தை கிழக்கு மக்கள் அடிப்படை வசதியின்றி தவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 50 வீட்டுத்திட்ட கிராமத்தில் வசிக்கும் மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி தவிப்பதாக தெரிவிக்கின்றனர்.

மாந்தை கிழக்கில் அமைக்கப்பட்ட 50 இந்திய வீட்டுத்திட்டத்தில் கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் அதிகளவில் பாதிப்புக்களை எதிர்நோக்கியவர்கள் மற்றும் காணி அற்றவர்கள் என்ற அடிப்படையில் பயனாளிகளுக்கு வீடுகள் வழங்கப்பட்டிருந்தன.

எனினும், ஒரு வருடம் கடந்த நிலையிலும் கூட தற்போது இக்கிராமத்திற்கு சீரான வகையில் வீதிகள் திருத்தம் செய்யப்படாததனால் இம்மக்கள் போக்குவரத்துக்கு பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, பாடசாலை மாணவர்கள் போக்குவரத்து வசதிகள் இன்மையால் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் மழை காலங்களில் இவ்வீதியால் பாடசாலை செல்வதில் மிகவும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இக் கிராமத்திற்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படாமையின் காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளதுடன் இரவு நேரங்களில் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் கூறுகின்றனர்.

அத்துடன் காட்டு விலங்குகளின் நடமாட்டம் இப் பகுதியில் இருப்பதனால் தாம் இரவு நேரங்களில் நித்திரை வழித்து இருப்பதாகவும் தெரிவிக்கும் இம்மக்கள் குடிநீர்ப் பிரச்சினையையும் தாம் எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

இரண்டு பொதுக்கிணறுகள் அமைக்கப்படட போதிலும் இவை பயன்படுத்த முடியாத வகையில் காணப்படுவதாகவும் குழாய்க் கிணறுகள் சேதமடையும் நிலையில் இருப்பதாகவும் தெரிவிப்பதுடன் நீரைப்பெறுவதற்கு சில மைல் தூரம் செல்லவேண்டியுள்ளதாகவும் இது தொடர்பில் தாம் பிரதேச செயலகத்திற்கு அறிவித்தபோதிலும் எவரும் இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை எனவும் இம்மக்கள் தெரிவிப்பதுடன் இவ்வாறான காரணங்களால் சிலர் இக்கிராமத்தை விட்டு வெளியேறி வேறு இடங்களுக்கு செல்வதாகவும் இக்கிராம மக்கள் தெரிவித்தனர்.

## கேரளாக் கஞ்சாவுடன் பருத்தித்துறையில் ஒருவர் கைது

பருத்தித்துறை பகுதியில் கேரளா கஞ்சா போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் சனியன்று கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ ஊடகப் பேச்சாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 15 கிலோ, 346 கிராம் நிறைகொண்ட கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கல்விக் கண்காட்சி

(பருத்தித்துறை)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் கல்விக் கண்காட்சி இன்று காலை 9.00 மணிக்கு வடமராட்சி கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இரு நாட்கள் நடைபெறும் இக்கண்காட்சியை ஏனைய பாடசாலை மாணவர்களும் பார்வையிடும் வகையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (109)

## பழப்பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

பழப்பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நேற்றுக் காலை மன்னார் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. விவசாய விரிவாக்கல் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த நிகழ்ச்சித் திட்டத்தின்போது, புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாதுளம் கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.

முதற்கட்டமாக மன்னார், நானாட்டான், மடு, மாந்தை மேற்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட கிராமங்களில் தெரிவுசெய்யப்பட்ட 35 பயனாளிகளுக்கு மாதுளம் கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.தேசப்பிரிய, மன்னார் பிரதி விரிவாக்கல் விவசாயப் பணிப்பாளர் பி.அற்புதச்சந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.





சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி துர்க்காதேவி தேவஸ்தான மகிடாசூர சம்கார மானம்பூ திருவிழா நேற்று மாலை இடம்பெற்றது. சம்கார நிகழ்வின் காட்சிகள். (படங்கள்: ஆர். இராஜகுமார்)

# வங்கிகள் மூலம் பெற்ற கடனை செலுத்தாதவர்கள் மீது சட்டநடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வங்கி களின் மூலம் பெற்றுக்கொண்ட கடனை மீளச் செலுத்தாத பயனாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு வங்கிகள் தீர்மானித்து அதற்குரிய முன்னேற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக யாழ்மாவட்ட வங்கி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் செயற்படுகின்ற அரசாங்க வங்கிகள் மற்றும் தனியார் துறை வங்கிகளினூடாக விவசாயக் கடன், சிறுதொழில் முயற்சிக்கடன் என்பவற்றை நிபந்தனைகளுடன் குறைந்த வட்டியில் கடன்வசதியைப் பெற்ற வாடிக்கையாளர்கள் அதனை உரிய தவணையில் செலுத்தாது முரண்படுவதுடன் அக்கறை இல்லாத நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் வங்கிக் கடனை அறவீடு செய்வதற்கு வங்கிகள் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளன.

2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் அதற்குட்பட்ட கடனாளிகளை மத்தியஸ்தர் சபைகளுக்கு அழைத்து பொருத்தமான இணக்கப்பாட்டுடன் கடன்களை அறவீடு செய்வதற்கும் இத்தொகைக்கு மேற்பட்ட தவணை தப்பிய கடனாளிகளுக்கு சட்டத்தரணிகள் மூலம் விளக்கம் கோரி கடிதம் அனுப்புவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மத்தியஸ்தர் சபை இணக்கப்பாட்டை புறக்கணிக்கும் கடனாளிகள் மீது நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளதுடன் வழக்குத் தாக்குதல் தொடர்பான செலவு கடன் தொகையுடன் சேர்த்து அறவீடு செய்யப்பட எண்ணியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாசிப்பு மாதத்தை முன்னிட்டு போட்டிகள்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலி.தென்மேற்கு பிரதேச சபையினால் பாடசாலை மாணவர்களிடையே பொது அறிவு கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டியில் கட்டுரைப் போட்டி தரம் 5 முதல் 7 வரை கீழ் பிரிவாகவும், தரம் 8 முதல் 10 வரை மேற்பிரிவாகவும் இருபிரிவுக ளாக போட்டி இடம்பெறவுள்ளது.

கட்டுரைப் போட்டிக்குரிய தலைப்பாக சமுதாய முன்னேற்றத்தின் முக்கியத்துவம், விஞ்ஞான வளர்ச்சியால் சூழலில் ஏற்படும் தாக்கம் என இரு தலைப்புக்களின் கீழ் நடைபெறும்.

மேலும் பொது அறிவுப் போட்டி தரம் 11-13 வரை நடைபெறவுள்ளது.

# நவபுரம் வீதி புனர்மைப்புக்கு 2கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

(கைதடி)

கைதடி வடக்கு நவபுரம் வீதியில் 1 கிலோமீற்றர் தூரத்திற்கு முழுமையாகச் சேதமடைந்த வீதியைப் புனரமைக்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 2 கோடி 30 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

தற்போது இவ்வீதியை புனரமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வீதிப் புனரமைப்புக்கான கிரவல், கருங்கல், சல்லி பறிக்கும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகிறது.

சாவகச்சேரி பிரதேச பரி பாலனத்தின் கீழ்வரும் இந்த வீதி கடந்த 40 வருடத்திற்கு மேலாகப் புனரமைக்கப்படாத நிலையில் உள்ளது. பிரதேச அமைப்புக்கள் மிக நீண்ட காலமாக கொடுத்த மகஜரின் பேரில் இவ் வீதியின் புனரமைப்பு பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் வசிக்கும் சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினர் சங்கரன் தங்கராசா இதற்கான முயற்சியை மிக நீண்டகாலமாக எடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

கைதடி வடக்கிலிருந்து நவபுரம் ஊடாக மட்டுவில் பிரதேசத்தை இணைக்கும் 4 கிலோ மீற்றர் வீதியில் தற்போது 1 கிலோ மீற்றர் தூரம் மட்டுமே புனரமைக்கப்படுகிறது. (90)

# இருளில் மூழ்கியுள்ள வீதி அபாயத்தில் போக்குவரத்து

அச்சுவேலி-சந்நிதிவீதி கதிரிப்பாய் சந்திப்பகுதியில் வீதி மின் விளக்குகள் எவையும் பொருத்தப்படாமையினால் அந்தப் பகுதி முழுவதும் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றது.

இரவு வேளைகளில் இந்த வீதியினைப் பல தரப்பினரும் பயன்படுத்தி வருவதால் அவர்கள் பல்வேறு சிக்கல்களுக்கு முகம்கொடுப்பதுடன் விபத்துக்களும் ஏற்படும் அபாய நிலை உருவாகியுள்ளதாகவும் பயணிகள் தமது கவலையை வெளிப்படுத்தியுள்ளனர்.

மேலும் அதிகமாக இதனால் பாதிக்கப்படுபவர்கள் துவிச் சக்கர வண்டியில் பயணிப்போரே எனவும் பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, பயணிகளின் நன்மை கருதி மேற்படி வீதிக்கு மின் விளக்குகளைப் பொருத்தி உதவுமாறு பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (85)



டெங்கு ஒழிப்பு செயற்பாட்டின் ஒரு அங்கமாக பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை ஊழியர்கள் சபைச் சுற்றாடலை சிரமதானம் மூலம் துப்புரவு செய்வதைக் காணலாம். (140,130)

# அரசியலில் முழுமூச்சாய் இறங்கிவிட்ட மதகுருமார்!




'போகிறபோக்கைப் பார்த்தால் மன்னார் ஆயர் ராயப்பு ஜோசேப் முழுமையான ஒரு அரசியல்வாதியாகி விடுவார் போலிருக்கு' என்றார் நண்பர் ஒருவர்.

'அவர் எப்பவோ அரசியல்வாதியாகி விட்டாரே, அது உங்களுக்குத் தெரியாதா?' என்றார் இன்னொருவர்.

'மன்னார் ஆயர் மட்டுமல்ல, வடக்கில இருக்கிற அநேகமான கிறிஸ்தவ மத-குருமார் முழுநேர அல்லது பகுதிநேர அரசியல்வாதிகளாகத்தான் கனகாலகமாகத் தொழில் பாக்கினம். வெளிநாட்டு ராஜதந்திரிகள், தூதுவர்களே அவர்களைத்தானே தேடி வருகிறார்கள்' என்று விளக்கமளித்தார் அருகில் நின்ற மூன்றாவது ஆள்.

வடபகுதி பெரும்பாலான கிறிஸ்தவ மதகுருமாரைப் பற்றிய பரவலான பொதுமக்களின் அபிப்பிராயம் இப்படித்தான் உள்ளது. இதை யாரும் மறுக்கவும் முடியாது.

இதில் மன்னார் ஆயர் வணக்கத்துக்குரிய ராஜப்பு ஜோசப்புதான் முன்னிலை வகிக்கிறார்.

தமிழ்த்தேசியத்தின் பாதுகாவலராக, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முதன்மையான ஆலோசகராக, அந்த கட்சிக்குள் நடக்கின்ற போட்டிகள், குத்துவெட்டுகளில் சமாதானத் தூதராக, இடைத்தரகராக, தேர்தல் வியூகத்தை வகுக்கும் முக்கிய பிரதானியாக, பிரச்சாரகராக என அவர் வகிக்கின்ற பாத்திரங்கள் அதிகம்.

இதனால், அவர் ஏனைய அரசியல்தரப்புகளுடன் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கடுமையாக மோதியுமிருந்தார். குறிப்பாக அமைச்சர் றிஷாட் பதியுதீனுக்கும் மன்னார் ஆயருக்குமிடையில் நடந்த மோதல்கள் உலகறிந்தவை.

இந்த மோதல்களில் இரண்டு தரப்புக்குமிடையில் இருக்கின்ற பரஸ்பரம் லாபநட்டக் கணக்குகளே முக்கிய காரணங்களாகின.

இது பற்றி கடுமையான விமர்சனங்களும் உண்மைகளும் பலவிதமான உட்கதைகளும் உண்டு. காலம் ஒரு நாள் அவற்றை திறந்து காட்டும்.

இலங்கையில் வேறு மதத்தவர்களும் அரசியலில் ஈடுபடுகிறார்களே. அப்படியென்றால், கிறிஸ்தவ மதகுருக்கள் அரசியலில் ஈடுபடுவதை ஏன் தவறாகப் பார்க்க வேண்டும்? என்று நீங்கள் கேட்கக் கூடும்.

வெளிப்படையாகப் பார்த்தால் உங்கள் கேள்வி நியாயமானதே. ஆனால், மதகுருக்கள் மக்களை வழிப்படுத்த வேண்டியவர்கள். அதற்காகவே சமூகம் அவர்களுக்கு முன்னிலையான மதிப்பை வழங்கிக் கௌரவிக்கிறது.

அப்படி முன்னிலை மதிப்பைப் பெறுவோருக்கு அதிகமான பொறுப்புகளுண்டு.

பொதுவாக மதகுருமாரை எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் மதிப்பதுண்டு. உதாரணமாக, கிறிஸ்தவ மதகுருமாருக்கும் அருட்சகோதரிகளுக்கும் சைவ சமயத்தவர்களும் பெருமதிப்பளிப்பதுண்டு.

அதைப்போல பௌத்தத் துறவிகளை பிற சமயத்தைச் சேர்ந்தவர்களும் மதித்தனர்.

அவ்வாறே இஸ்லாமிய மௌலவிகளையும் பிற சமூகத்தினர் உயர்வாக மதித்தனர்.

ஆனால், இலங்கையின் இனவாத அரசியல் மக்களை மட்டுமல்ல, மதங்களையும் பிரித்து, தனித்தனிக் கூறுகளாக்கி விட்டன.

இனவாத அரசியலைத் தங்களின் நலனுக்காக கையில் தூக்கிய அரசியல்வாதிகள் மதகுருக்களையும் பயன்படுத்தத் தொடங்கினர்.

இதனால், அந்தந்த சமூகங்களைச் சேர்ந்த மதத்தலைவர்களும் மதகுருமாரும் தத்தம் சமூக நிலைப்பட்ட அரசியலுக்குள் சிக்கி அரசியலில் மூழ்கத் தொடங்கி விட்டனர்.

மதகுருக்கள் அரசியலில் ஈடுபடத்தொடங்க, அவர்கள் மீதான மதிப்பும் மெல்ல மெல்லக் குறையத் தொடங்கியது.

பேரினவாத ஒடுக்குமுறை மேலோங்கியபோது அதனைச் சார்ந்து சில பௌத்த துறவிகள் நின்ற காரணத்தினால், ஒட்டுமொத்தமாகவே பௌத்த துறவிகளின் மீதான மதிப்பு பிற சமூகங்களிடம் மங்கியது.

இப்பொழுது, அதை ஒத்த தன்மை தமிழ்த்தேசிய அரசியலுடன் நிற்கும் மதகுருமாரையும் சூழத் தொடங்கியுள்ளது.

குறிப்பாக தமிழ்த்தேசியக் கட்சிகளிட்த்திலும் தமிழ்த்தேசியக் கருத்தியலிலும் நீடித்த குறைபாடாக இருக்கும் ஜனநாயகமின்மை, பிற்போக்குக் குணாம்சம் போன்றவற்றைக் களையாமல், பேணிப் பாதுகாக்கும் மதத்தலைவர்களின் மீதான கேள்விகள் அதிகரிக்கத் தொடங்கி விட்டன.

அப்படி உள் முரண்பாடுகளுக்குத் தீர்வு காணாமல் பொத்திப் பொத்தி வைத்திருக்கவே மேலும் மேலும் முரண்பாடுகளும் உட்பகையும் பெருகிக் கொண்டிருக்கிறது.

இதனால்தான் வடமாகாணசபை வேட்பாளர் தெரிவு தொடக்கம் பதவியேற்பு நிகழ்வு, அமைச்சுப் பகிர்வு போன்றவற்றில் எல்லாம் இழுபறிகளும் முரண்பாடான அறிக்கைகளும் ஏட்டிக்குப் போட்டியான நிலைமைகளும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இப்படி உள்முரண்பாடுகள் முற்றி வெடிக்கும் நிலையில் குறிப்பிட்ட ஆண்டகையே தலையிட்டு சமரசம் - தரகு - செய்து வைக்கிறார். தற்போதும் முள்ளிவாய்க்காலில் பதவிப் பிரமாணம் செய்யவிருந்த மாகாணசபை உறுப்பினர்களை அந்தத் தீர்மானத்திலிருந்து விலக்கியிருக்கிறார். எனினும் ஆண்டகையின் கட்டளையிலிருந்து ஒரு ஆடு (சிவாஜிலிங்கம்) விலகிவிட்டது.

என்னதான் ராஜதந்திரமாக காய்களை நகர்த்தி,கிழிசல்களைக் கையால் மறைத்தாலும் தொடர்ந்து ஏற்படும் பொத்தல்களை அவரால் மறைக்கவே முடியாது.

வரலாறு எப்போதும் உண்மையையும் உண்மைக்காகத் தியாகம் செய்வதையுமே தன்னுடைய பதிவேட்டில் வைத்திருக்கிறது.

இந்த உலகத்தில் வேறு எவருடனும் நீ உன்னை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டாம். அவ்வாறு நீ செய்தால் நீ உன்னை அவமதித்துக் கொள்வதாகப் பொருள். - அன்னை திரேசா

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## சிறந்த வீரம் எது?

ஒரு குட்டிக்கதை.

தனது நாட்டு வீரர்களுள் சிறந்த வீரன் ஒருவனைத் தேர்ந்தெடுத்துப் பரிசளிக்க விரும்பினார், அரசர். அரசரும் அமைச்சரும் சிறந்த வீரனைக் கண்டறிய மாறுவேடத்தில் புறப்பட்டார்கள்.

ஓர் இடத்தில் நூறு சிலம்பாட்ட வீரர்களின் மத்தியில் ஒருவனாக நின்று கம்பைச் சுழற்றி வீசி அனைவரையும் அடித்து விரட்டினான் ஒரு சிலம்பாட்ட வீரன்.

"அரசே, இவன் வீரன்" என்றார் அமைச்சர்.

அரசர், ஆமாம் என்பது போலத் தலையசைத்துவிட்டு பயணத்தைத் தொடர்ந்தார்.

அடுத்து ஓர் இடத்தில், ஐம்பது வாள் வீரர்களைத் தனி ஒருவனாக நின்று வாட்போர் புரிந்து ஓடச் செய்தான், ஒரு வாள் வீரன்.

"ஊம்... இவனும் வீரன்தான்..." என்றார் அமைச்சர்.

"ஆமாம்... மேலும் பார்ப்போம்" என்றார் அரசர்.

வேறு ஓரிடத்தில் கோயில் யானை ஒன்று மதம் பிடித்து, பாகனைத் தூக்கி வீசிவிட்டு ஓடிவந்து கொண்டிருந்தது.

மக்கள் பயத்தால் அலறியடித்துக் கொண்டு ஓடிக்கொண்டிருந்தனர்.

அப்போது எங்கிருந்தோ வந்த ஓர் இளைஞன், மதம் பிடித்த அந்த யானையை அடக்கி, அதை ஒரு கம்பத்தில் கட்டி வைத்தான்.

"ஆகா! இவன் பெரும் வீரன்" என்றார் உற்சாகமாக அமைச்சர்.

அரசரும் தலையாட்டினார். பின்னர் இருவரும் அரண்மனையை நோக்கிச் செல்ல ஆரம்பித்தனர். அப்போது ஓர் இடத்தில் கூச்சல் கேட்டு, இருவரும் அங்கே சென்றனர்.

அங்கே, மக்கள் கூட்டத்தின் நடுவே ஓர் இளைஞனை அவனுக்கு எதிரில் நின்ற ஒருவர் கடுஞ்சொற்களால் திட்டிக் கொண்டிருந்தார். உலகிலுள்ள அத்தனை இழிவான சொற்களையும் கொண்டு அந்த இளைஞனைத் திட்டினார். அவ்வப்போது அவனை அடிக்கப் போவது போலக் கையையும் ஓங்கிக் கொண்டிருந்தார்.

ஆனால், அந்த இளைஞனோ, சற்றும் முகம் சுளிக்காமல் இதமான வார்த்தைகளால், உண்மை நிலையை அந்த மனிதருக்கு விளக்கிக் கொண்டிருந்தான்.

இறுதியில் உண்மையை உணர்ந்து அமைதியடைந்த அந்த மனிதர், "தம்பி, உண்மை அறியாமல் உன்னை ஏசிவிட்டேன். என்னை மன்னித்து விடு" என்று கூறிவிட்டுச் சென்றார்.

மறுநாள், அரசவையில் –

மன்னர் கையில் தங்கக்காசுகள் கொண்ட பரிசுக்குரிய பையை வைத்துக் கொண்டு தனது இருக்கையில் அமர்ந்திருந்தார்.

"அரசே, சிறந்த வீரனைத் தேர்ந்தெடுத்து விட்டீர்களா?" கேட்டார் அமைச்சர்.

"அதோ பாருங்கள்..." என்றார் மன்னர்.

அங்கே, அவர்கள் இறுதியாகப் பார்த்த அந்த இளைஞனை ஒரு காவலாளி அழைத்து வந்து கொண்டிருந்தான்.

வியப்புற்ற அமைச்சர், "அரசே, மத யானையை அடக்கிய இளைஞன் வீரன் இல்லையா?" என்று கேட்டார்.

"ம்... அவன் வீரன்தான். ஆனால் சினமுற்ற மனம், மதம் பிடித்த யானையை விடவும் கொடியது. எதிரில் நின்றவர் முகம் கடுத்து இழிச்சொற்களால் திட்டியபோதும் கூட கொதிப்படைந்த தன் மனத்தை அடக்கி, தன் முகம் கோணாமல் நிதானமாகப் பேசிய இளைஞனே சிறந்த வீரன்" என்று சொல்லி, அந்த இளைஞனுக்குப் பரிசை அளித்தார் மன்னர்.

நம்மைச் சினமூட்டும் எதிராளிக்கு எதிராக உணர்ச்சிகரமாகச் சவால்களை அடுக்கியபடி, பகையை வளர்த்து அந்த நெருப்பில் குளிர்காய்ந்து கொண்டிருப்பதில் வீரம் இல்லை. பகையை முடிக்கும் வழியைக் கண்டுகொண்டு, தான் சார்ந்தவர்களையும் சமூகத்தின் சரிவையும் தடுத்துக் காத்துக் கொள்வதிலேயே உண்மையான வீரம் இருக்கிறது.

– ஆசிரியர்

# இரண்டு அரசுகளை உருவாக்க சர்வதேச சக்திகள் முயற்சி

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டுக்குள் இரண்டு அரசாங்கங்களை உருவாக்கவே சர்வதேச சக்திகள் செயற்படுகின்றன. அரசாங்கத்தில் தீவிரவாதக் குழுவுக்கு கட்சி அந்தஸ்து கொடுத்தமையே இதற்குக் காரணம் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் முடிவடைந்த பின்னரும் வடக்கில் உள்ள புலிகள் அதரவு தீவிரவாதக் குழுவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கட்சி அந்தஸ்தைக் கொடுத்தமையின் விளைவாகவே இன்று அரசாங்கமும் நாடும் நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றன. சர்வதேச நாடுகளின் பேச்சைக் கேட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வட மாகாண சபைத் தேர்தலை நடத்தியமையே அரசாங்கம் செய்த முட்டாள் தனமாகும். இதை இன்று வரை அரசாங்கம் புரிந்து கொள்ளாதுள்ளமை வேடிக்கையாகவே உள்ளது.

பொதுநலவாய உச்சி மாநாட்டை நடத்துவதனால் இலங்கைக்கு எவ்வித நன்மைகளும் ஏற்படப் போவதில்லை.

இதில் கலந்து கொள்ளும் நாடுகளில் அதிகமான நாடுகள் இலங்கைக்கு எதிராகவே கருத்துத் தெரிவிக்கும். எனவே இம் மாநாடு தொடர்பில் கவலைப்பட்ட வேண்டிய அவசியம் இல்லை.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசாங்கமும் வடக்கு மக்களை வைத்தே காய் நகர்த்திக் கொண்டிருக்கின்றன. யுத்ததையும் உயிரிழப்புகளையும் காரணம் காட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மக்களை ஏமாற்றி வெற்றி பெற்றுள்ளது. அதே போல் சர்வதேச சக்தியின் உதவியுடன் வடக்கு, கிழக்கை இணைத்து தனி நாடாக்க விக்னேஸ்வரன், சம்பந்தன் போன்றோர் முயற்சித்தும் வருகின்றனர்.

இவ்வனைத்து பிரச்சினைகளையும் தூண்டி விட்டு நல்லவர்களாக கூட்டமைப்பினர் நாடகமாடுகின்றனர் என்றார்.

# அவுஸ்ரேலியாவுக்கு ஆட்கடத்தல்; தடுக்க கடற்படை விசேட திட்டம்

அவுஸ்ரேலியாவிற்கு சட்ட விரோதமான முறையில் ஆட்கடத்தலில் ஈடுபடுவோரை தடுப்பதற்கான விசேட திட்டமொன்றை கடற்படை ஆரம்பித்துள்ளது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்பு முழுவதையும் கண்காணிக்கும் வகையிலான படகு ரோந்து சேவைகளை ஆரம்பிக்கவுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

மீனவப் படகுகளின் உதவியுடன் அவுஸ்ரேலியாவிற்கு சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக வெளியான தகவல்களை அடுத்து, இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியா செல்ல முயற்சித்த சுமார் நான்காயிரத்துக்கும் அதிகமானோர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்ததாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்த ஆட்கடத்தலுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சிலர் குற்றப் புலனாய்வு பிரிவினரால் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மங்கள சமரவீரவை கைது செய்ய உத்தரவு

ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவை கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சட்டத்தரணியொருவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

மேலும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் செயலாளர் சுதத் சந்திரசேகர உள்ளிட்ட 11 பேரை கைது செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை பதவி விலகுமாறு கோரி மாத்தறையில் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இதற்கு எதிராக மங்கள சமரவீரவின் ஆதரவாளர்கள் மற்றுமொரு போராட்டத்தை நடத்தியிருந்தனர். ரணில் ஆதரவு, எதிர்ப்புக் குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் சிலர் காயமடைந்திருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகளின் போது மங்கள உள்ளிட்டோரை கைது செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆறுவழிப் பாதையாக களனிப்பாலம் புனரமைப்பு

(கொழும்பு)

கொழும்பு களனிப் பாலத்தில் வாகனங்களின் நெரிசல்களைக் குறைக்கும் நோக்கில் ஆறு வழிப்பாதைகள் கொண்ட புதிய பாலம் ஒன்றை அமைக்க பெருந் தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேகப் பாதை திறக்கப்பட்டதும் களனிப் பாலத்தில் வாகன நெரிசல் மிகவும் மோசமடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் காரணமாக ஜப்பான் அரசின் உதவியில் தற்போதுள்ள பாலத்துக்கு அருகில் கொழும்பு - கட்டுநாயக்க அதிவேகப் பாதைக்கு இணைந்ததாக ஆறு வழிப்பாதைகள் கொண்ட புதிய பாலம் ஒன்று அமைக்கப்படும்.

இந்தப் பாலம் அமைக்கப்படுவதனால் சுற்றுப்புற சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தொடர்பில் ஆய்வுகள் நடத்தப்பட்டு அந்த அறிக்கை பெருந் தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொது மக்களின் கருத்துக்களை அறியவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

# திருமலை மாணவர் படுகொலை; அதிரடிப்படையினருக்குப் பிணை

(கொழும்பு)

திருகோணமலையில் 2006 ஆம் ஆண்டில் ஐந்து மாணவர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக த்தின் பேரில் கைது செய்யப்பட்ட பொலிஸ் விசேட அதிரடிப் படையின் 12 அதிகாரிகள் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த யூலை 5 ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இவர்களின் பிணை மனு திருகோணமலை மேல்நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த 12 சந்தேகநபர்களையும் தலா 50,000 ரூபா ரொக்கப்பிணையிலும் தலா 200,000 ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையிலும் மேல் நீதிமன்ற நீதிபதி விடுதலை செய்தார். அத்துடன் வழக்கு விசாரணைகள் முடியும் வரை குறித்த சந்தேகநபர்களை கொழும்பிலுள்ள குற்றப் புலனாய்வு தலைமையகத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை உள்ள நேரத்தில் சென்று கையொப்ப மிடுமாறும் உத்தர விட்டார்.

பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்து காத்திருந்த 4 மாணவர்களும் மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றிருந்த மாணவர் ஒருவருமே 2006 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டமை தொடர்பான விசாரணை என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களித்த வாக்காளப் பொதுமக்களுக்கு நன்றி...

நடந்து முடிந்த வடமாகாண சபைத் தேர்தலில் அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களித்த வாக்காளப் பொது மக்களுக்கு புலம்பெயர்ந்து கனடாவில் உள்ள தமிழ் மக்களில் ஒரு பகுதியினரான என்போன்றவர்களின் வாழ்த்துக்கள். அதேநேரத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கு அவர்களுடைய இனவாதப் பேச்சை நம்பி வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும் எங்களுடைய அனுதாபங்கள். மீண்டும் நீங்கள் ஏமாந்து விட்டீர்கள். தங்களுக்கு வாக்களித்த மக்களுக்காகவாவது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தங்களுடைய வரட்டுப் பிடிவாதக் குணத்தைக் கைவிட்டு ஜனாதிபதியுடன் பேசி பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரட்டும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளராக போட்டியிட்ட திரு. விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை ஜனாதிபதியுடன் பேசித்தான் தீர்க்க வேண்டும் என்றும், தமிழ்நாட்டிலுள்ள அரசியல்வாதிகள் தேவையற்ற விதத்தில் எமது மக்களுடைய பிரச்சினைகளில் தலையிடுவதால் எமது மக்களை மேலும் மேலும் துன்பதுயரங்களில் ஆழ்த்த வேண்டாம் என்ற பொருள்பட ஒரு வெளிநாட்டு வானொலிப் பேட்டியொன்றில் கூறியிருந்தார். நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலும் பங்குபற்றுவதன் மூலம் அரசியல் தீர்வை ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட கால எல்லைக்குள் பெற்றுக்கொள்ள வழியேற்படும். அதை மறுத்து புலம்பெயர் தமிழ் மக்களில் ஒரு சிறு கூட்டத்தினர் கூறிவருகின்ற கூற்றுக்களை நம்பி எமது மக்களை மீண்டும் ஏமாற்ற நினைப்பது புத்திசாலித்தனமல்ல.

கடந்த 30 ஆண்டுகளாக இனவாதம் பேசி, யுத்தத்தில் ஈடுபட்டவர்களால் எமது மக்களின் தொழில் வளங்களாகக் கருதப்பட்ட விவசாயம், கடற்தொழில் மற்றும் சிறு கைத்தொழில்கள் என்பவற்றுடன் போக்குவரத்து, மின்சாரம் என்பனவும் முற்றாக அழித்தொழிக்கப்பட்ட நிலையில் சுடுகாடாகக் காட்சியளித்த எமது பிரதேசம், 2009 ஆம் ஆண்டு இக்கொடிய யுத்தம் முடிவுக்கு வந்தபின் கடந்த நான்கு ஆண்டுகளில் பல அபிவிருத்தி வேலைகள் நடந்து முடிந்துள்ளதை - நடைபெற்று வருவதை யாரும் மறந்து விடமுடியாது. இதை விளங்கிய மக்கள் அரசாங்கத்திற்கு ஆதரவாக 80,000 இற்கும் மேலான வாக்குகளைக் கொடுத்திருக்கிறார்கள்.

இதில் ஒன்றை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும் அதாவது நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சி தேர்தல் - தற்பொழுது மாகாண சபைத் தேர்தல் இவைகளை உற்றுநோக்கும்பொழுது, இந்தத் தேர்தல்கள் நடைபெறுவதற்கு இரண்டு வாரங்களுக்குள் ஏதாவது பொய்யானதும் மக்கள் இலகுவில் உணர்ச்சிவசப்படக்கூடிய மிகையான அதுவும் குறிப்பாக இராணுவத்தைக் குறிப்பிட்டு பரப்பப்படுகின்ற வதந்திகளால் மக்களைத் திசைமாற்றி வாக்குகளைப் பெற்றுக்கொள்வது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரின் தந்திரோபாயமாகும். அதைத்தான் இந்தத் தேர்தலிலும் கையாண்டிருப்பது எங்களுக்குத் தெரிந்தது.

இதற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் வெற்றிப்பெருமிதம் கொள்ள வேண்டிய தேவையில்லை. காரணம் உங்களுக்குப் பின்னால் உங்களை நம்பி தங்களுடைய பொன்னான வாக்குகளைக் கொடுத்து ஏமாற்றத்துடன் பார்த்துக்கொண்டு நிற்கும் இந்த மக்களுக்கு இந்த மாகாணசபை மூலம் நீங்கள் என்ன செய்யப்போகின்றீர்கள்? என்பதை வைத்துத்தான் வெற்றியைக் கொண்டாடவேண்டும்.

ஆனால், புலம்பெயர்ந்து கனடாவிலுள்ள அரசு ஆதரவாளர்கள் என்ற சொற்பதத்திற்குள் உள்ள என்போன்றவர்களின் பிரசாரங்களின் மூலம் இந்தத் தேர்தலில் அரசாங்கத்திற்கு ஆதரவாக மக்கள் 82,838 வாக்குகளைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த வாக்குகள் அரசாங்கம் எமது பிரதேசத்தில் செய்து வருகின்ற அபிவிருத்தி வேலைகளில் முழு நம்பிக்கை கொண்டவர்களின் வாக்குகள். இந்த மக்களின் நம்பிக்கை வீண்போகாவண்ணம் அரசாங்கம் இதுவரை செய்து வருகின்ற அபிவிருத்திப் பணிகளை தொடரவேண்டும் என்பதே புலம்பெயர்ந்து கனடாவிலுள்ள தமிழ் மக்களில் ஒரு பிரிவினரான என்போன்றவர்களின் எண்ணமாகும்.

**– எஸ்.வீரசிங்கம்**
ஸ்காபரே - கனடா.



## அமெரிக்க நெருக்கடியால் நமக்கு என்ன?

### நியூயோர்க் டைம்ஸ் கட்டுரையிலிருந்து

**“அமெரிக்க** அரசுக்கு நெருக்கடி”, “கடன்வரம்பை உயர்த்துவதில் முட்டுக் கட்டை”, “சிக்கலைத் தீர்ப்பதில் முழுத் தோல்வி” என்றெல்லாம் உலகம் முழுக்கப் பத்திரிகைகள் அமெரிக்க அரசுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல் குறித்துச் செய்திகளை வெளியிடுகின்றன.

அமெரிக்க அரசு அலுவலகங்கள்தானே மூடப்பட்டிருக்கின்றன? மற்ற நாடுகளுக்கு அதனால் என்ன பாதிப்பு? “முழுத் தோல்வி” அல்லது “பெரும் கேடு”என்று வர்ணிக்கக் கூடிய வகையில் இப்போது என்ன நடந்துவிட்டது?




2011இல் இதே போல அரசின் கடன்பெறும் வரம்பை உயர்த்த குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் மறுத்த போதும் பத்திரிகைகள் இப்படித்தான் அலறின. அந்தத் தலைப்புகளால் பீதியடைந்து அரசில் இருப்போர் பணிந்தனர், நிபந்தனை விதித்தவர்கள் வெற்றிக்களிப்பில் மிதந்தனர். இப்போதும் “கடன்பெறும் வரம்பை மேலும் உயர்த்த வேண்டும்” என்பதுதான் ஜனாதிபதியின்கோரிக்கை. ஆனால், இப்போது கடன் பத்திரங்களுக்கான பணத்தை உரிய காலத்தில் திருப்பித்தர முடியாமல் அரசாங்கம் தடுமாற வேண்டும் என்றே குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் விரும்புகிறார்கள்.

அமெரிக்க அரசின் கடன் பெறும் வரம்பை உயர்த்த முடியாமல் தோல்வி ஏற்படுமானால், அமெரிக்க பெடரல் அரசு முடங்குவதைவிட வேறு விதமான விபரீதங்களை ஏற்படுத்திவிடும். அதனால் ஏற்படும் வலியைத் தாங்கவே முடியாது. குடியரசுக் கட்சியினர் எதிர்பார்ப்பதைப்போல அரசின் அளவு சுருங்காது, அதன் சொத்துகள் குறையாது, ஆனால் அதன் நாணயம், நம்பகத்தன்மை சுருங்கிவிடும். “தான் வெளியிட்ட கடன் பத்திரத்துக்கு உரிய பணத்தைத் திருப்பித்தர தவறியநாடு” என்ற அவப்பெயர் அமெரிக்காவுக்கு ஏற்படும்.

“அமெரிக்க அரசு வெளியிடும் கடன் பத்திரம் செல்லுமா செல்லாதா என்று யாரும் கேள்வி கேட்கக்கூடாது” என்ற அரசியல் சட்டத்தில்14ஆவது திருத்தம் செய்யப்பட்டது. இப்போது இருப்பதைப் போன்ற நிலைமை அமெரிக்காவுக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகச் சேர்க்கப்பட்டதுதான் அது.

இப்போது என்ன நடக்கிறது? நாடாளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களில் ஒரு சிறு குழு, இந்தக் கடன் வரம்பு உயர்வு கோரிக்கையை ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தப்பார்க்கிறது. தான் விரும்பும் நிபந்தனையை ஏற்காவிட்டால் அரசின் செலவு அனுமதி கோரிக்கைக்கே ஒப்புதல் தர முடியாது என்கிறது. உலகத்திலேயே எந்தஆபத்துக்கும் உள்ளாகாத ஒரு நிதி முதலீடு இருக்கிறது என்றால் அது அமெரிக்க அரசின் கடன் பத்திரங்கள்தான். அது உலகின் பெரும்பாலான நாடுகளின் நிதி ஆதாரத்தை இழுத்துக்கட்டியிருக்கும் சூத்திரக் கயிறாகும். அமெரிக்கக் கடன் பத்திரங்களுக்கு எப்போதுமே தேவை இருந்துகொண்டே இருக்கிறது.

இந்த நிலையில், கடன்பத்திரம் முதிர்வுற்ற பிறகும் உரிய பணம் கைக்கு வரவில்லை என்றால், அதன் மீதான நம்பகத்தன்மை குலையும். தொடர் விளைவாக மற்ற எல்லாவகைசொத்துகளையும் மதிப்பிழக்க வைக்கும். பங்குச் சந்தையில் புள்ளிகள் சரிந்து பெரிய வீழ்ச்சி ஏற்படும். வங்கிகள் தரும் கடன்கள் மீதான வட்டி வீதம் அதிகரிக்கும். அடமானக் கடன்களுக்கான வட்டி வீதம் கடுமையாக உயரும். இப்போது அதிகரித்துவரும் வீடமைப்புத் திட்டங்களை இத்தகைய வட்டி உயர்வு சீர்குலைத்துவிடும். வட்டி வீதம் உயர்ந்தால் அரசுத்துறை, தான் வாங்கிய கடன்களுக்கான வட்டியையே உயர்த்தித் தர நேரிடும்.

அதனால், அமெரிக்க அரசின் நீண்ட காலக் கடன் சுமை அதிகரிக்கும். குடியரசுக் கட்சியைச் சேர்ந்த எதிர்ப்பாளர்கள் இந்த நீண்டகாலக் கடன்களைக் குறைப்பதைத்தான் முக்கிய அம்சமாக வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்கள்! அவர்களுடைய கோரிக்கைக்கு எதிரான செயலை அவர்களே செய்துவருகின்றனர்!

அமெரிக்க அரசின் கடன் பத்திரங்களை வாங்கி வைத்திருப்பவர்கள், அதை உரிய காலத்தில் டொலர்களாக மாற்ற முடியாதோ என்று சந்தேகப்பட்டால், கிடைத்த விலைக்கு விற்க முற்படுவார்கள். அது பெரிய சிக்கலில் தான் கொண்டுபோய்விடும். அரசுக் கடன் பத்திரங்களே வேண்டாம் என்று ஒதுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். நிலைமை இப்படியே போனால் கடுமையான முடிவுகளை எடுத்தே தீர வேண்டும்.

“யாருக்குமுதலில் கடன் தொகையைத் திருப்பிக் கொடுப்பது, யாருக்கு பிறகு கொடுப்பது என்பதை முடிவு செய்ய முடியவில்லை” என்று அரசு கருவூலத்துறை இப்போதே சொல்கிறது. கடன் பத்திரங்களுக்குப் பணத்தைத் திருப்பித்தர முடியாத நிலைமை அரசுக்கு ஏற்பட்டால்,யாருக்கு முதலில் பணத்தைத் திருப்பித் தர வேண்டும், யாரைக் காத்திருக்கச் சொல்லலாம் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம்கூட அதனிடமிருந்து போய்விடும்.

அமெரிக்காவில் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழான பயனாளிகளுக்குப் பணம் கிடைப்பதற்கு முன்னால், சீனத்தில் உள்ள கடன் பத்திர முதலீட்டாளர்களுக்குப் பணம் தந்தாக வேண்டிய நிலைமை அரசுக்கு ஏற்படலாம். இப்படிச் சொல்வதன் மூலம் அமெரிக்கர்களுக்குக் கோபம் ஏற்படலாம். அமெரிக்காவில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வரும் பயனாளிகளுக்குப் பணம் தராமல் இருப்பதைவிட, கடன் பத்திரங்களை வாங்கி வைத்திருப்பவர்களுக்குப் பணத்தைத் திருப்பித் தராததே பெரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

[தி இந்து]

# தமிழ் மக்களின் கருத்துக்கே சர்வதேசம் முன்னுரிமை



## நவசமசமாஜ கட்சித்தலைவர்

அரசாங்கம் மோசமாக செயற்படுகின்றது என்பதை சர்வதேசம் உணர்ந்து விட்டது. அரசாங்கத்தை விடவும் தமிழ் மக்களின் கருத்துக்கே முன்னுரிமை கொடுக்கின்றமையானது ஜனாதி பதிக்குக் கிடைத்த மிகப்பெரிய தோல்வியே என்று நவசமசமாஜ கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கம் செய்த யுத்த குற்றங்களை தமிழ் மக்கள் உணர்ந்ததனாலேயே வடக்கிலிருந்து அரசாங்கத்தை விரட்டியுள்ளனர்.

இதை அரசாங்கம் நல்ல தொரு பாடமாக எடுத்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் முக்கிய சர்வதேச நாடுகள் சில கலந்து கொள்ளாமையும் சர்வதேச நாடுகளிடமிருந்து நிதியுதவிகள் தடுக்கப்பட்டுள்ளமையும் இலங்கைக்கு பாரிய சிக்கலாகவே அமைந்துள்ளது.

குறிப்பாக இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட யுத்தக் குற்றங்களே இதற்கு முக்கிய காரணமாக அமைந்து விட்டன.

ஐக்கிய நாடுகள் சபையினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை நடைமுறைப் படுத்தாமைக்கான பின்விளைவுகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் தற்போது அனுபவித்து வருகின்றது.

இன்று சர்வதேச நாடுகள் இலங்கை அரசாங்கத்தை விடவும் தமிழரின் குரலுக்கே முன்னுரிமை கொடுக்கின்றன.

குறிப்பாக இந்தியா, கனடா போன்ற நாடுகள் தமிழர்களின் நலனையே கருத்திற் கொண்டு செயற்படுகின்றன.

உலகில் எந்த நாட்டிலும் இல்லாத ஒரு விடயம் இலங்கையில் இடம்பெறுகின்றதென்றே குறிப்பிடவேண்டும்.

அதாவது அரசாங்கத்திடம் கேட்காது சிறுபான்மை மக்களிடம் அனுமதி கேட்கும் நிலைமை இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ளது. இது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மிகப் பெரிய தொரு தோல்வியாகும்.

எல்லாவற்றுக்குமான இறுதி முடிவை அரசாங்கம் பொது நலவாய மாநாட்டின் பின்னர் பெற்றுக் கொள்ளும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆளுமை மிக்க ஊழியரை உருவாக்கும் திட்டம்




அறிவை விருத்திசெய்யும் வகையிலும், தனது விநியோக வலையமைப்பை மெருகேற்றும் நோக்குடனும், இதன் மூலம் வாடிக்கையாளர்களின் தேவைகளை மையமாகக்கொண்ட ஓர் ஆடை அலங்கார தொடரை ஏற்படுத்தும் வகையில் பஷன் பக், இலங்கையின் முன்னணி பயிற்சி நிறுவனமான விநியோக மற்றும் பொருட்கள் முகாமைத்துவ கல்வியகத்துடன் கைகோர்த்துள்ளது.

செயற்பாடுகள் மற்றும் விற்பனைப்பிரிவின் உதவி பொதுமுகாமையாளர் கலாநிதி ஃபராஸ் ஹமீட் கருத்து தெரிவிக்கையில், "எமது நிறுவனம் முன்னணி கல்வியகங்களுடன் கொள்கை அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்த உடன்படிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. இதன் மூலம் எமது ஊழியர்களுக்கு புதிய நிர்வாக ஆளுமைகளையும் நுட்பங்களையும் வழங்கக்கூடியதாக இருக்கும். விநியோக மற்றும் பொருட்கள் முகாமைத்துவ கல்வியகத்துடன் நாம் கைகோர்த்துள்ளமையையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். தொடர்ச்சியான தொடர்பாடல்களின் ஊடாக எமது வாடிக்கையாளர்களுக்கு மேலும் சிறந்த சேவைகளை வழங்கக்கூடிய ஊழியர்சேவை குழுவை கட்டியெழுப்ப எண்ணியுள்ளோம் என்றார்.

# 34 பேருக்கு மீண்டும் விளக்கமறியல்


(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை பொறுப்பிலிருந்து ரணில் விக்ரமசிங்கவை விலகக் கோரி, மாத்தறையில் முன்னெடுக்கப்பட்ட பேரணியின் மீது தாக்குதல் மேற்கொண்டதாக சந்தேகிக்கப்படும் 34 பேரும், எதிர்வரும் 21ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.இந்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த 34 சந்தேகநபர்களில் இருவர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படாத நிலையில், ஏனைய சந்தேகநபர்கள் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர்.சந்தேகநபர்களை எதிர்வரும் 21ஆம் திகதி மீண்டும் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு மாத்தறை பிரதம நீதவான் ருவன் சிசிர குமார உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கு ஹக்கீம் முயற்சி

## குற்றஞ்சாட்டுகிறார் விமல்வீரவன்ச



(கொழும்பு)


வடக்கு கிழக்கு மாகாணங்களை மீள இணைப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் முயற்சிப்பதாக வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டத்திற்கு மேலதிகமான அதிகாரங்களை பெற்றுத் தருமாறு அண்மையில் இலங்கை விஜயம் செய்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் ஹக்கீம் கோரியதாக ஊடகங்களில் தகவல் வெளியாகியிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதேவிதமான கொள்கைகளை பின்பற்றி வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து கிழக்கு மாகாண ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற முஸ்லிம் காங்கிரஸ் முயற்சிக்கின்றது. ஆட்சியை கைப்பற்றி வடக்கு மாகாணசபையுடன் கிழக்கை இணைக்க திட்டமிட்டுள்ளது. இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இனவாத கொள்கைகளுக்கு நிகரானது. நாட்டின் உள்விவகாரப் பிரச்சினைக்கு உள்நாட்டு ரீதியான தீர்வுகளை எட்ட வேண்டும். சர்வதேச சமூகத்தின் தலையீடு அவசியமற்றது.

மக்களின் ஆணைக்கு புறம்பாக சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகளினால் மாற்றங்களை செய்ய முடியாது. இந்த விடயத்தை பிரபாகரனும், ரணிலும் முயற்சித்து தோல்வியைத் தழுவியிருந்தனர். பிறசக்திகளின் ஒத்துழைப்பு மூலம் தமது நோக்கங்களை அடைய முடியும் என்ற நம்பிக்கை பிழையானது. தமிழ் பிரிவினைவாத கொள்கைகளை முஸ்லிம் மக்கள் மீது திணிப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்றார்.

# றிஸானாவின் குடும்பத்திற்கு புதிய வீடு கையளிப்பு




(கொழும்பு)

சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்ட மூதூர் றிஸானா நபீக்கின் குடும்பத்தினருக்காக நிர்மாணிக்கப்பட்ட வீடு நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இந்த வீடு கையளிக்கும் நிகழ்வில் இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் தயா ரத்நாயக்க, மேஜர் ஜெனரல் லால் பெரேரா, கேணல் விகும் லியனகே, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் கலாநிதி ரி.என்.எல்.கருணாரத்ன, சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மெதகொட அபே திஸ்ஸ தேரர், வர்த்தக பொருளாதாரத் துறைத் தலைவர் கலாநிதி அநுர குமார உதுமான்கே உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

சகல இன மதத்தலைவர்களும் இந்த வீட்டின் திறப்பு நிகழ்லில் கலந்து கொண்டதுடன். வீட்டுக்கு நல்லாசி வேண்டி பிரார்த்தித்தனர். ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக சமூகம் மற்றும் இலங்கை இராணுவம் ஆகியன இணைந்து இந்த வீட்டினை நிர்மாணித்தமை குறிப்பிடத்தக்கது

# முற்றியது காணிப்பிரச்சினை சகோதரனை குத்திக்கொன்ற சகோதரி



காணிப் பிரச்சினை காரணமாக தனது சகோதரியின் கத்திக் குத்துக்கு இலக்கான சகோதரர் உயிரிழந்த சம்பவமொன்று கந்தான பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

கந்தான - பண்டிகொட பகுதியில் இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். 42 வயதுடைய ஜயக்கொடி ஆராச்சிகே என்பரே உயிரிழந்துள்ளார். குறித்த நபரின் தாய், தந்தை மற்றும் சகோதரி ஆகியோர் பண்டிகொட - அல்கேனவத்த பகுதியில் வசித்து வந்துள்ளனர். அதேபகுதியில் தான் ஜயக்கொடி ஆராச்சிகேவும் வசித்து வந்துள்ளார்.

இவர்களுக்கிடையில் நீண்ட நாட்களாக காணிப் பிரச்சினை நிலவிவந்துள்ளது. இந்நிலையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட வாய் தர்க்கத்தின் போது சகோதரி தனது சகோதரனை கத்தியால் குத்திக்கொலை செய்துள்ளார்.

சந்தேகநபரான பெண் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் நேற்று நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளார். கந்தான பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



முல்லைத்தீவு விசுவமடு மகாவித்தியாலயத்தின் வரலாற்று ஆவணமாகிய விசுவநாதம் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு அண்மையில் வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், கிளிநொச்சி கல்வி வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் சு.ஸ்ரீகுமரன் உரையாற்றுவதையும். முல்லை கல்வி வலய தமிழ்த்துறை உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.பீதாம்பரம் நூலாசிரியரை கௌரவிப்பதையும் காணலாம். (90)

# சகல மாவட்ட கூட்டுறவு சபைகளின் உத்தியோகத்தர்களுக்கு காப்புறுதி வசதி

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய கூட்டுறவு சபையால் கூட்டுறவு காப்புறுதி கம்பனியூடாக நாட்டின் சகல மாவட்ட கூட்டுறவு சபைகளின் உத்தியோகத்தர்களுக்கும் காப்புறுதி வசதி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய கூட்டுறவு சபையின் தற்போதைய தலைவர் டபிள்யூ லலித் ஏ. பீரிஸின் முன்மொழிதலுக்கமைய தலைவர் நிதியத்தின் ஒதுக்கீடுகளில் இருந்து இக்காப்புறுதிக்கு நிதி வழங்கப்படுவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதன்படி இச்சபையின் 2013 யூன் மாதம் 30ஆம் திகதி தெரிவுசெய்யப்பட்ட மதிப்பார்ந்த பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கு அமைய கூட்டுறவு காப்புறுதி நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து நாட்டின் அனைத்து மாவட்டக் கூட்டுறவுச் சபைகளினதும் உத்தியோகத்தர்களுக்கும் திடீர் விபத்து காப்புறுதி செய்யப்பட்டு அதற்கான பத்திரம் உரிய உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் ஊழியர்களுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்த வசதிகளின் கீழ் நாட்டின் அபிவிருத்திக்கும் தத்தமது பிரதேசங்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்ற கூட்டுறவுச் சபைகளின் உத்தியோகத்தர்களுக்கும் இவ்வாறான காப்புறுதிச் காப்பீடுகளை வழங்குவதற்கு கிடைத்த சந்தர்ப்பம் தொடர்பில் பெரிதும் மகிழ்ச்சியடைவதாக தலைவர் தெரிவித்துள்ளார்.

# தேசிய சேமிப்பு வங்கியினால் மாணவர்களுக்கான சித்திரப்போட்டி

(யாழ்ப்பாணம்)

தேசிய சேமிப்பு வங்கியினால் சிக்கனத்தின் மூலம் நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்ற தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்களுக்கான சித்திரப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இதன்படி 12 வயதுக்கு கீழ் கனிஸ்ட பிரிவாகவும் இதற்குரிய தலைப்பாக 'சேமிக்கும் குடும்பம்' மற்றும் 12 முதல் 18 வயது வரை சிரேஸ்ட பிரிவாகவும் இதற்குரிய தலைப்பாக சேமிப்பின் மூலம் நாட்டைக் கட்டியெழுப்புவோம் போன்ற தலைப்புக்களின் கீழ் சித்திரம் வரையப்படவேண்டும். சித்திரம் A-3 அளவிலான கடதாசியில் நீர்ச்சாயம், வர்ண பென்சில்கள் ,கிரேயோன் போன்ற எந்தவொரு சாதனத்தின் மூலமும் வரையமுடியும். மாணவர்கள் ஆக்கங்களை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்பாக சிக்கன சித்திரப்போட்டி சந்தைப் படுத்தல் பிரிவு, தேசிய சேமிப்பு வங்கி,இல 255, காலிவீதி கொழும்பு-3 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மாணவர்கள் தமது ஆக்கங்களின் பின்புறத்தில் போட்டியாளரின் பெயர் ,பாடசாலை, வயது, போட்டியிடும் பிரிவு. முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன் அதிபரின் உறுதிப் படுத்தல் கட்டாயமாகும். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதி முடிவாகும். இப்போட்டியில் முதல் மூன்று இடங்களுக்கும் முறையே 50ஆயிரம், 30ஆயிரம் ,20 ஆயிரம் ரூபாவும் ,5 ஆயிரம் ரூபா பெறுமதியான 7 ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

# கௌரி விரத பூசை

(அச்சுவேலி)

அச்சுவேலி வளலாய் ஸ்ரீ பத்திரகாளி கோவிலில் கேதார கௌரி விரத பூசைகள் நேற்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தினமும் காலை 8.30 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி நடைபெறுவதால் விரதத்தை அனுட்டிக்கும் அனைவரும் இப்பூசை வழிபாடுகளில் பங்கு பற்றி காளியின் அருளைப் பெறுமாறு கேட்டு கொள்ளப்படுகின்றனர். (85)

# "மாணவர் ஆரோக்கிய மேம்பாடு" நூல் வெளியீட்டு விழா

(வேலணை)

உளவள ஆலோசகரும் இளைப்பாறிய பொதுச் சுகாதார போதனாசிரியருமான கா.வைத்தீஸ்வரன் எழுதிய 'மாணவர் ஆரோக்கிய மேம்பாடு' நூலினது வெளியீட்டு விழா எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 4.30 மணியளவில் இணுவில் அறிவாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

லயன் அ.குகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த விழாவில் முதன்மை விருந்தினர்களாக செஞ்சொற்செல்வன் ஆறுதிருமுருகன் சைவபுலவர் சங்கத்தின் தலைவர் மு. திருஞான சம்பந்தபிள்ளை ஆகியோர்கள் கலந்து கொள்கின்றனர்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாம கல்விப் பணிப்பாளர் எஸ். சந்திரராசா சட்டத்தரணி சோ. தேவராசா இணுவில் மத்திய கல்லூரி அதிபர் சிவநேசன், சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை ஆகியோர்களும் கலந்து கொள்கின்றார்கள்.

நூலின் வெளியீட்டு உரையினை பி. கனகசபாபதி ஜே.பியும் நூலின் விமர்சன உரையினை யா. பரமேஸ்வர இந்து வித்தியாலய அதிபரும் வலம்புரி பத்திரிகையில் ஆசிரியருமான நா. விஜயசுந்தரம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளார்கள். (05)

# போட்டிகள்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலய விசேட கல்விப் பிரிவினால் விசேட தேவையுடையோர் தினத்தை முன்னிட்டு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இப்போட்டிகள் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் இணுவில் இந்துக் கல்லூரியில் தனி இசை, தனிநடனம், குழு இசை நாடகப்போட்டிகள் என்பன நடைபெறவுள்ளன.

# சொற்பொழிவு

(யாழப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச்சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப்பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் தேவிபாகவதம் என்னும் விடயம் பற்றி வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

# முரசின் இன்றைய பலன்

(15.10.2013 செவ்வாய்க்கிழமை)




விஜய வருஷம் புரட்டாதி மாதம் 28 ஆம் திகதி.
ஏகாதசி-திதி சதயம்-நட்சத்திரம் பி.இ 4.05 பின் பூரட்டாதி
மரணயோகம்,கரிநாள்
இராகுகாலம 03.02- 04.32 வரை. சுபநேரம 10.32- 12.02 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | கொடுத்த வாக்கை காப்பாற்றத்தவறியதால் பிணக்கு உருவாதல், இனிப்பைக் குறைத்ததினால் சலரோகத்தின் தாக்கம் குறைவடைதல். |
| ரிஷபம் | நிரந்தர நியமனம் வழங்கக் கோரி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபடல், காணாமல் போனவர் பற்றிய தகவல் நிஜமானதில் மகிழ்ச்சி. |
| மிதுனம் | இனந்தெரியாத நபரின் தொலைபேசி மூலம் விடுத்த எச்சரிக்கையால் அச்சம், மனநலப்பாதிப்பினால் உள வள சிகிச்சை பெற நாட்டம் கொள்ளல். |
| கடகம் | மருத்துவப்பரிசீலனை செய்யப்பட்ட பழவம் பெறாமையினால் எச்சரிக்கை செய்யப்படல், மீட்கப்படாத நகைகள் ஏலம் விடும் செய்தி கேட்டு கவலையடைதல். |
| சிம்மம் | தீ வைப்பினால் வேலி எரிந்து நாசமாகும் அபாய மேற்படல், சட்டவிரோத ஆட்கடத்தல் காரர்களின் ஆசை வார்த்தைகளை நம்பியதால் பணவரவு. |
| கன்னி | சமரசமுயற்சியினால் பகிஷ்கரிப்பு கைவிடல், குறைபாட்டினைச் சுட்டிக்காட்டியதால் திருந்திக் கொள்ளல். |
| துலாம் | விடாமுயற்சியினால் பணியைச் திறம்படமுடிப்பதால் பாராட்டு, குறைவான பொருளைப் பெற்றதால் வாக்குக்கலகம். |
| விருச்சிகம் | விஷப்பிராணிகளின் கெடுதல் ஏற்படும் அபாயமுண்டு, துணைவி இல்லறம் சிறக்க பங்களிப்பை நல்குதல். |
| தனுசு | சட்ட விரோத மின்சாரம் பெற்றதால் தண்டம், தோல் சம்பந்தப்பட்ட உபாதையினால் வருந்துதல். |
| மகரம் | முழுக்கவனத்தையும் செலுத்தியதால் காரிய சித்தி, விற்பனையை அதிகரிக்க விளம்பரம் செய்யும் எண்ணப்பாங்கு. |
| கும்பம் | காரியம் பெற இனிக்கப் பேசுவோர் பற்றி கவனம் நன்று, பதவி உயர்வு கிட்ட சிபார்சு செய்யப்படல் |
| மீனம் | சகோதரர்மத்தியில் சொத்துப் பங்கீட்டுப்பிரச்சினை இழுபடல், திடீரென உதயமாகும் நண்பரின் எச்சரிக்கை நன்று. |

# புதியவர்களை உருவாக்குவதில் கிரிக்கெட் சபையின் செயற்பாடு மந்தம்



(புதுடில்லி)

புதியவர்களை உருவாக்குவதில் இலங்கை கிரிக்கெட் சபையின் செயற்பாடு திருப்தியளிக்கவில்லை. அதன் நடவடிக்கை மந்தமாகவே உள்ளதென இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

புதுபுல்லியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கும் போதே அர்ஜுன ரணதுங்க இவ்வாறு குறிப்பிட்டார்.

தங்களுடைய காலத்தில் தாங்கள் கற்றுக்கொள்ளும்போது இந்தியாவைப் பார்த்து, அதனிடமிருந்து கற்றுக்கொள்வது ஒரு பகுதியாகக் காணப்பட்டதாகக் குறிப்பிட்ட அர்ஜுன ரணதுங்க, ஆனால் இனிமேல் இந்தியாவிடமிருந்து கற்றுக்கொள்ள முடியுமென நினைக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

இளைய வீரர்கள் பலர் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளை நிதி நலன்களுக்காக விளையாட விரும்புவது துரதிஷ்ட வசமானது எனக் குறிப்பிட்ட அர்ஜுன ரணதுங்க, இந்தியாவால் இனிமேல் சச்சின் டெண்டுல்கரையோ, சுனில் கவாஸ்கரையோ உருவாக்க முடியாது என்பது நிச்சயமானது எனக் குறிப்பிட்டார்.

சிரேஷ்ட வீரர்களான மஹேல ஜெயவர்தன, குமார் சங்கக்கார ஓய்வுபெற்ற பின்னர் அதை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாக இலங்கை அணி தயார் நிலையில் இல்லை எனக் குறிப்பிட்ட அவர், ஆனால் தற்போதைய பிரதம தேர்வாளரான சனத் ஜெயசூரிய நீண்ட கால நோக்கில் செயற்படுவதாகக் குறிப்பிட்டார். தங்களுடைய அணியின் வீரர்கள் வயதாகிக் கொண்டிருந்தபோது சனத் ஜெயசூரியவை உப தலைவராக்கியதாகவும் மார்வன் அத்தப்பத்து, ஆர்னல்ட் போன்ற வீரர்களுக்கு தொடர்ந்து வாய்ப்பு வழங்கப்பட்டிருந்ததாகவும் அர்ஜுன இங்கு குறிப்பிட்டார்.

## தென்னாபிரிக்க இரசிகர்கள் கவலை

(டர்பன்)

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கரின் ஓய்வு முடிவுக்கு தென்னாபிரிக்க இரசிகர்கள் ஏமாற்றம் தெரிவித்துள்ளனர்.

200ஆவது டெஸ்டுடன் ஓய்வு பெறவதாக சச்சின் அறிவித்துள்ளார். தென்னாபிரிக்கவுடனான டெஸ்ட் தொடரில் சச்சின் விளையாடுவார் என அந்த நாட்டு இரசிகர்கள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் அவரது திடீர் ஓய்வு முடிவால் அந்த நாட்டு இரசிகர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

இது குறித்து தென்னாபிரிக்காவிலுள்ள டர்பன் நகரைச் சேர்ந்த சச்சின் ரசிகர் அனில் ஹர்கோவன் கூறியதாவது: சச்சின் ஓய்வு முடிவால் நாங்கள் மிகவும் ஏமாற்றமடைந்துள்ளோம். தென்னாப்பிரிக்காவுடன் அவர் டெஸ்ட் விளையாடும்போது நாங்கள் அவரது ஆட்டத்தைப் பார்க்க ஆவலாக இருந்தோம். ஆனால் அது நடைபெறாது என தெரிந்ததால் ஏமாற்றமடைந்துள்ளோம்.

சச்சினுக்கு தென்னாபிரிக்காவில் ஆயிரக்கணக்கான இரசிகர்கள் இருக்கின்றனர். எங்கள் குடும்பத்தில் 11 பேர் இருக்கிறோம். இந்திய அணி டர்பனிலிலுள்ள கிங்ஸ்மீட் மைதானத்தில் விளையாடும் போதெல்லாம் ஒரு போட்டியைக் கூட நாங்கள் தவறவிட்டதில்லை. இந்திய அணியை ஆதரித்து மைதானத்தில் உற்சாகக் குரல் எழுப்புவோம்.

மற்ற அணிகளுடன் தென்னாபிரிக்க அணி விளையாடும் போது, தென்னாபிரிக்க அணி வீரர்களை உற்சாகமூட்டுவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தென்னாபிரிக்க ஊடகங்களும் கவலை தெரிவித்துள்ளதுடன் சச்சின் ஓய்வு குறித்த செய்திகளை, கட்டுரைகள் போன்றவற்றை அதிகம் பிரசுரித்து வருகின்றன.

இதில் சச்சின் போன்ற வீரர்கள் எதிர்வரும் காலங்களில் உருவாக முடியாதளவிற்கு தற்போதைய கிரிக்கெட் உருவாக்கியுள்ளது. அதாவது ருவென்ரி-20 கிரிக்கெட்டின் வரவு அதனை ஏற்படுத்தி விட்டது எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஜோகோவிச் அசத்தல்

(ஷாங்காய்)

ஷாங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவில், சேர்பியாவின் நோவக் ஜோகோவிச் மீண்டும் சம்பியன் பட்டம் வென்றார்.

சீனாவில் உள்ள ஷாங்காய் நகரில், மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடர் இடம்பெற்றது. இதன் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், சேர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஆர்ஜென்ரீனாவின் ஜுயன் மார்டின் டெல் போட்ரோ மோதினர்.

முதல் செட்டை ஜோகோவிச் 6-1 என மிகச் சுலபமாக கைப்பற்றினார். பின் எழுச்சி கண்ட டெல் போட்ரோ, 2ஆவது செட்டை 6-3 என தன்வசப்படுத்தி பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட் டை-பிரேக்கர் வரை சென்றது. இதில் அசத்தலாக ஆடிய ஜோகோவிச் 7-6 என வென்றார்.

முடிவில், ஜோகோவிச் 6-1, 3-6. 7-6 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று, தொடர்ந்து இரண்டாவது முறையாக (2012, 13) சம்பியன் பட்டத்தை கைப் பற்றினார்.

# பொறுப்பற்ற ஆட்டத்தால் தோல்வி



பந்துவீச்சு, துடுப்பாட்டம் என அனைத்து வழியிலும்சிறப்பான முறையில் செயற்படத் தவறியமையே தோல்விக்குக் காரணம் என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்துள்ளார். அவுஸ்ரேலிய அணிக்கெதிராக நேற்று முன்தினம் புனேயில் நடைபெற்ற முதலாவது ஒரு நாள் போட்டியில் தோல்வி குறித்து கருத்துத் வெளியிடுகையிலேயே டோனி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், புனே ஆடுகளம் 300 ஓட்டங்களுக்கும் மேல் எடுக்கும் அளவுக்கு இல்லை. நாங்கள் தான் அவுஸ்ரேலிய துடுப்பாட்ட வீரர்கள் அதிக ஓட்டங்கள் எடுக்க விட்டுவிட்டோம். இடையில், எங்களது சுழற்பந்து வீச்சாளர் சிறப்பாக செயற்பட்டு மீண்டு வர முயற்சித்தனர். ஜடேஜா, யுவராஜ் சிங் நன்கு பந்து வீசினர். இருப்பினும், தொடர்ந்து அவர்களுக்கு நெருக்கடி கொடுக்க முடியவில்லை. துடுப்பாட்டத்தில் ரோகித் சர்மா, ஹோலி இணைந்து சிறந்த அடித்தளத்தை அமைத்தனர். ஆனால், நடுவரிசையில் வந்த வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றமளித்துவிட்டனர்.

மற்றபடி, தோல்விக்கு யாரையும் குறிப்பாக, குற்றம் சொல்ல விரும்பவில்லை. பந்துவீச்சு, துடுப்பாட்டம் என, எதுவுமே சரியாக அமையவில்லை. துடுப்பாட்ட வீரர்கள் சரியான திட்டமிடல் இல்லாமல், பொறுப்பற்ற முறையில் அடித்து விளையாடினர். அதேநேரம், ஷொட் பிட்ச் பந்துகளில் பலவீனம் எல்லாம் கிடையாது. சமீபத்திய சம்பியன்ஸ் கிண்ணம், மேற்கிந்தியத்தீவுகள் மண்ணில் இவ்வகை பந்துவீச்சை சிறப்பாக எதிர்கொண்டோம். அடுத்து வரும் போட்டிகளில் இதுபோன்ற தவறு நடக்காத வகையில் பார்த்துக் கொள்வோம்.

வழக்கமாக நான்காவது இடத்தில் யுவராஜ் சிங் தான் களமிறங்குவார். இந்த இடத்துக்கு இவரைத் தவிர பொருத்தமானவர் யாரும் கிடையாது. எதிர்வரும் உலக கோப்பை 2015 தொடரை முன்னிட்டு, ரெய்னாவுக்கு பயிற்சி கொடுக்கும் வகையில் தான் இவரை முன்னதாக அனுப்பினோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜொலித்தது மகிழ்ச்சி

(டாக்கா)

துடுப்பாட்டம், பந்து வீச்சு என இரண்டு துறையிலும் ஜொலித்தது மகிழ்ச்சி அளிக்கிறது என பாங்கதேஷ் அணியின் ஹாஜி தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்துடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் ஆட்டநாயகன் விருது வென்ற பின் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நியூசிலாந்து அணிக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியில் சதம் வென்றது மகிழ்ச்சி. அத்துடன் பந்து வீச்சில் ஹட்ரிக் உட்பட ஆறு விக்கெட்டுக்களைச் சாய்த்தது இரட்டிப்பு மகிழ்ச்சி. அணியின் வெற்றிக்காக உழைப்பதே எனது நோக்கம்.

அணியில் உள்ள வரை என்னாலான பங்களிப்பை முழுமையாக வழங்குவேன். அடுத்த டெஸ்ட் போட்டியிலும் சிறப்பாகச் செயற்பட்டு டெஸ்ட் தொடரைக் கைபற்றிக் கொள்ள முயற்சிப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## துடுப்பாடுகிறது தென்னாபிரிக்கா


(அபுதாபி)

பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி துடுப்பாடி வருகின்றது.

தென்னாபிரிக்க, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் போட்டித் தொடரின் முதல் ஆட்டம் நேற்று அபுதாபியில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் தென்னாபிரிக்க அணி ஆரம்பத்தில் தடுமாறியது. குறிப்பாக, ஒரு முனையில் விக்கெட்டுக்கள் விரைவாகச் சாய்க்கப்பட்டது. இருப்பினும் மறுமுனையில் அம்லா பொறுமையாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்து வருகின்றது. இறுதியில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, தென்னாபிரிக்க அணி முதல் இனிங்ஸிற்காக நான்கு விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் அம்லா 71, டுமினி 36 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுள்ளனர். மற்றும் டிவில்லியர்ஸ் 19 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மொகமட் இர்பான் இரண்டு விக்கெட்டுக்களைச் சாய்த்தார். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

இதேவேளை, இப்போட்டித் தொடரை தென்னாபிரிக்க அணி கைப்பற்றிக் கொள்ளும் பட்சத்தில் தரப்படுத்தலில் நான்காவது இடத்திற்கு முன்னேறும் வாய்ப்பு உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மைலோ விருது வென்ற யாழ். வீரர்கள்



(கொழும்பு)

யாழ். மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த நால்வர் மைலோ வர்ண விருது வென்று அசத்தியுள்ளனர்.

கல்வி அமைச்சும், இலங்கை பாடசாலைகள் விளையாட்டுப் பேரவையும் இணைந்து நெஸ்லே லங்கா லிமிட்டட் நிறுவனத்தின் அனுசரணையுடன் 20ஆவது மைலோ பாடசாலைகள் விருது வழங்கும் விழா கடந்த மாதம் 21ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 2012ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டிகளில் பதக்கங்களை வென்று சாதனை படைத்த 528 வீர,வீராங்கனைகளுக்கு வர்ண விருதுகள் வழங்கப்பட்டன.

இதில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி வீரர்கள் அ. பவித்திரா, பா. லுவணன் ஆகியோரக்கு 2012இல் நடந்த ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியின் கோலூன்றிப் பாய்தலில் பங்கேற்று பதக்கம் வென்றமைக்காக இவ்விருது வழங்கப்பட்டது. இவர்கள் இருவரும் அகில இலங்கைப் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் கனிஷ்ட, சிரேஷ்டன பிரிவுகளில் பங்கேற்றுப் பதக்கங்களை வென்றதுடன் சேர். ஜோன் ராபர்ட் மெய்வல்லுநர் போட்டியிலும் பங்கேற்று பதக்கங்களை வென்றுள்ளனர்.

இதேவேளை, யாழ். இந்துக் கல்லூரியின் ஆர். செந்தூரன் உயரம் பாய்தலிலும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் ஆர். நிமலேந்திரா குண்டு எறிதல் போட்டியிலும் பதக்கங்களை வென்றமைக்காக மைலோ வர்ண விருதுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மைலோ விருது வென்ற நான்கு யாழ். மாவட்ட பாடசாலை வீர, வீராங்கனைகளுக்கும் பாடசாலைச் சமூகம், உயர் அதிகாரிகள், அதிபர்கள், நலன்விரும்பிகள், ஆர்வலர்கள் எனப்பலரும் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர்.

# வென்றது யங்கம்பன்ஸ்

(நெல்லியடி)

பிரியதர்சன், குகரதன் ஆகியோரின் தூக்குதல் ஆட்டத்தின் மூலம் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி வெற்றிபெற்றது.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணைடன் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான நட்சத்திர கால்பந்தாட்டப் போட்டி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தி நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போட்டி ஒன்றில். கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியும், நெடியகாடு இளைஞர் அணியும் மோதின.

இதில் கம்பர்பலை யங்கம்பன்ஸ் அணி ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தியது. குறிப்பாக, குகர்தன், பிரியதர்சன் ஆகியோர் தாக்குதல் ஆட்டத்தை வெளிப்படுத்தி அணிக்கு கோல்களைப் பெற்றுக் கொடுத்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் நெடியகாடு இளைஞர் அணியின் முயற்சிகள் அனைத்தும் தோல்வியிலேயே நிறைவுற்றது. இறுதியில் யங்கம்பன்ஸ் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

போட்டிகள் தொடர்ந்தும் மாலை வேளைகளில் இடம்பெற்று வருவதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இப்போட்டியில் கிண்ணம் வெல்லும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

விளையாட்டு செய்திகள்

# கொக்குவில் இந்துவில்

## மெய்வல்லுநர் கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலர் சங்கத்தால் புதிதாக நியமிக்கப்பட்ட உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் ஏனைய ஆசிரியர்களுக்கான மெய்வல்லுநர் கற்கை நெறி எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கற்கை நெறியில் மெய்வல்லுநர் போட்டி விதிகள், தொழில்நுட்பங்கள், மத்தியஸ்தம் வகித்தல், மெய்வன்மைக்கான மைதானத்தைத் தயார்ப்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக விளக்கங்கள் அளிக்கப்படவுள்ளன.

காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணி வரை நடைபெறும் இக்கற்கை நெறி தொடர்ந்து இரு தினங்களில் இடம்பெறவுள்ளன. இதில் பங்குபற்ற விரும்பும் ஆசிரியர்கள் விண்ணப்பப்படிவங்களை யாழ். மாவட்ட மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர் சங்கத் தலைவர் மா. இளம்பிறையிடம் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறி முடிவில் பங்குபற்றுபவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும் எனவும், மெய்வல்லுநர் தரம் 4இற்கான பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களும் இதில் கலந்துகொள்ள முடிவும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மெய்வல்லுநர் போட்டிகளில் அனுபவம் வாய்ந்த வளவாளர்கள் இக்கற்கை நெறியில் கலந்து கொண்டு விளக்கமளிக்கவுள்ளதால் சம்பந்தப்பட்ட, துறை சார்ந்த அனைவரையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறும் யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தைச் சேர்ந்தோர் கேட்டுள்ளனர்.

# கிண்ணம் மானிப்பாய் இந்து வசம்



(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஜெயரத்திணம் வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் கிண்ணத்தை மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி கைப்பற்றிக் கொண்டது.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியினால் நடாத்தப்பட்ட அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான இக்கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்றது.

இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி அணியும் மோதின. இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் தமது ஆட்டத் திறனை வெளிக்காட்டின. மாறி மாறி பந்து கட்டுப்பாட்டில் வைத்திருந்த இரு அணிகளும் கோல் கம்பத்திற்கு போவதும் வருவதுமாக இருந்தது. இருப்பினும் எதிரணியை திகைப்பட வைக்கும் வகையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சிறப்பானதொரு கோலைப் போட்டுக் கொண்டதுடன் முன்னிலையும் பெற்றது. இதனைத் தொடர்ந்து இரு அணிகளும் வேகப்பெற்று. ஆடியபோதும் மேலதிகமான கோலைப் போட்டுக்கொள்ள முடியவில்லை. இறுதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும், இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும் மோதின. இதில் இரு அணிகளின் வலுவான பிற்கள வீரர்களின் தடையைத் தாண்டிச் செல்ல முடியவில்லை. இறுதி வரை வெற்றிக்காக மல்லுக்காட்டிய இரு அணிகளாலும் கோல் எதனையும் போட்டுக்கொள்ள முடியவில்லை. இறுதி யில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் ஹென்றியரசர் கல்லூரி அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

இப்போட்டி நிகழ்வில் கல்விச் சமூகத்தைச் சேர்ந்த அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், இரசிர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தமை குறிப்பிடத் தக்கது.

(93)

# நாடாளுமன்ற தெரிவுக்குழு: ஓரடி முன்னும் ஈரடி பின்னும்!

– சாலையூரான் –



இனப்பிரச்சினை தீர்வுக்கான பிந்திய அறிவிப்பாக பிரச்சினைகளை பேச வேண்டுமாயின் அனைத்துக்கட்சிகளின் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்துகொண்டு விடயங்களை ஆராய தமிழ் கூட்டமைப்புக்கு அரசாங்கம் அழைப்பு விடுத்திருக்கிறது.

இதற்கு வெளியே பிரச்சினைகளை பேசுவதில் பலனில்லை என்கிற தோரணையிலும் அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. பதிலுக்கு தமிழ் கூட்டமைப்பும் தேர்தல்கள் முடிவடைந்த கையோடு இந்த தெரிவுக்குழு வில் கலந்துகொண்டு பிரச்சினைகளை முன்வைப்பதற்கு தனது சம்மதத்தை தெரிவித்தது.

கொழும்பு வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தும் அரசியல் பிரச்சினைகளை பேசித்தான் தீர்க்க வேண்டும் என்பதை தமிழ் கூட்டமைப்புக்கு அழுத்தியிருப்பதுடன் ஜனாதிபதிமுன் விக்னேஸ்வரனின் சத்தியப்பிரமாணத்துக்கு தனது வரவேற்பையும் வெளியிட்டிருக்கிறார்.

தெரிவுக்குழுவில் பங்கேற்பதற்கு தமிழ் கூட்டமைப்புக்கு அரசாங்கம் ஏற்கனவே பல தடவைகள் அழைப்பு விடுத்திருந்த போதும் இந்த தெரிவுக்குழு மூலம் பலனெதுவும் கிட்டப்போவதில்லை எனக்கூறி இதை கூட்டமைப்பு நிராகரித்திருந்தமை பலரும் அறிந்த விடயம். இப்போது வடமாகாண சபை தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றிருக்கும் நிலையில் இந்த அனைத்துக் கட்சிகளின் தெரிவுக்குழுவில் பிரசன்னத்துக்கு தமிழ் கூட்டமைப்பு இணங்கியது.

அதேசமயம், தேர்தல் முடிவுகளை அடுத்து வடக்கு மாகாண சபைக்கான நிர்வாகத்தை வழி நடத்திச்செல்வதில் அரசுடன் நெகிழ்வுப்போக்கை கொண்டிருக்க முதலமைச்சர் விக்னேஸ்வரன் விரும்புவதாக தெரிகிறது.

ஆனால் தென்னிலங்கை இனவாத சக்திகள் வெளிப்படுத்தும் நிலைமைகள் நெருக்கடியாகவே தென்படுகின்றன. 13ஆவது திருத்தத்துக்கு மேலும் வலுச்சேர்க்கவென அமைச்சர் ஹக்கீம் இந்திய வெளியுறவு அமைச்சருக்கு பரிந்துரை செய்தமைக்காக பிரபாகரன், ரணில் ஆகியோருக்கு ஏற்பட்ட தலைவிதியே அமைச்சர் ஹக்கீமுக்கும் ஏற்படுமென விமல் வீரவன்ச கூறியிருப்பது ஒரு செய்தியாகும்.

இதனை விட முதலமைச்சர் சத்தியப்பிரமாணத்தை அடுத்து பதில் நடவடிக்கையாக வடமாகாணத்தின் 12 கல்வி வலயங்களது கணக்காளர்கள், பதில் கணக்காளர்கள் திறைசேரியின் உத்தரவுக்கமைய வடமாகாண சபையின் பிரதம செயலாளரால் இடமாற்றப்பட்டு அந்த இடத்துக்கு சிங்கள கணக்காளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

முதலமைச்சர் தனது கடமைகளை பொறுப்பேற்பதற்கு ஒரு நாள் கால அவகாசம் இருக்கும் நிலையில் இது குறித்து முதலமைச்சருக்கு எதுவும் அறிவிக்காமலேயே இந்த இடமாற்றங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறான சம்பவங்கள் சுமுகமான ஒரு நிர்வாகத்தை கொண்டு செல்வதில் வடக்கும் தெற்கும் இணக்கமான போக்கை கொண்டிருப்பதில் சிரமங்களை உண்டாக்கும்.

இந்த சம்பவங்களின் எதிரொலியாக இப்போது தெரிவுக்குழுவில் பங்கேற்றால் மாத்திரமே இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணலாம் என்ற ஜனாதிபதியின் அறிவிப்பு நடைமுறைக்கு சாத்தியமற்றதென தமிழ் கூட்டமைப்பு புது டில்லிக்கு அறிவித்திருக்கிறது. எனவே இது விடயத்தில் இந்தியா மாற்றத்தை கொண்டுவரவேண்டுமெனவும் தமிழ் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

தெரிவுக் குழுவில் கலந்து கொள்ளத் தீர்மானித்த சிலநாட்கள் இடைவெளியிலேயே அதை மறுதலிக்கவும் தமிழ் கூட்டமைப்புக்கு நேர்ந்துவிட்டது தமிழ்மக்களின் துரதிர்ஷ்டமே. மறுபக்கத்தில் அரசமைப்புக்கான 13ஆவது திருத்த விவகாரத்தில் இந்தியத் தலையீட்டை ஏற்க முடியாதென ஹெலஉறுமயவும் தனது பங்குக்கு காட்டமாக அறிக்கை வெளியிட்டிருக்கிறது. மாகாண சபைக்கான அதிகாரத்தில் புதுடில்லி தலையிட்டால் ஆயுதம் ஏந்துவோம் என பொதுபலசேனாவும் எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

நாட்டில் முறுகல் நிலையைப் பேணவிரும்புபவர்களின் செயற்பாடுகள் ஓய்வதாக இல்லை என்பதையே இது காட்டுகிறது. இது ஒரு வகையில் கோமாளிக் கூத்துக்களாகவே ஆகிவருகின்றன. மாகாண சபையின் முதலாவது அமர்வுக்கு முன்பதாகவே நிலமைகள் இந்தளவுக்கு எதிரும் புதிருமாக மாறுவது துர்ப்பாக்கியமே. தமிழ்க் கூட்டமைப்பின் உள்ளேயும் முதலமைச்சருக்கு அனுசரணையாக நிலைமைகள் இல்லை என்பதையே மாகாண அமைச்சரவை அறிவிப்பின் பின்னான மோதல் அறிக்கைகள் உணர்த்துகின்றன.

இலங்கையில் தமிழர்களின் வாழ்க்கைப்பயணம் கல், முள் நிறைந்த கரடு முரடான பாதையாகவே தொடரப்போகிறதா என்ற அச்சமே மீந்திருக்கிறது.


# நமக்குத் தேவை டான் பிரவுன்கள்

– ஜெயமோகன் –

சுந்தர ராமசாமியின் "ஜே.ஜே: சில குறிப்புகள்" 1981-ல் வெளிவந்தது. வணிக எழுத்துக்கு எதிரான சாட்டைச் சொடுக்கல்களால் ஆனது "ஜே.ஜே: சில குறிப்புகள்". ஆச்சரியம் என்னவென்றால், இந்த நேரடியான தாக்குதல் காரணமாகவே "ஜே.ஜே: சில குறிப்புகள்" அந்த வணிகக் கேளிக்கை எழுத்து வட்டாரத்தில் பிரபலமானது. விளைவாக தமிழில் அன்று வரை எந்த ஒரு தீவிர இலக்கியப் படைப்புக்கும் கிடைக்காத பரவலான வாசிப்பு அதற்குக் கிடைத்தது.







அன்றைய வாசிப்புச் சூழலை விவரித்தால்தான் இது புரியும். நவீன தமிழிலக்கியம் புதுமைப்பித்தன் கால கட்டத்தில் தீவிரமான வீச்சுடன் ஆரம்பித்தது. ஆனால், விரைவிலேயே அந்த அலை அணைந்தது. கல்கி பெருவாரியான வாசகர்களை ஈர்த்து ஒரு புதிய அலையைத் தொடங்கிவைத்தார். எளிமையான மொழியில் மனக்கிளர்ச்சியூட்டும் எழுத்து முறை தமிழில் வேரூன்றியது. அந்த வகை எழுத்து ஒரு வெற்றிகரமான வணிகமாக இருக்க முடியும் என நிரூபணமாகியது.

தமிழின் முக்கியமான வார இதழ்கள் உருவாகிவந்த காலகட்டம் அது. தொடர்கதை என்ற வடிவம் லட்சக் கணக்கானவர்களைச் சென்றடைந்தது. அகிலன், ஆர்.வி., எல்.ஆர்.வி. என்று ஓர் எழுத்தாளர் வரிசையே இருந்தது. அவர்களையே இலக்கியவாதிகளாக அன்றைய வாசகர்கள் மட்டுமல்ல; கல்வித் துறையினர்கூட நம்பினார்கள். விருதுகளும் அங்கீகாரங்களும் அவர்களுக்கே சென்றன.

அன்று தமிழில் உலகின் எந்த மொழியிலும் எழுதிய இலக்கிய மேதைகளுக்கு நிகரான படைப்பாளிகள் உருவாகியிருந்தனர். லா.ச.ரா., கு.அழகிரிசாமி, ப.சிங்காரம், சுந்தர ராமசாமி, தி.ஜானகிராமன், அசோகமித்திரன் போன்றவர்களின் மகத்தான படைப்புகள் அப்போதுதான் வந்தன. அவை வாசகர்களைச் சென்றடையவே அன்று வழியில்லை. சில நூறு பிரதிகள் அச்சிடப்பட்ட சிற்றிதழ்களில் அவர்கள் எழுதினார்கள்.

அவர்களின் நூல்கள் ஐந்நூறு பிரதிகள் விற்க பத்து வருடங்களாயின. புகழ் இல்லை, பணம் இல்லை. எவ்வகையிலும் மரியாதை இல்லை. வாசகர்கள் இருக்கிறார்களா என்றே தெரியவில்லை. ஆனாலும், புயல் காற்றில் தீபத்தைக் கையால் பொத்திக்கொண்டு செல்வதுபோல அவர்கள் இலக்கியத்தை முன்னெடுத்தார்கள். மனைவியின் நகைகளை விற்றுச் சிற்றிதழ் நடத்தினார்கள். அவர்களுடைய எழுத்துகள் மட்டும்தான் காலம் கடந்து இன்றும் வாசிக்கப்படுகின்றன.

1990களில் திடீரென்று ஒரு மாற்றம் நிகழ்ந்தது. ஒன்று, தொலைக்காட்சி மிகப் பெரிய கேளிக்கை ஊடகமாக மலர்ச்சி அடைந்தது. அதுவரை தொடர்கதை வாசித்துக்கொண்டிருந்தவர்கள் எல்லாம் தொலைக்காட்சித் தொடர்கள் பார்க்க ஆரம்பித்தனர். வாசிப்பு ஒரு கேளிக்கையாக இல்லாமல் ஆகியது.

அந்தக் காலி இடத்தில் ஒரு சிறு பகுதியை இலக்கியம் நிரப்ப ஆரம்பித்தது. "தினமணி", "இந்தியா டுடே", "சுபமங்களா" போன்ற இதழ்கள் நல்ல இலக்கியத்தை மக்களிடையே கொண்டு சேர்த்தன. அத்துடன் அன்று ஒப்செட் அச்சகங்கள் பெருகின. கணிப்பொறித் தொழில்நுட்பத்தில் நூல் தயாரிப்பு எளிமையாக ஆனது. ஏராளமான பதிப்பகங்கள் வந்தன. இணையம் வந்தபோது நூல்களைப் பற்றிய தகவல்கள் மக்களிடம் சென்றுசேர்வதும் எளிதாகியது. இன்று எல்லா இலக்கியவாதிகளின் படைப்புகளும் மறுஅச்சாகிக் கிடைக்கின்றன. இலக்கிய வாசிப்பு பல மடங்கு வளர்ந்துள்ளது. க.நா.சு-வும் சுந்தர ராமசாமியும் கனவு கண்டது நிகழ்ந்துள்ளது.

ஆனால், இதற்கு ஒரு மறுபக்கம் உள்ளது என இப்போது படுகிறது. இன்று இலக்கியம் வாசிப்பவர்கள் சிறுவர்களாக இருந்தபோது அன்று புகழுடன் இருந்த வணிக எழுத்துகளை வாசித்து வாசிப்புப் பழக்கத்தை அடைந்தவர்கள். அந்த வாசிப்பு வழியாக முதிர்ந்து அவர்கள் தீவிர இலக்கியம் நோக்கி வருகிறார்கள். அதுவே இயல்பான பாதை. ஆனால், இன்றுள்ள இளைய தலைமுறைக்கு அந்தப் பாதை இருக்கிறதா?

தீவிர இலக்கியம்தான் ஒரு ஆரோக்கியமான பண்பாட்டின் வளர்ச்சிக்கு உதவக்கூடியது என்பதில் ஐயமே இல்லை. வாழ்க்கையை நுட்பமாக அணுகவும் அதை வரலாற்றில் வைத்துப் புரிந்துகொள்ளவும் உதவக்கூடியவை இலக்கியப் படைப்புகளே. ஆனால், அவை வாசிக்கும் பயிற்சி கொண்டவர்களுக்கு உரியவை. வாசிக்கும் பயிற்சியை அளிப்பதற்கு எளிமையான, விறுவிறுப்பான புனைகதைகள் தேவை.

இன்று அத்தகைய வணிகக் கேளிக்கை எழுத்து அநேகமாக அழிந்துவிட்டது. சென்ற தலைமுறையில் சுஜாதா, பாலகுமாரன், இந்துமதி, வாசந்தி, சிவசங்கரி போன்ற நட்சத்திர அந்தஸ்து கொண்ட வணிகக் கேளிக்கை எழுத்தாளர்கள் இருந்தனர். அவர்கள் வாசகர்களைக் கவர்ந்து வாசிப்புக்குள் கொண்டுவந்தனர். அவர்களின் வாசகர்களில் ஒரு சாரார் பின்னர் இலக்கிய வாசகர்களாக

# கம்பனின் ரீமேக்!



**வா**ல்மீகி ராமாயணத்தை, ஒரு பெரியவர் சொல்லிக் கொண்டிருந்தார். ஊர்க்காரர்கள், கீழே உட்கார்ந்து, ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தனர். கம்பர், ஒரு ஓரத்தில் இருந்தபடி, அதைக் கேட்டு வந்தார். அவர், கவிச் சக்கரவர்த்தி ஆகாத காலம் அது.

கதையில், சீதா பிராட்டியை, இராவணன் தூக்கிச் செல்லும் கட்டம். இராவணன், ஒரு கையால் சீதையின் தலையையும், மற்றொரு கையால் காலையும் பற்றி தூக்கிச் சென்றான் என்று வால்மீகி முனிவர் பாடியிருப்பதை, கதை சொல்பவர் விரிவாக எடுத்துரைத்தார்.

ஒவ்வொரு நாளும், இராமனது கதையை கேட்கும் மக்கள், தம் வீட்டுக்குப் போகும் போது, தாம் கேட்டவற்றைப் பற்றிப் பேசிக் கொண்டே போவர். முறையாக விமர்சனம் செய்ய அவர்களுக்குத் தெரியா விட்டாலும், எந்த, எந்த பகுதி அவர்கள் உள்ளத்தில் அழுத்தமாகப் பதிந்ததோ, அதைப் பற்றி பேசுவர். அவர்களுடைய பேச்சையும் கவனிப்பார் கம்பர்.

அன்றும், கதை முடிந்தவுடன், கேட்டவர்கள், போகும் போது, பேசிக் கொண்டது, கம்பர் காதில் விழுந்தது... "இராவணன், சீதையை அப்படித் தூக்கிக் கொண்டு போனானே... பாவி, தொடும்போதே அவன் தலை வெடித்திருக்கக் கூடாதா... சீதையை, அவனால் அணுகவே முடியாமல் இருந்திருந்தால் எப்படி இருக்கும்..." என்று, அவர்கள் பேசிக் கொண்டு போயினர் அவர்கள் ஆசை அது.

வால்மீகி காலத்துக்குப் பின், பல துறைகளில் மக்களின் மனோபாவம் மாறி விட்டது.

பல காலமாகவே, வால்மீகி ராமாயணத்தை கேட்டுக் கேட்டுச் சுவைத்தவர் கம்பர் ஆராய்ச்சியும் செய்தவர். தமிழில் ராமாயணத்தைப் பாட வேண்டும் என்ற ஆசை அவருக்கு உண்டாயிற்று.

சங்க காலத்தில் இருந்த ராமாயணம் வழக்கொழிந்து போயிற்று. அதற்குப் பின் தோன்றிய, ஜைன ராமாயணமும், மக்களிடையே நிலைத்து நிற்கவில்லை. அதனால், ராம கதையை, தமிழ் காப்பியமாக அமைக்கும் ஆர்வம், அவரிடம் நாளுக்கு நாள் வளர்ந்தது.

அவர் காலத்துக்கு முன், ராமன் பலருக்கு உபாசனா தெய்வமாகி விட்டான். தனியே ராமனுக்கு கோவில்கள் எழுந்தன. ஆதலில், அவனை தெய்வமாக, இலட்சிய நாயகனாக, குறைபாடில்லாதவனாக வைத்துப் பாடத் துவங்கினார்.


பல இடங்களில், காலத்துக்கு ஏற்ற வகையில், கதையில், சில சிறு மாற்றங்களைச் செய்தார். தமிழ் மரபையும் ஏற்ற இடங்களில் பொருத்தினார். சீதையை நிலத்தோடு ராவணன் பெயர்த்து சென்றதாக எழுதினார்.

வாலியின் மனைவி தாரகி, சுக்ரீவன் மாளிகையில், கைம்மை நோற்புடையவளாக வாழ்கிறாள். சீதையின் மனதை மாற்ற, மாயாசனகனைப் படைக்கிறான் ராவணன். இப்படிச் சில மாற்றங்களை அமைத்து, சில புதிய நிகழ்ச்சிகளையும் கூட்டி, ஆறு காண்டங்களையும் பாடினார்.

(கி.வா.ஜ., எழுதிய கட்டுரை ஒன்றில்...)

# பூமி இன்னும் 175 கோடி ஆண்டுகள் வாழும்

**ம**னிதன் உட்பட உயிரினங்கள் உயிர் வாழும் இந்த பூமியின் "உயிர் வாழும்" காலம் எவ்வளவு தெரியுமா? 175 கோடி ஆண்டுகள் தான். அதன் பின், இந்த பூமி, சூரிய மண்டலத்தின் உச்சகட்ட கொதிக்கும்





கிரகமாகி விடுமாம் தண்ணீர் ஒரு துளி கூட இருக்காதாம். பிரிட்டனில் உள்ள பல்கலைக்கழக வான் உயிரியல் ஆராய்ச்சி குழுவினர், பல ஆண்டுகளாக பூமி பற்றிய ஆய்வுகளை செய்து வருகின்றனர். சமீபத்தில் இந்த குழு வெளியிட்ட அதிர்ச்சித் தகவல் தான் இது.

இது தொடர்பாக ஆராய்ச்சிக்குழுவின் தலைவர் அன்ட்ரு ரஷ்பி கூறியதாவது: பூமி பற்றிய ஆய்வுகள் முடிவில்லாதவை. ஆனால், எங்கள் கண்டுபிடிப்புகள் பல கட்டங்களில் உண்மை என நிரூபிக்கப்பட்டுள்ளன.

எங்கள் முந்தைய கணிப்பு படி, பூமி இன்னும் 325 கோடி ஆண்டுகள் வரை "உயிர் வாழும்" தகுதி படைத்ததாக இருக்கும் என்று தான் மதிப்பிட்டிருந்தோம். ஆனால், வானிலை மாற்றங்கள் கடுமையாக மாறி வருகின்றன; கடல் மட்டம் மாறி வருகிறது; கடல் நீர் அதிவேகமாக நீராவியாகி வருகிறது. இப்படி பல வகையான வானிலையில் மிக மோசமான மாற்றங்கள் ஏற்பட்டு வருவதால், பூமி "உயிர் வாழும்" காலம் வெகுவேகமாக குறைந்து வருகிறது. அதாவது, எங்கள் இப்போதைய கணிப்பு 175 கோடி ஆண்டுகள் வரை பூமி "உயிர் வாழும்" என்பது தான்.

ஆம், அதுவரை பூமியில், தண்ணீர் இருக்கும் வெப்பம், மனிதர்களால் தாங்கும் அளவுக்கு இருக்கும். அதன் பின், வெப்பம் மிகவும் கொடூரமாக இருக்கும்; மனிதர்கள் பொசுங்கிப் போவர்; ஆடு, மாடு போன்ற உயிரினங்கள் அதிர்ச்சி தரும் வகையில் கோடிக்கணக்கில் மடிந்தும் மறைந்தும் விடும். அதனால் மாற்று இடம் தேடி தான் மக்கள் போக வேண்டியிருக்கும். சூரிய மண்டலத்துக்கு வெளியே கிட்டத்தட்ட ஆயிரம் கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் மனிதர்கள் உட்பட உயிரினங்கள் உயிர் வாழ தகுதி இருக்கிறதா என்று ஆராய்ச்சிகளும் நடந்து வருகின்றன.

செவ்வாய் உட்பட எட்டு கிரகங்கள் தான் உயிரினங்கள் உயிர் வாழ, வானிலை உட்பட எல்லா வகையிலும் அருமையாக இருக்கும். அதில் மனிதர்கள் குடியேறலாம். மனிதர்களுக்கு ஏற்ற வகையில் செவ்வாய் உட்பட இந்த கிரகங்களில் இயற்கை வளங்கள், வசதிகள் இருக்கும்.

எந்த கிரகம் வசதியானது?

- சூரியனின் காலம் இன்னும் 600 கோடி ஆண்டுகள்.
- சூரியனை வைத்து தான் மற்ற கிரகங்கள் உயிர் வாழுகின்றன. அதாவது, பல வகையிலும் உயிர் வாழும் தகுதிகளை படைத்துள்ளன.
- அப்படிப் பார்த்தால் செவ்வாய் தான் இப்போதைக்கு மனிதர்கள், மற்ற உயிரினங்கள் வாழ தகுதியாக உள்ளதாம்.
- மேலும், பூமிக்கு வெகு அருகாமையில் உள்ளதும் செவ்வாய் தான்.
- பூமி போலவே, வானிலை இருக்கும் மற்றும் தண்ணீர் போன்ற வசதிகள் இருக்குமாம்.

ஆனார்கள்.


இந்தத் தலைமுறையில் அப்படி யாவருமே இல்லை. அவ்வாறு நவீன வணிக எழுத்து நிறைய வந்தால் மட்டும்தான் லட்சக் கணக்கானவர்கள் தமிழில் வாசிக்க ஆரம்பிப்பார்கள். வாசிப்பு ஒரு சமூக இயக்கமாக நிகழும். அவ்வாறு 10 இலட்சம் பேர் தமிழில் எதையாவது வாசித்தால்தான் அதில் 10 ஆயிரம் பேர் தரமான இலக்கியத்துக்கு வருவார்கள்.

அத்தகைய வணிகக் கேளிக்கை எழுத்து தமிழில் இல்லை என்றால், இளம் வாசகர்கள் ஆங்கிலத்தில்தான் அவற்றை வாசிக்க ஆரம்பிப்பார்கள். இன்று சுஜாதா இல்லை. ஆகவே, நம் இளைய தலைமுறை டான் பிரவுனையும் சேத்தன் பகத்தையும் வாசிக்கிறது. அவர்களில் நுண்ணுணர்வு உள்ளவர்கள் பின்பு நேராக ஓரான் பாமுக்குக்கும் முரகாமிக்கும் சென்றுசேர்கிறார்கள்.

க.நா.சுப்ரமணியமும் சுந்தர ராமசாமியும் வணிக எழுத்தை அத்தனை ஆவேசமாக எதிர்த்தார்கள் என்றால், அதற்கான காரணம் அது இலக்கியத்தை மறைத்தது என்பதுதான் இலக்கிய மேதைகளும் பேரிலக்கியப் படைப்புகளும் தமிழில் இருந்தும் வணிக எழுத்தாளர்களும் கேளிக்கைப் படைப்புகளும் கொண்டாடப்பட்டன என்பதுதான். ஆனால், இனிமேல் அப்படி வணிக எழுத்து இலக்கியத்தை மறைக்க முடியாது. இன்றைய உச்சக்கட்டத் தகவல்தொடர்புமுறை எல்லாவற்றையும் கொண்டுசென்று சேர்த்துவிடும்.

ஆகவே, தமிழில் நமக்கு இன்று தேவை டான் பிரவுன்போல, ஸ்டீபன் கிங்போல, சேத்தன் பகத்போல ஈர்ப்புள்ள வணிக எழுத்தாளர்கள். அவர்களை உருவாக்கிக் கொண்டு சேர்க்க பதிப்பாளர்கள் முயல வேண்டும். இல்லையேல், அடுத்த தலைமுறையில் தமிழில் வாசிக்க யாரும் இருக்க மாட்டார்கள்!

# பாதிப்பில் உருவான படங்கள்






## 46. Kikujiro (1999)

தன் தாயைத் தேடித் தனியே தெருவில் சென்றுகொண்டிருக்கிறான் அனாதரவான ஒரு சிறுவன். இடையில் விசித்திர மனப்பாங்குகள் கொண்ட ஒரு பெரியவனைச் சந்திக்கிறான். இருவரும் தாயைத் தேடிச் செல்லும் அந்தப் பயணத்தில் நிகழும் சாகச சம்பவங்களைக் கொண்ட கதை. டகேஷி கிடானோ இயக்கி நடித்த படம். யுசுகே செகிகுச்சி, கயோகோ கிஷிமோட்டோ ஆகியோரும் நடித்துள்ளனர்.

**தமிழில் - மிஷ்கின் இயக்கி நடித்த நந்தலாலா (2010)**








## 47. Love in the Afternoon (1957)

காதல் களியாட்ட விருப்புள்ள ஒரு நடுத்தர வயதுக்காரன் தனியார் துப்பறிவாளன் ஒருவனின் மகள் மீது மையல் கொள்கிறான். அவள் தன் வாடிக்கையாளரின் மனைவியுடன் சேர்ந்து இவனை ஒரு பொறிக்குள் சிக்க வைக்கிறாள். பில்லி வைடர் இயக்கத்தில் கெரி கூப்பர், அன்ட்ரே ஹெப்பேர்ன், மௌரிஸ் செவாலியர் ஆகியோர் நடித்தது.

**தமிழில் - பிரபுதேவா இயக்கத்தில் ஜெயம் ரவி, ஹன்சிகா ஆகியோர் நடித்து வெளிவந்த எங்கேயும் காதல் (2011)**






## 48. Butterflies Are Free (1972)

பார்வையில்லாத இளைஞன் ஒருவன் தன் தாயின் அதீத அக்கறையையும் கவனிப்பையும் சகித்துக்கொள்ள மாட்டாமல் தனி வீட்டுக்குக் குடிபோகிறான். அங்கு அயலில் சுதந்திரமான எண்ணங்களுடைய இளம் பெண்ணைச் சந்திக்கிறான். காதல்வயப்பட்டு சிக்கல்களின் பின் சேரும் படம். கொல்டீ ஹோன், எட்வேட் அல்பேட், எய்லீன் ஹெக்கார்ட் ஆகியோர் நடித்தது.

**தமிழில் - கமல்ஹாசன், மாதவி ஆகியோர் நடித்து சிங்கீதம் சீனிவாசராவ் இயக்கத்தில் வெளிவந்த ராஜபார்வை (1981) கமல்ஹாசன் தயாரித்த முதல் படம்.**

# கட்டண அதிகரிப்புக் குறித்து

# தனியார் பேருந்து சங்கங்கள் முரண்பாடு

பேருந்து கட்டண அதிகரிப்பு குறித்து தனியார் பேருந்து சங்கங்கள் முரண்பட்ட கருத்துக்களை தெரிவித்துள்ளன.

இதற்கமைய, 7 வீத பேருந்து கட்டண அதிகரிப்பை தமது சங்கம் நிராகரிப்பதாக அனைத்து இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் பிரதம செயலாளர் அஞ்ஜன பிரியஞ்ஜித் தெரிவித்துள்ளார்.

தாம் இதனை விட அதிக பேருந்து கட்டண உயர்வை எதிர்பார்த்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேருந்து கட்டண தேசிய கொள்கைக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடவடிக்கைகளின்போது 10 வீத கட்டண உயர்வு மேற்கொள்ளப்பட வேண்டிய நிலைமை காணப்பட்ட போதிலும், அரசாங்கம் 7 வீத கட்டண உயர்வை வழங்கி பேருந்து உரிமையாளர்களை ஏமாற்றுவதாக அவர் குற்றஞ் சுமத்துகின்றார்.

இதேவேளை, பேருந்து கட்டண அதிகரிப்பு குறித்து தமது சங்கம் இதுவரை எந்தவித தீர்மானத்தையும் எட்டவில்லை எனவும், இது குறித்து கலந்தாலோசிக்கப்படவுள்ளதாகவும் மாகாண பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சரத் விஜித்த குமார தெரிவித்துள்ளார்.

அத்துடன், 7 வீத பேருந்து கட்டண உயர்வானது, தனியார் பேருந்து உரிமையாளர்களை ஏமாற்றும் ஓர் நடவடிக்கை என தென்மாகாண தனியார் பேருந்து சங்கத்தின் தலைவர் சந்தன சொய்சா குறிப்பிட்டுள்ளார்.

எனினும், 7 வீத பேருந்து கட்டண அதிகரிப்பை தாம் ஏற்றுக் கொள்வதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த பேருந்து கட்டண உயர்வதாக போதுமானதாக அமைகின்றது என பேருந்து சங்கமொன்றின் தலைவர் ஒருவர் தெரிவிப்பாராயின், அவர் தமது தொழிற்துறையை காட்டிக் கொடுப்பதாக அனைத்து இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் பிரதம செயலாளர் அஞ்ஜன பிரியஞ்ஜித் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் நடை முறைக்குவரும் வகையில் தனியார் பேருந்து கட்டணங்களை 7 வீதத்தால் அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


## மரக்கறி,பழச் செய்கைக்கு பயன்படுத்தப்படும் ஓமோன்கள் மீட்பு

விலை அச்சிடப்பட்ட உர வகைகளும், மரக்கறி, மற்றும் பழச் செய்கைக்கு பயன்படுத்தப்படும் ஓமோன்களும் வத்தளையிலுள்ள களஞ்சியசாலையில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

நுகர்வோர் அதிகாரசபையால் கைப்பற்றப்பட்ட இவற்றின் பெறுமதி 10 மில்லியன் ரூபா என அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்துள்ளார். எலகந்த பகுதியிலுள்ள குறித்த களஞ்சிய சாலையில் விலைகள் மாற்றப்படுவதாக அதிகாரசபையின் கம்பஹா கிளைக்கு, கிடைத்த முறைப்பாட்டிற்கு அமைய, மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இவை கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக நுகர்வோர் அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் மேலும் கூறியுள்ளார்.

# இலங்கை மாணவர்களுக்கு ஜப்பானில் தொழில் வாய்ப்புடன் உயர் கல்வி



இலங்கை மாணவர்களுக்கு பகுதி நேரத் தொழில் வாய்ப்புடன் ஜப்பானில் உயர் கல்வியை மேற்கொள்ள வாய்ப்பு கிடைத்துள்ளது. இது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை கொழும்பில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இவ் உடன்படிக்கையில் இலங்கை உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரட்னவும், ஜப்பான் தொடர்பாடலுக்கான சர்வதேசப் பாடசாலையின் பிரதம பணிப்பாளர் டொமோகிரோ அன்ரகுவும் கையெழுத்திட்டுள்ளனர்.

இப்புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்காக ஜப்பான் இலங்கை நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் செயலாளர் நாயகம் ஒதாசி மொட்டயுகி மற்றும் டொமொகிரு அன்ராகு ஆகியோர் தலைமையில் ஐவர் அடங்கிய குழுவொன்று கடந்த வார இறுதியில் கொழும்புக்கு வருகை தந்திருந்தது.

இக்குழுவினர் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின்னர் கொழும்பில் செய்தியாளர் மாநாடொன்றை நடாத்தியுள்ளனர்


இச்செய்தியாளர் மாநாட்டில் அவர்கள் குறிப்பிட்டதாவது:- ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையிலான கல்விப் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் இந்நாட்டு மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழேயே நாம் இலங்கை உயர் கல்வி அமைச்சுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து இருக்கின்றோம்.

இத்திட்டத்தின் கீழ் 2014ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதி முதல் இலங்கை மாணவர்கள் எமது கல்லூரிக்குச் சேர்க்கப்படுவார்கள். வருடத்திற்கு நான்கு தடவைகள் மாணவர்கள் சேர்க்கப்படுவர். ஒரு தடவைக்கு ஐம்பது மாணவர்கள் வீதம் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

தற்போது இலங்கையை சேர்ந்த பத்து மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். எமது கல்லூரி ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரில் அமைந்துள்ளது. இங்கு தற்போது 23 நாடுகளைச் சேர்ந்த 400 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இங்கு கல்வி கற்போர்களுக்கு தங்குமிட வசதி, சுகாதார காப்புறுதி, உணவு என்பன இலவசமாக வழங்கப்படும்.

அவர்கள் கற்கை நெறிக்கே பணம் செலுத்த வேண்டும். அதனைத் தவணை அடிப்படையில் செலுத்தவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

# மாணவர்களின் கற்றலுக்கு உதவி



யாழ்.எய்ட் இன் தமிழர் தாயகத்தில் நலிவுற்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கான தொடர் செயற்பாட்டில் யாழ் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் நலிவுற்ற மாணவர்களுக்கு கற்றல் மேம்பாட்டிற்கான பல்வேறான உதவிகளை யாழ் எயிட் வழங்கியது.

பாடசாலை முதல்வர் வி.சிவசக்திவேல் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் விருந்தினராக யாழ் இந்துவின் முன்னால் புகழ்பூத்த விரரும் அவுஸ்ரேலியா வாழ் புலம் பெயர் ஈழத்தமிழரும் சமூக சேவையாளருமான எஸ்.நரேந்திரன் (நரேன்) திருமதி நரேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# செல்லப்பிராணிகளுக்கான கண்காட்சி



இலங்கையில் முதற் தடவையாக ஒரே இடத்தில் செல்லப் பிராணிகளுக்கான மூன்று கண்காட்சிகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன. விளையாட்டுத் துறை அமைச்சின் மைதானத்தில் இந்தக் கண்காட்சி நடைபெற்றது.

நூற்றுக்கும் அதிகமான செல்லப்பிராணிகள் இந்தக் கண்காட்சியில் பங்குபற்றின.

சிறு பிள்ளைகளின் மனதை கவர்ந்த பென்ஸன் செல்லப் பிராணியும் இதில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.குழு நிலைப்போட்டியில் பென்ஸன் உள்ளிட்ட குழு இதன் போது முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இதேவேளை பீ.கல் பிரிவில் நடைபெற்ற போட்டியில் ஜெஸ்பர் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.மூன்று சர்வதேச நடுவர்களின் பங்களிப்புடன் இந்த போட்டி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது

# மணப் பெண் சார் கண்கவர் கண்காட்சி



இலங்கையின் மணப் பெண்கள் சஞ்சிகையானது தனது 25ஆவது இதழ் வெளியிடப்படுவதை கொண்டாடும் முகமாக, “மணப்பெண்சார் கண்கவர் காட்சி’ நிகழ்வை சின்னமன் கிராண்ட் ஹோட்டலில் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நடாத்தவுள்ளது.

இந்தக் கண்கவர் காட்சியை முன்னின்று நடாத்துபவரான முகாமைத்துவப் பணிப்பாளர் நெலும் ஹத்தெல்ல கூறுகையில் “இந்தத் தொழிலுக்குள் புதிதாக நுழைந்துள்ள இளம் திறமையாளர்களுடன் ஒன்றிணைந்து, இத்துறையில் ஏற்கனவேயுள்ள பழம்பெரும் சிரேஷ்ட ஆளுமைகளும் உருவாக்கிய மணப் பெண்சார் வடிவமைப்புக்களை இக் கண்கவர் காட்சி அழகுற காட்சிப்படுத்தும். வேறுபட்ட காலகட்டங்களைச் சேர்ந்த பெருமளவிலான வடிவமைப்பாளர்களது கைவண்ணங்களின் தெரிவுகளை ஒரே கூரையின் கீழ் காட்சிப்படுத்தும் விதத்திலமைந்ததும், இவ்வகையான ஒரேயொரு நிகழ்வாகவும் இது திகழ்கின்றது“ என்று தெரிவித்தார்.



யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியின் வழிகாட்டலும் ஆலோசனையும் சேவைப்பிரிவினரால் நடாத்தப்பட்ட உலக உளநல தாள் நிகழ்வில் கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் உரையாற்றுவதையும் எஸ் ரீ.குமரனின் நெறியாள்கையில் ஆற்றுகை செய்யப்பட்ட ஙங்களின் சிற்பிகள் நாடக காட்சியினையும் கலந்து கொண்ட மாணவர்களையும் காணலாம்.

# பாலம் அமைக்காது வீதிபுனரமைப்பு; சிரமத்தின் மத்தியில் போக்குவரத்து

(கொடிகாமம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இத்தாவில் சந்திக்கு அண்மையில் உள்ள புகையிரத பாதைக்கு பாலம் அமைக்கவில்லையென அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். முகமாலை, இத்தாவில் போன்ற கிராமத்து மழைநீரானது இத்தாவில் சந்தியில் உள்ள பாலத்தின் ஊடாகவே பாய்வது வழமை. ஆனால் சந்தியில் புகையிரத பாதைக்கு பாலம் அமைக்காது வீதி புனரமைப்பு செய்யப்படுகின்றது.

பாலம் அமைக்காது வீதி புனரமைப்பு செய்யப்படுவதனால் இந்தப் பகுதியில் உள்ள குடியிருப்புக்கள் மீது வெள்ள நீர் தேங்கி நிற்க வாய்ப்புள்ளதாகவும் கருதுகின்றனர். அத்துடன் இத்தாவில் பகுதியில் பாடசாலையொன்றும் சந்திக்கு அருகாமையில் உள்ளதாகவும், மழை காலங்களில் பாடசாலை மாணவர்களும் பெரிதும் பாதிக்கப்படுவர் என்றும் அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனமெடுத்து இத்தாவில் சந்திப்பகுதியில் புகையிர பாதைக்கு பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (130)

# வினைத்திறன் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

வெளிவிவகார அமைச்சு இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள அலுவலர்களுக்கான 1ஆம் 2ஆம் வினைத்திறன் தடைகாண் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை 2013 டிசம்பரில் கொழும்பிலும், வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலும் நடாத்தப்படும் வாய்மொழிப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

விண்ணப்பிக்கும் இறுதிநாள் நவம்பர் 1ஆம் திகதியாகும். இரண்டு (1ஆவது, 2ஆவது) வினைத[illegible]ன் தடைக்காண் பரீட்சை நடைபெறும். இத்துடன் வெளிநாட்டு மொழியாக, அரபு, பிரஞ்சு, ரஷ்ய, ஸ்பானிய, ஹிந்தி, சீன, ஜேர்மன், ஜப்பான், ஆங்கிலம், கொரியனுடன் இரண்டாம் மொழியாக சிங்களம், தமிழ், ஆங்கிலம் மூலம் பரீட்சை இடம்பெறும்.

பரீட்சை முதல் அமர்வு இலவசமாகவும் தொடர்ந்து ஒவ்வொரு அமர்வுக்கும் கட்டணம் செலுத்தப்படல்வேண்டும்.

தமிழ்மொழி பரீட்சையில் இலக்கணம், மொழிபெயர்ப்பு, மனுவாசித்தல், உரையாடலும் உரைபெயர்ப்பும் இடம்பெறும்.

மாதிரி விண்ணப்பப்படிவமும், மேலதிகவிபரங்களையும் 11.10.2013திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (105)

# அநாதரவாக வாழ்ந்த முதியவர் கைதடி முதியோர் இல்லத்தில் இணைப்பு

(திருநெல்வேலி)

53 வருடங்களாக மூன்று முதலாளிகளிடம் கிளிநொச்சி, வட்டக்கச்சியில் வயல் வேலை செய்து வந்த 85 வயதுடைய தோமஸ் சூசை என்பவர் தற்போது எல்லோரும் கைவிட்டு விட்ட காரணத்தினால் கைதடி அரச முதியோர் இல்லத்தில் இணைதது் கொள்ளப்பட்டுள்ளார்.

திருமணமாகாத இவருக்கு சொந்த பந்தங்கள் எவரும் இல்லை முறுகண்டிப்பிள்ளையார் கோவில் சூழலில் இயங்க முடியாத நிலையில் காணப்பட்ட இவரை அப்பகுதியில் உள்ளவர்கள் [illegible]மிரங்கி கைதடி முதியோர் இல்லத்தில் சேர்ப்பித்து விட்டனர்.

மலையகத்தைச் சேர்ந்த இவர் கிளிநொச்சிக்கு வந்து பல வருடங்களாகின்றன. வயல்வேலைகளில் திறமை பெற்ற இவர் மூன்று முதலாளிகளிடமும் வேலை செய்யும் போது மிகவும் விசுவாசத்துடனேயே தனது கடமையை மேற்கொண்டிருந்தார்.

இருந்தும் இவரது இறுதிக் காலத்தில் இவரைப் பராமரிப்பதற்கு எவரும் இல்லாததினால் மிகவும் அவதிப்பட்ட இவர் தற்போது தற்காலிக இணைப்பில் முதியோர் இல்லத்தில் இணைக்கப்பட்டுள்ளார். (137)

# விவசாய அமைச்சினால் பதவிகளுக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

விவசாய அமைச்சின் இலங்கை உரக்கம்பனியில் உள்ள பதவி வெற்றிடங்களுக்கு துடிப்பான மற்றும் சாதனை நோக்குடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.


பதவிகள் முகாமையாளர், விற்பனைகள் மற்றும் சந்தைப்படுத்துதல், ஆய்வு கூடம், நிருவாகம் மற்றும் மனித வளங்கள் ஆகும்.

வயது 35-55இற்கும் இடைப்பட்ட இலங்கைப் பிரஜைகள், உறவினரல்லாத இருவரின் பெயர், விலாசம், தொடர்பிலக்கங்கள் அடங்கலான விபரமான சுயதரவுடன் 21ஆம் திகதிக்கு முன்பாக பொது முகாமையாளர்,வ/ப இலங்கை உரக்கம்பனி, பிஷப்மேடு, ஹுனுப்பிட்டிய, வத்தளை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிடல் அவசியமாகும்.

விண்ணப்பதாரியின் தகைமைகள் மற்றும் அனுபவம் அடிப்படையில் சம்பளம் தீர்மானிக்கப்படும் தகைமை பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற பட்டதாரியும், முதுமானிப்பட்டம் பெற்றவர்களும், 5 வருட முகாமைத்துவ ரீதியிலான அனுபவமும் தேவை. (105)





தொல்புரம் முதியோர் இல்லத்தில் இடம் பெற்ற முதியோர் மற்றும் மண்டபத் திறப்பு விழா நிகழ்வின் போது மண்டபம் திறந்து வைக்கப்படுவதையும் நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை வழங்குவதையும் காணலாம். (137)

# பதிவிறக்கப் பெட்டகம்

எனக்கு எங்கிருந்து கவிதை வந்தது என்று சொல்ல எனக்கு இயலாது. என் முன்னோடியாய் எந்தக் கவிஞரும் இல்லை. அதைப்பற்றி யோசிக்கும்போதெல்லாம், கேரளத்தில் என் கிராமத்தின் இடைவிடாத மழையில் விதவிதமான இசைகளை நான் கேட்கிறேன் மலையாள ராமாயணத்தின் ஒளிரும் வரிகளும் என் நினைவுக்கு வருகின்றன.... என் தாய் எனக்குப் பூனைகளுடனும், காகங்களுடனும், மரங்களுடனும் பேசக் கற்றுக் கொடுத்தாள், பக்தியுள்ள என் தந்தையிடமிருந்து கடவுள்களுடனும் ஆன்மாக்களுடனும் தொடர்பு கொள்ளக் கற்றுக்கொண்டேன். சிந்தை கலங்கிய என் பாட்டி தினப்படி வாழ்வின் சலிப்பையும், சாதாரணத்தையும் தப்பிக்க ஒரு இணை உலகை உருவாக்கக் கற்றுக் கொடுத்தாள், இறந்தவர்கள் மண்ணுடன் ஒன்றாயிருக்கக் கற்றுக்கொடுத்தனர், காற்று கண்ணுக்குத் தெரியாமல் நகரவும், அசையவும் சொல்லிக் கொடுத்தது, மழை என் குரலுக்கு பல ஏற்ற இறக்கங்களைக் கற்றுத் தந்தது. இத்தகைய ஆசிரியர்கள் இருக்கையில், எதோ ஒருவகைக் கவிஞனாக இல்லாமல் போவது எனக்கு சாத்தியமாயிருக்கவில்லை **– கே.சச்சிதானந்தன்**

ஒரு மேசை. அதன்மேல் உணவுப்பொருட்கள் இருக்கின்றன. ஆடைகள் இருக்கின்றன. வண்ணப் பாத்திரங்களும் மின்னணுச் சாதனங்களும் இருக்கின்றன. இன்னும் நாம் அன்றாட வாழ்க்கையில் புழங்கும் ஏதேதோ பொருட்கள் இருக்கின்றன. அந்த மேசையில் ஒரு வைரம் கொண்டுவந்து வைக்கப்பட்டால் என்ன நிகழும்? அந்த அத்தனைப் பொருட்களும் வைரத்தாலேயே மதிப்பிடப்படும். ஒரு வைரத்தின் மதிப்பில் எத்தனை சதவீதம் அந்தப் பொருட்கள் பெறும் என்பதே நம் எண்ணமாக இருக்கும். வைரம் எந்தப் பயன் மதிப்பும் அற்றது. வெறும் ஒரு கல். ஆனால் அத்தனை பயன் பொருட்களையும் மதிப்பிடும் ஒன்றாக அது தன் அழகால் தன்னை ஆக்கிக் கொண்டிருக்கிறது. அதுவே கவிதை. உலகியலுக்கு முற்றிலும் அப்பாற்பட்ட அழகு அது. நம் உலகியலின் மதிப்பு என்ன என்று நமக்குக் காட்டித் தருவது என்பதே அதன் ஒரே உலகியல் மதிப்பு. **– ஜெயமோகன்**

நிறக்குருடு என்ற பார்வைக் குறைபாடு என்னிடம் உள்ளது என்று வைத்துக்கொள்வோம். நீங்கள் சிவப்பு என்று குறிப்பிடும் நிறம், என் பார்வையில், நீங்கள் நீலம் என்று குறிப்பிடும் நிறமாகத் தெரிகிறது. ஆகவே, பழப்பழயாக நான் அது சிவப்பு நிறமே என்ற பொது ஒப்பந்தத்துக்கு வந்து சேர்கிறேன். இதை வேறு எங்கும் சரிபார்த்துக் கொள்ளவும் வாய்ப்பு இல்லை. கவிதைகளைப் புரிதலிலும், மனிதர்களின் எண்ண ஓட்டங்களிலும் இப்படித்தான். **– எம்.யுவன்**

மன ஆரோக்கியமும், நோயுற்றுவிட்ட இக்காலத்தின் தாக்கமும் இணையும்போதுதான் கவிதைகள் நாம் வாழும் காலத்திற்குரிய ஆழத்தைத் தேடிச் செல்வதான தோற்றத்தைத் தருகின்றன. **– சுந்தர ராமசாமி**

இந்த 'நான்' என்பதுதான் என்ன? அது மூலமா அல்லது மூலத்தூடு செயல்படும் ஒரு உபாதியா? அது தன்மையா – முன்னிலையா – படர்க்கையா – அல்லது இவை எல்லாம் சேர்ந்த ஒன்றா? இவை அனைத்தும் கவிஞனை இனங்காண, அடையாளப்படுத்தச் சிரமிக்கும் முயற்சிகளா? என்னையே எடுத்துக்கொண்டால் என்னை இந்த உடல் அடையாளங் கொண்டு உலவும் நானும் நவீனன் நகுலன எல்லாரும் ஒருவரே தானா? வள்ளுவரும் இதைப்பற்றியெல்லாம் சிந்தித்திருக்கிறார். கல்வியறிவற்றவன் வெறும் ஒரு பொம்மை என்று சொல்லியிருக்கிறார். மனிதரே போன்றவர் என்றும் சொல்லியிருக்கிறார். அவருடைய சில கவிதைகளில் – மனிதனைப் பற்றியும் மனித – உறவுகளைப் பற்றியும் கூறுகையில் ஒரு வேதாந்தச் சாயல் காணப்படுகிறது. உளதாகும் சாக்காடு என்றவரும் அவர்தான். கவிஞனின் ஆதார உருவம் உடல் – உடல் – மன உருவங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவைதானா? சிந்திக்கப்பட வேண்டிய விஷயங்கள். கவிதை எனப்படுவதே கற்பனையின் சூழ்ச்சி என்று சொன்னவனும் பாரதி தானே? **– நகுலன்**




# பொறுமையே மிகவும் சிறந்தது

* இறைவன் ஒருவனே என்றாலும், எண்ணற்ற தோற்றங்களில் அவன் காட்சி தருகிறான். அனைத்து உயிர்களை யும் படைத்து காத்து அருள்புரிபவன் அவனே.

* ஒவ்வொருவரும் இறைவனின் திரு நாமத்தை உச்சரிக்கின்றனர். ஆனால், உள்ளத்தில் அன்பு இல்லாமல் வெறும் உச்சரிப்பால் மட்டுமே அவனை அடைய முடியாது.

* செல்வச்சீமான் என்றாலும், நாடாளும் மன்னன் ஆனாலும் எல்லா உயிர்களும் இறைவன் முன் சமமே. சிறு எறும்பும் இறைவனின் அன்புப் படைப்பே.

* சகதி நிறைந்த சேற்றில் பிறக்கும் தாமரை, அதிலிருந்து எப்படி விலகி இருக்கிறதோ, அதுபோல வாழ்வில் பட்டும் படாமலும் இருக்கப் பழகுங்கள்.

* நன்மை செய்தவர்க்குத் திருப்பி நன்மை செய்வது உலக இயல்பு. ஆனால், தீமைசெய்தவர்க்கும் நன்மை செய்வது உத்தமருக்குரிய உயர்ந்த குணம்.

* பொறுமையை விடச் சிறந்த தவம் வேறொன்றும் உலகில் இல்லை. திருப்தியை விடச் சிறந்த இன்பம் இல்லை. மன்னிப்பதை விட மகத்தான ஆயுதம் வேறில்லை. இவற்றை வாழ்வில் கடைபிடியுங்கள்.

# விடுகதைகளும் விடைகளும்

1) வானில் வலம் வருவான், அறிவின் மறு பெயர் கொண்டவன் அவன் யார்?

2) ஆடி ஓய்ந்தால்தான் அம்மணி வருவாள்
அவள் யார்?

3) கொளுத்தியதும் கோடி கும்பிடு அது என்ன?


4) ஒரு வீட்டுக்கு இரண்டு வாசல் அது என்ன?

5) தாயின் வாயில் பிறப்பது தரணி யெங்கும் சிறப்பது அது என்ன?

6) இசைத்தால் வணங்கும், இம்சித்தால் வஞ்சிக்கும் அது என்ன?

**விடைகள்:**
1) மதி
2) ஆவணி
3) கற்பூரம்.
4) மூக்கு
5) தாலாட்டு
6) நல்ல பாம்பு

# குறுக்கெழுத்துப் புதிர்




மேலிருந்து கீழ் :

1. பெருமகிழ்ச்சி, குதூகலம், உவகை, பூரிப்பு முதலான பொருள் தரும் தமிழ்ச் சொல்.

2. பண்பாட்டு வளர்ச்சி- என்ற சொற்றொடரில், "பண்பாட்டு" என்ற அடைமொழிக்குப் பிரதியாகப் பயன்படுத்தக் கூடிய அதே கருத்தைத் தரும் மற்றோர் அடைமொழி.

4. உழவுத் தொழிலோடு தொடர்புடைய மரபு வழி உபகரணம் / கருவி.

6. ஏதாவது ஒரு துறையில் மிகத் தேர்ச்சி பெற்ற ஒருவரை இப்படி அழைப்போம்.


இடமிருந்து வலம் :

1. கொடை, வீரம், விருந்தோம்பல், செங்கோல் மாண்பு முதலான புறத்திணை அம்சங்களைப் பாடும் சங்க காலத் தொகை நூல்களில் ஒன்று.

3. இந்திய நதிகளில் ஒன்று. இதன் பெயர் தமிழக அரசியலில் வாக்கு வேட்டைக்காக அடிக்கடி உச்சரிக்கப்படுவதுண்டு.

5. இணை, ஒப்பு முதலான கருத்துக்களைத் தரும் தமிழ்ச்சொல். (குழம்பியுள்ளது)

7. இந்தியாவின் அதி வெப்பம் மிகுந்த பீடபூமி - பாலைவனப் பிராந்தியம் இது.



# கொஞ்சம் சிரிக்க...

ஒருவர்: "என்ன". 70 கிலோ எடையை ஒரு மணி நேரத்தில குறைச்சிட்டீங்களா? எப்படி ?
நண்பர்: "என் மனைவியை ஊருக்கு அனுப்பிட்டேன்"




**சொர்க்கமெண்டா என்ன?**
அமெரிக்கன் சம்பளம், சைனா உணவு, இங்கிலாந்து வாழ்க்கை, இந்திய மனைவி!
**நரகமெண்டா என்ன?**
அமெரிக்க மனைவி, சைனா வாழ்க்கை, இங்கிலாந்து உணவு, இலங்கை சம்பளம்!

# இவையெல்லாம் மாறிவிடும்!



"குருவே, என்னால் வாழ முடியாது. வாழ்க்கையே துன்பமாய் மாறிவிட்டது" என்றான் ஒருவன்.
"அப்படியா?" அமைதியாகக் கேட்டார் குரு.
"ஆமாம். முன்பு என் வாழ்க்கை இனிமையாக இருந்தது. எந்தக் கஷ்டமும் இல்லை. நிம்மதியாக இருந்தேன். இப்போது நான் எது செய்தாலும் தப்பாகவே முடிகிறது. வியாபாரத்தில் நஷ்டம். குடும்பத்தில் சந்தோஷம் இல்லை. வாழ்க்கையே சோகமாகி விட்டது".
"இவையெல்லாம் மாறிவிடும்" அமைதியாகச் சொன்னார் குரு.
மாதங்கள் போயின. குரு முன் மீண்டும் வந்து நின்றான் அவன்.
"குருவே, உங்களைச் சந்தித்த பிறகு வாழ்க்கையே மாறிவிட்டது. இப்போது சந்தோஷமாயிருக்கிறேன். பிஸினஸ் நன்றாகப் போகிறது.
நிறைய இலாபம் வருகிறது. குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கிறது" என்று மிகுந்த உற்சாகத்துடன் சொன்னான் அவன்.
குரு அவனை அமைதியாகப் பார்த்தார்.
"இவையெல்லாம் மாறிவிடும்" என்றார்.



மோனா லிசா ஓவியம் இத்தாலிய ஓவியர் லியொனார்டோ டா வின்சியால் வரையப்பட்ட உலகப்புகழ் பெற்ற கலைநயமிக்க ஓவியங்களில் ஒன்றாகும்.

# பழங்களின் பெயர்கள் தமிழில்

| | |
|---|---|
| Apple: | அரத்திப்பழம், குமளிப்பழம் |
| Orange: | கமலாப்பழம், நாரத்தை, நாரந்தம், கிச்சிலி |
| Strawberry: | செம்புற்றுப்பழம் |
| Durian: | முள்நாரிப்பழம் |
| Blueberry: | அவுரிநெல்லி |
| Watermelon: | குமட்டிப்பழம், தர்பூசணி |
| Cranberry: | குருதிநெல்லி |
| Blackberry: | நாகப்பழம், நாவல் பழம் |
| Peach: | குழிப்பேரி |
| Cherry: | சேலாப்பழம் |
| Kiwi: | பசலிப்பழம் |

**ஒரு மனிதனைத் தாக்கும் மிகப் பெரிய ஆயுதம், அவனுக்கு பிடித்த ஒருவரின் மௌனம்தான்....**

உலகில் இருக்கும் மொத்த மொழிகளின் எண்ணிக்கை 6809

இவற்றில் 700க்கு உட்பட்ட மொழிகளில் மட்டும்தான் எழுதவும் பேசவும் முடியும்.

சொந்த வரிவடிவத்தில் எழுதப்படும் மொழிகள் வெறும் 100மட்டுமே

இவற்றுக்கெல்லாம் தாயாக. மூலமொழியாகளாக திகழ்பவை 6 மொழிகள் என கண்டறியப்பட்டுள்ளது.

1. எபிரேய மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
2. கிரேக்க மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
3. இலத்தீன் மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
4. சமஸ்கிருத மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
5. தமிழ்
6. சீன மொழி

# க.பொ.த. (சா/த) பரீட்சை - 2013

# கல்வி முரசு O/L

## தமிழ்மொழியும் இலக்கியமும்

**01) சுருக்கமான விடை எழுதுக.**

i) "நாட்டில் அடையா நெடுங்கதவு மஞ்சலென்ற சொல்லும் உடையான் சடையப்பனூர்" இங்கு குறிப்பிடப்படும் வள்ளல் யார்? அவரது ஊர் யார்?

ii) "திண்டோள் வயவேந்தர் செந்தாமரை முகம் போய் வெண்டாமரையாய் வெளுத்தவே" இங்கு இடம்பெற்றுள்ள அணி யாது? விளக்குக.

iii) "ஏர் எழுபது..... அது எப்படிப்பட்ட நூல் என்று தெரியவில்லையே" ஏர் எழுபது யாரைக் குறித்துப் பாடப்பட்டது? யாரால் பாடப்பட்டது?

iv) "பிள்ளாய் உன்னை அதிகமாக மதித்துக் கொள்ளாதே. இங்கு காக்கையேனும் கொக்கேனும் இல்லை" இக்கூற்று யாரால்? எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?

v) நச்சப்படாதவன் செல்வம் நடுவூருள் நச்சு மரம் பழுத்தற்று" இக்குறளின் பிரதான கருத்து யாது?

vi) "பாதகா! என் சிங்கத்தை மறைந்து நின்று கொன்று விட்டாயே! என்னை மணக்கலாம் என்றல்லவோ இருந்தாய். இந்தா மாலையிடுகிறேன். வா" இக்கூற்று இடம்பெற்றுள்ள நூல் யாது? எத்தகைய உணர்வு வெளிப்படுத்தப் படுகின்றது?

vii) "இன்று காலுயரம் நிற்கின்ற கன்றுகளில் ஒன்றேனும் வேம்பின் நிழல் மறந்த மண் முழுதும் நாளை நிழல் இறைக்கும்." கவி வரிகளினூடாகப் புலப்படுத்தப்படும் விடயம் என்ன?

viii) "நல்ல மரமும் நச்சு மரமும்" என்ற கட்டுரை எந்நூலில் இடம்பெற்றுள்ளது? யாரால் எழுதப்பட்டது?

ix) நாட்டார் பாடல்கள் பாடப்படும் சந்தர்ப்பங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

x) கம்பரது இராமாயணத்தில் ஓட்டக்கூத்தர் பாடிய காண்டம் ஒன்று இடம்பெற்றுள்து. அது எது? எத்தனையாவது காண்டம்?

**02) பின்வரும் செய்யுட் பகுதிகள், உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை எமது மொழிநடையில் எழுதுக. மேலோங்கி நிற்கும் உணர்வினைக் குறிப்பிட்டு விளக்குக.**

அ) காவலரை தன் சேடி காட்டக் கண்டீரிருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார் - பூ வரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணாநின்று
ஊசலா குற்றாள் உள்ளம்.

ஆ) கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித்தானா
இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான்
கொடுத்துத்தா னிரட்சித்தானா
அல்லைத்தான் சொல்லித்தா னாரைத்தா
னோவத்தா னையோவெங்கும்
பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான்
புவியிற்றான் பண்ணினானே

இ) அம்மெல்லிய பூங்காற்றின் இனிமையால் புத்துயிர் பெற்ற நண்பர்கள், அகமும் முகமும் மலர்ந்து தென்றல் எழுந்துவந்த திசை நோக்கிச் சென்றார்கள். அவ்வழியில் இளந்திரைகளோடு இலக்கிய நன்னீர்ப் பொய்கையொன்று அமைந்திருந்தது. அப்பொய்கையில் விளங்கிய செந்தாமரையில் அன்னங்கள் அமர்ந்து துயின்ற அழகு கண்ணைக் கவர்ந்தது. நற்றாமரைக் கயத்தில் துயின்ற நல்லன்னத்தைக் கண்ட இளவரசன் துணைவனை நோக்கிக் கூறலாயினான்.

ஈ) சக்கரக் கோட்டத்தில் விஜயதரபூபதிக்காக என் தந்தை செய்த போரில், போர்க்களம் முழுதும் கறங்குபோல் திரிந்து, பகைவர் யானை சேனையை யெல்லாம் ஊதையிற்பட்ட பூளைப்பூவென்ன நூறி எறிந்த வாகை சூடினவன் கருணாகரனே யன்றோ! அவனுடைய நடைமேகத்தின் கதிபோல் இருக்கும்! அவன் வரும்போது தரையிலே ஒரு தேவன் நடந்து வருவது போலிருக்கும்!

03) " கல்வியே அழியாச் செல்வம்" என்னும் கட்டுரையில் "கல்வி அழியாதது" என்பதை கட்டுரையாசிரியர் எவ்விதம் நிரூபிக்கிறார் என்பதை விளக்குக.

*அல்லது*

"முன்னோக்கி" என்னும் கவிதையில் கவிஞர் தான் சொல்ல விரும்பும் கரத்தை எவ்விதம் வெளிப்படுத்துகிறார் என்பதை விளக்குக.

04) கற்றறிந்தாரின் சிறப்பு, உண்மை உறவின் சிறப்பு, இனிய சொற்களின் சிறப்பு என்பன பழமொழி நானூறு, வாக்குண்டாம் நல்வழி ஆகியவற்றில் கூறப்படுமாற்றினை ஆராய்க.

*அல்லது*

வசைக்கவி பாடுவதிலும், சிலேடைக்கவி பாடுவதிலும் காளமேகப் புலவர் சிறந்தவரென்பதை "காரென்று பேர் படைத்தாய்" என்ற பாடலையும் "நிலவாய் விளங்குதலால்" என்ற பாடாலையும் ஆதாரமாக வைத்து விளக்குக.

**05, 06, 07 ஆம் வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து எழுதுக.**

05) கவிச்சக்கரவர்த்தி நாடகத்தில்
அ) 'துமி' என்ற சொல் வழக்கிலுள்ளது என்பதை விளக்கிய சம்பவம்.
ஆ) கம்பரிடம் தோற்றுவிட்ட ஒட்டக்கூத்தரின் மனோநிலை என்பன சித்திரிக்கப்படுமாற்றினை எடுத்துக் கூறுக.

06) "நல்ல மரமும் நச்சு மரமும்" என்ற கட்டுரையில்
அ) பொய்கையின் அழகும் பயனும்
ஆ) நல்ல மரத்தினது தோற்றமும் பயனும், நச்சு மரத்தினது தோற்றமும் பயன்இன்மையும் எடுத்துக் கூறப்படுமாற்றினை விளக்குக.

07) 'பார்வைகள்' என்ற சிறுகதையில்
அ) தருமலிங்கம்
ஆ) டாக்டர் ஆகிய பாத்திரங்களின் குணப்பண்புகளை எடுத்துக் கூறுக.

**தமிழ் இலக்கிய தொகுப்பு நூலை முழுவதும் தழுவிய வினாப்பத்திரம் இது. இலக்கியத் தொகுப்பினுள் உள்ளடக்கப்பட்ட புராதன நவீன செய்யுள் உரை நடைப்பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு வினாக்கள் இங்கு அமையும்.**

**1) சந்தர்ப்பம் கூறல்**
**2) பொருள் கூறல், பொருட் சிறப்புத்துணிதல்**
**3) தெரிவு வினாக்கள்**
**என மூன்று பகுதிகள் இதனுள் அடங்கும்.**

இவ்வினா 5 சந்தர்ப்பப் பகுதிகளை உடைய 25 புள்ளிகளுக்கமைந்த வினாவாக அமையும்.

உ+ம் :- பின்வரும் சந்தர்ப்பப் பகுதிகளை மனங்கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

*1) "செல்லல் நீங்கப் பகல் வித்திய செந்நெல் மல்லல் நிர்முளை வாரிக் கொடு வந்தால் வல்லவாறமு தாக்கலு மாகும்...."*

1) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2) யாருக்கு கூறப்பட்டது?
3) எப்போது கூறப்பட்டது?
4) இக் கதாபாத்திரத்தின் பண்பு எத்தகையது?
5) 'வித்திய செந்நெல்' என்றாலென்ன?

விடைகள் :-

1) இளையான் குடிமாறனாரின் பத்தினியார்
2) இளையான் குடிமாறனாருக்கு
3) சிவனடியாரை உபசரித்து ஆசனத்தில் இருத்திய மாறனார் அவருக்கு விருந்தளிக்க முனைந்தாலும் வறுமை காரணமாக துன்புற்றவேளை அவருக்கு வழிமுறை கூறும் வகையில் மாறனாரின் மனைவி கூறியது.
4) கணவன் துன்புற்ற வேளைகளில் அவருக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் ஆலோசனைகள் கூறி கணவனது பணிக்குப் பேருதவி புரியும் ஒரு மனைவியாக காணப்படுகிறார்.
5) விதைக்கப்பட்ட நெல்

*02) 'புயத் துறை வலிய ரேனும் பொறையொடும் பொருந்தி வாழ்தல் சயத்துறை அற்றும் அ:.தே'*

1) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2) இது யாருக்கு கூறப்பட்டது?
3) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
4) பொறையொடு பொருந்தி வாழ்தல்' எத்தகைய பயன்களைத் தரும்?
5) புயத்துறை வலியர் எனும் தொடரின் பொருள் யாது?

விடைகள் :-

1) இராமபிரானால்
2) இலக்குமணனுக்கு
3) இராமபிரான் வீடணனுக்கு கூறிய வார்த்தைகளைக் கேட்ட இலக்குமணன் இராவனனுக்கு இரக்கம் காட்டுவதை விடுத்துப் போர் செய்வதே தக்கது எனக்கூறக்கேட்ட இராமன் மேற்கண்டவாறு கூறினான்.
4) பொறுமை, வெற்றியையும் நன்மையையும் தரவல்லது.
5) தோள் வலிமை கொண்டு போரிடுவோர்

3) 'ஐயா! உங்களுக்கு முன்னரே இதேவழியை சிலர் சொன்னார்கள். அறிவு நிறைந்த உங்களிடம் நல்ல தீர்ப்புக் கிடைக்கும் என்று வந்தோம்...."

1) இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
2) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
3) இக்கூற்று இடம்பெறும் பாடப்பகுதி எது?
4) சிலர் கூறிய வழி யாது?
5) இக்கூற்றின் சந்தர்ப்பம் யாது?

விடைகள்:

1) பூங்குன்றனால்
2) நண்ணனுக்கு
3) அறிவுடை நம்பி
4) புதையலை இருவரும் சமமாக பங்கிட்டுக் கொள்ளும்படி கூறினார்.
5) பூங்குன்றனாரும் இளநாகனாரும் புதையலைக் கொண்டு நண்ணனிடம் செல்ல அவர் இருவரையும் புதையலை சமமாக எடுத்துக்கொள்ளக் கூற அதைக்கேட்ட பூங்குன்றனார் இவ்வாறு கூறினார்.

வினா (02)

பின்வரும் பகுதிகள் ஒவ்வொன்றினதும் பொருளை உமது உரை நடையில் எழுதி கீறிட்ட சொற்களுக்கு விளக்கம் தருக.

பின்வரும் பகுதிகள் ஒவ்வொன்றினதும் பொருள் உமது உரைநடையில் எழுதி கீறிட்ட சொற்களுக்கு விளக்கம் தருக.

1) வெண்முகிலோடு நாமும்
மிதக்கலாம் , வீசுகின்ற

தண்ணிய தென்றலூடும்
தளிர்களின் மென்மையூடும்
பண்ணுடன் உணர்வை பெய்யும்
பசுங்கிளைக் குயில்களோடும்
தண்ணீரும் தண்ணீரும் போல்
கலந்துறவாடலாமே

பொருட்சிறப்பு :-

இவ்வரிகளினூடு இயற்கையோடு மனிதன் ஒன்றிக்கும் நிகழ்வு நீரோடு நீர் கலந்து ஒன்றாகும் இயல்பிற்கு உவமை கூறப்படுகின்றது. இயற்கையிலே மனம் ஒன்றாகும்போது மனதிலே ஒரு ஈரம், அமைதி என்பன உண்டாகி மனிதன் பண்பாடு அடைகிறான் எனும் தொனி பெறப்படுகின்றது.

2) ஐய கேள் நாகதேசந்த னாங்கமர்
வெய்யரில் வெய்யன்யான் வெகுளித் தீ விழுந்து
ஒய்யென இவணெலா பொருங்க விந்தபின்
மெய்யுற வரு நடுத் தீர்வை வேந்தனால்.

பொருட்சிறப்பு :-

உலகிலே பாவ கர்மங்கள் அளவிற்கு அதிகமாக நடைபெறும் உலகை இறைவன் அழிப்பது இயல்பு. அவ்வாறே இப்பாவம் நிறைந்த பூமி அழிவின் பின் நடுநிலையோடு கூடிய உலகு ஒன்றை இறைவன் தந்து அருளுவான். ஆதலால் இறைவனது ஆட்சிக்கு உட்பட்டதே உலகு. இறைவன் வேண்டுவதும் அறத்தோடு கூடிய நடுநிலையான உலகினையே அதனால் அவன் நடுத்தீர்வை நாடும் தலைவனாகிறான்.

3) பேரொளி பரப்பி பொங்கும்
பெருகிய அழகு வெள்ளச்
சார்பினில் கதீஜா வென்னும் தையல்
தன் கரிய வாட்கள்
கூருடைக் கயல்களோடிக் குதித்தன
குதித்துத் தேக்கி
வாரிய வதனஞ் சோர்ந்து
மறுக்கமுற்றிருந்த தன்றோ.

பொருட் சிறப்பு:-

இங்கு கதீஜா நாயகியின் அழகு கூறுவதே புலவரின் நோக்கம். ஆதனால் அவரது கண்களை வாள் போன்றன என உவமை கூறியதோடு கயல் மீன் என உருவகமும் கூறி சிறப்புச் சேர்த்துள்ளார்.

**03) பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.**

1) உவமை நயம் எனும் கட்டுரை துணை கொண்டு விடை தருக.
அ) புலவன் ஒருவனின் சிறப்பை அறிய உதவுவது எது? அதனால் ஏற்படும் பயன் என்ன?
ஆ) "உயர்ந்ததன் மேற்றே உள்ளும் காலை என்பதன் பொருள் என்ன?
இ) இவ்விலக்கணத்தை கம்பனும் சேக்கிழாரும் மீறும் இடங்கள் எவை? காரணம் என்ன?

விடைகள்:-

அ) புலவன் கையாளும் உவமை ஒன்று கொண்டே அவனுடைய சிறப்பை அறியலாம் தொடர்புள்ள, தொடர்பற்ற பொருட்களில் ஒவ்புவமை காணலாம். காணாத பொருட்களை விளங்கமுடியும். அன்றாட வாழ்விற் காணும் பொருட்களின் சிறப்பையும் அறிய முடிகிறது.

ஆ) ஒன்றை ஒப்புமை சொல்ல வேண்டும் எனில் அதனை உயர்ந்த பொருட்களோடு கூட்டியே உவமிக்க வேண்டும் என்பது இதன் பொருள்

இ) கம்பன் - பரதன்மேற்கொண்ட சீற்றத்தினால் ஆயிரம் இராமர்களுக்கு ஒப்பான பரதனை சொறிநாயோடு இலக்குவணன் ஒப்பிடும் இடம்.
காரணம் - இலக்குவணனுடைய தாழ்ந்துவிட்ட மனோநிலையை வாசகர்களுக்கு உணர்த்துவது

சேக்கிழார் - காளத்திமலையிலே இறைவனை திண்ணனார் இறுகப்பற்றிய விதத்தினை நாணான் உடும்புடன் ஒப்பிடும் இடம்.

காரணம் - வேடுவர்குலத்திலே பிறந்த காடனுக்கு உடும்புப்பிடி என்றால் எளிதிலே விளங்கிக் கொள்ள முடியும் என்பதற்காக,

2) "இரட்சணிய யாத்திரிகம்" எனும் பாடப்பரப்பை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.
அ) சுவிஷேசனின் தோற்றப்பொலிவு எவ்வாறு இருந்தது என ஆத்துமவிசாரி கூறுகிறான்.

ஆ) ஆத்தும விசாரி தான் செய்த பாவங்களாகக் கூறியவை எவை?

இ) சாவதற்கு ஏன் அஞ்சுகிறாய் எனச் சுவிஷேசன் வினவ ஆத்தும விசாரி கூறியது என்ன?

விடைகள் :-

அ) குளிர்ச்சி பொருந்திய கிருவை நிறைந்த முகத்திடையே தாமரை மலர் போல அழகிய இரு கண்களும் நிறைவான கருணை காட்டிட இதயத்திலே நிறைந்த அன்பானது பொங்கி வழிந்து ஒழுகிற்று எனும்படி அழகிய மொழி அமுதமாக ஒழுக எண்ணுதற்கரிய துன்பங்களுக்கெல்லாம் அழிவை செய்யும் புண்ணியமே உருவெடுத்து வருவதை ஒத்த சுவிஷேசன் வந்தான்.

ஆ) நன்றி மறந்தமை
இறை சிந்தனை இல்லாமை
இழி செயல்கள் செய்தமை
வீணாகப் பொழுது போக்கியமை

இ) 1) ஜென்ம நாளில் இருந்து நான் செய்த பாவங்கள் என்முதுகிலே பெருஞ்சுமையாக எனது முதுகை வருத்துவதால் நானும் பாவ கன்மின்கள் கூடும் அக்கினிக்கிடங்கிலே கிடந்து மறுமையில் அலைவேன் என எண்ணி அஞ்சுகிறேன்.

2) சாதாரண மண்ணை ஆட்சிசெய்யும் மன்னர்கள் வழங்கும் தண்டனைக்கே அஞ்சும் நாம் உலக மன்னவருக்கெல்லாம் தலைவனான இறைவனின் தண்டனைக்குப் பெரிதும் அஞ்சியதால் சாவதற்குப் பயப்படுகிறேன்.

3) "இருட்டறை" எனும் பாடப்பகுதி துணைகொண்டு விடை தருக.
அ) சசீனாக்கிழவி வாழ்ந்த குடிசையின் நிலையையும் அதன் வரலாற்றையும் கூறுக?

ஆ) சசீனாவின் வாழ்வை வெட்ட வெளி ஆக்கிய நிகழ்வு எது?

இ) "இருட்டறை" எவ்வாறு கதையுடன் பொருந்துகிறது.

விடைகள்:-

அ) கிராமத்தை விட்டுத் தனியாக இருந்தது. இருட்டுக்குள்ளே இருட்டை அடக்கிக் குருட்டுத்தவம் செய்து கொண்டிருந்தது. அறுபது வருடங்களுக்கு முன் அக்குடிசையில்தான் சசீனா பிறந்தாள் இன்றுவரை அக்குடிசைதான் அவளுக்குத் தஞ்சம். அவளுக்கு முன் அவளது தாய், தந்தையர் என எத்தனையோ தலைமுறைகளைக் கண்டது அக்குடிசை.

ஆ) அவள் யாருக்காக வாழ்ந்தாளோ, அவளது மகன் ரஸாத் அவளிடம் "உலகம் தெரிங்சமாதிரிப் பேசுரியே உண்ட முகம் உனக்குத் தெரியுமா?" என்று கேட்ட வினா அவளது வாழ்வினை அர்த்தமற்றதாக்கிவிட்டது.

இ) ஆகாது எனும் காரணத்தினால் அவள் வாழ்விலே எந்தப்படிப்பும் இன்றி வாழ்ந்தமை காலமும் கால மாற்றமும் சசீனாவை தொட்டுக்கூடப் பார்த்ததில்லை. அக்கால மாற்றங்களையும் எண்ணிப்பாராது உலக நடைமுறை அறியாது தன்குடிசையிலேயே வீணாக 60 வருடங்களையும் கழித்ததால் அவள் வாழ்வு இருட்டறை ஆகிவிட்டது.

4) "**கணையாழி**" துணைகொண்டு விடை தருக.
அ) துர்வாசர் சகுந்தலைக்கு இட்ட சாபம் என்ன? காரணம் யாது?
ஆ) சகுந்தலை கணையாழியைக் காணாத போது துஷ்யந்தன் கூறியது என்ன?
இ) துஷ்யந்தன் உண்மையை அறிந்த பின் எவ்வாறு வேதனை கொண்டா

விடைகள் :-

அ) "நானே தவசிரேட்டன் என்னை அவமதித்து நீ யாரோ ஒருவனை நினைத்துக் கொண்டு இருக்கிறாய், நீ எவனை நினைத்தாயோ அவன் உன்னை மறப்பானாக, அதுவே உனக்குத் தக்க தண்டனை" கண்ணுவ முனிவரின் ஆசிரமம் வந்த துரவாச முனிவரை வரவேற்காது தன்சுய நினைவில்லாது துஷ்யந்தன் நினைவிலே இருந்ததால் துர்வாசரை வரவேற்கத் தவறி விட்டாள். இதனால் துர்வாசர் கோபம் கொண்டு சாபமிட்டார்.

ஆ) "சாதுரியம் நிறைந்தவர்கள் பெண்கள் நீங்கள் அதனை நிரூபித்து விட்டீர்களே! குயில் அதன் குஞ்சுகளை எவ்வாறு வளர்க்கின்றது என்பது இக் குவலயம் அறிந்ததே" எனக் கூறினான்.

இ) "இந்தக் கணையாழி அன்று சகுந்தலையிடம் கொடுத்த அதே கணையாழிதான் அவளை நான் காந்தர்வ மணம் புரிந்ததும் உண்மையே. அது ஏன் எனக்கு ஞாபகம் வரவில்லை. எது என்னை மறக்கச் செய்தது. சகுந்தலையை கண்டபோதும் சரி அவள் கூறிய வார்த்தைகள் மூலம் நினைவுபடுத்த முயன்றபோதும் சரி அவள் நினைவுகள் என் நினைவிற்கு வரவில்லையே என்ன கொடுமை செய்து விட்டேன் அவளைப் பலர் முன்னிலையிலே அவமதித்துவிட்டேன். சகுந்தலையைக் கண்டு என் நிலை கூறுவேன். மன்னிப்புக் கேட்கும் வரையிலே எனக்கு நிம்மதி எது? சகுந்தலா நீ எங்கிருக்கிறாய்? இதோ புறப்படுகிறேன்" என துஷ்யந்தன் கூறி மனம் கலங்கினான்.

4) பின்வரும் பாத்திரங்களில் 2 பாத்திரங்களின் குணவியல்புகளை விளக்குக.
1) அந்தோக் கிழவி
2) மணிமேகலை
3) அங்கதன்
4) கதீஜா நாயகி

5) வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது. - நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.

1) இப்பாடல் இடம்பெறும் நூல் எது? இதனைப் பாடியவர் யார்?

2) இன் சொல், வன்சொல் என்பவற்றை புலவர் எவ்வாறு கூறுகிறார்?

3) இச்செய்யுளின் மையக் கருத்து யாது?

6) சடையப்ப வள்ளலிடமும், மனைவி மகேஸ்வரியிடமும் விருந்தோம்பல் பண்பு காணப்படுமாற்றை விளக்குக.


7) முத்தொள்ளாயிரம் பாடலில் சேர மன்னனின் சிறப்பியல்புகள் கூறப்படுமாற்றை விளக்குக.

**8) "விடியுமா?" என்ற சிறுகதையில் குஞ்சம்மாளின் தம்பி குஞ்சம்மாள் மீது கொண்டுள்ள பாச உணர்வினைத் தெளிவுபடுத்துக.**

அல்லது

ஒரு பதிவிரதையின் சரித்திரம் தற்கால சமூகத்திற்கு எவ்வாறு வழிகாட்டுகிறது?

# இந்தியாவிலிருந்து வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் அதிகரிப்பு



(கொழும்பு)

இந்தியாவில் இருந்து வருகைதந்த சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை 30 வீதத்தால் அதிகரித்துள்ளதுடன் தெற காசிய நாடுகளின் சுற்றுலாப் பயணிகள் வருகை 31 வீதத்தால் உயர்வடைந்துள்ளது.

இதன்பிரகாரம் 89,761 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகைத் தந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன் முதல் ஒன்பது மாதங்களில் நாட்டிற்கு வருகைத் தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையிலும் 15.5 வீத அதிகரிப்பு ஏற் பட்டுள்ளது.

இவ்வாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 693,772 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகைத் தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலைதீவுகளில் இருந்து வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 34.5 வீதத்தாலும் அதிகரித்துள்ளது.

## நீரில் மூழ்கி உயிருக்கு போராடிய மூவரைக் காப்பாற்றிய பொலிஸார்

உப்புவெளி அலஸ்வத்த கடற்பரப்பில் நீராடச் சென்று நீரில் மூழ்கி உயிருக்குப் போராடிய மூவர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

அலஸ்வத்த கடற்பரப்பில் நீராடச் சென்ற மூவர் நேற்று முன்தினம் மாலை அலையில் இழுத்துச் செல்லப்பட்டனர்.

இதனை கண்ட உப்புவெளி பொலிஸ் உயர் பாதுகாப்புப் பிரிவினர் அலை அள்ளுண்டு சென்ற மூவரையும் மீட்டனர். அதில் இருவர் மேலதிக சிசிக்சைக்கென திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## வைத்தியரை கொன்றவருக்கு மரண தண்டனை தீர்ப்பு

26 வயது வைத்தியரை கழுத்து நெரித்து கொலை செய்த சம்பவத்தில் குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ள நபருக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

18 குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 31 வருட கால சிறை தண்டனை அனுபவித்து வந்த நபர், சிறையில் இருந்து தப்பி பதவிய வைத்தியசாலை உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்த வைத்தியரை கொலை செய்துள்ளார். 2004 ஆம் ஆண்டு இடம் பெற்ற இந்த கொலை சம்பவ வழக்கு நீண்ட காலம் இடம் பெற்று வந்த நிலையில் கொலையை நேரில் கண்டசாட்சி இல்லாமையால் விசாரணை சாடசிகளை அடிப்படையாகக் கொண்டு மரண தண்டனை விதித்ததாக நீதிபதி சுனந்த குமார ரத்நாயக்க தெரிவித துள்ளார்.

அநுராதபுரம் - பொத்தனேகமவில் வசிக்கும் 51 வயதுடைய நபருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. வைத்தியரின் வீட்டில் களவாடச் சென்ற வேளை, வைத்தியர் கூச்சலிட்டதால் இக்கொலை புரியப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

## பிளாஸ்ரிக் பொருட்களின் மீள் உற்பத்தி செயற்றிட்டம்

(கொழும்பு)

பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை சேகரித்தல் மற்றும் மீள் உற்பத்தி செய்யும் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவிக்கின்றது.

இந்த திட்டத்தை முன்னெடுப்பதற்கான இரண்டு தொழிற்சாலைகள், மொறட்டுவை மற்றும் ஹொரணை ஆகிய பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக அதிகாரசபையின் தலைவர் விமல் ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை சேகரிப்பதற்கான 115 உத்தியோகத்தர்கள், தமது நிறுவனத்தில் பதிவு செய்துள்ளனர்.

## சமுதாய சீர்திருத்த பிரிவுக்கு கண்காணிப்பாளர் நியமனம்


(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் சமுதாய சீர்திருத்தப்பிரிவுக்கு மேலதிகமாக கண்காணிப்பு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

சமுதாய சீர்திருத்தப் பிரிவின் ஆணையாளருடன் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிககவாசகர் கணேசராஜா நடத்திய கலந்தாலோசனையின் அடிப்படையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வசந்தகுமார் சிறிக்குமார் என்பவரே கண்காணிப்பு உத்தியோகத்தராக நேற்று நியமிக்கப்பட்டுள்ளார். (170)





தெல்லிப்பளை துர்க்காபுரம் மத்தி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தினால் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்கள் பதின்மூன்று பேர் நேற்று முன்தினம் பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளார்கள். சங்கத் தலைவர் எஸ்.ஆறுமுகநாதன் தலைமையில் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய அன்னசத்திர மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேவஸ்தானத் தலைவர் ஆறு திருமுருகன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

## உரிய ஆவணங்கள் இல்லாது வெளிநாடு சென்றால் நடவடிக்கை

(கொழும்பு)


உரிய ஆவணங்கள் எதுவுமின்றி வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுச் செல்வோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்பு பெற்றுச் செல்வோர் உரிய ஆவணங்களை எடுத்துச் செல்ல வேண்டியது அவசியமானது என குறிப்பிட்டுள்ளது.

வீசா மற்றும் தொழில் அனுமதிப்பத்திரங்கள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படும் என அறிவித்துள்ளது. சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக செல்வோரை தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்லும் பணியாளர்களின் உரிமைகளை உறுதி செய்யவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

## நீர்ப்பாசனத் திட்டங்கள் கையளிப்பு

தம்பலகாமம் பிரதேச சபைப் பிரிவில் ஜெயிக்கா திட்டத்தினூடாக புனரமைக்கப்பட்டுள்ள நீர்பாசனத் திட்டங்கள் கடந்த சனிக்கிழமை பொது மக்களிடம் கையளிக்கப்பட்டன.




கிழக்கு மாகாண நீர்ப்பாசன அமைச்சின் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் புனரமைக்கப்பட்டுள்ள கல்மெட்டியாவ கிளிக்குஞ்சாறு- பரவிபாஞ்சான்- ஆகிய நீர்ப்பாசனத் திட்டங்களே இவ்வாறு கையளிக்கப்பட்டன.

மாகாண வீதி அபிவிருத்தி நீர்ப்பாசனத் துறை அமைச்சர் எம்.எஸ்.உதுமான் லெப்பையின் அழைப்பின் பேரில் கிழக்கு மாகாண ஆளுநர் றியர் அட்மிரல் மொஹான் விஜேயவிக்ரம மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் ஆகியோரினால் இத்திட்டங்கள் பொது மக்களிடம் கையளிக்கப்பட்டன.

இத்திட்டங்களில் 7 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள கல்மெட்டியாவ கிளிக்குஞ்சாறு அணைக்கட்டின் மூலம் 980 ஏக்கர் வயல் நிலக்காணிகளும் 6.5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள பரவிபாஞ்சான் அணைக்கட்டின் மூலம் 422 ஏக்கர் வயல் நிலக்கார்ணிகளும் இரு போகமும் செய்கை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.





தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு அனலைதீவு பொது நூலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சிறுவர்களுக்கான விசேட படக்காட்சி மற்றும் சிரமதான வழிகாட்டல் நிகழ்வுகளின் போது


## இலங்கைப் பெண் குவைத்தில் கைது

தொழில் வழங்குனர் வீட்டில் இருந்து தங்கம் கடத்திச் செல்ல முயன்ற இலங்கைப் பணிப்பெண் ஒருவர் குவைத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அஹமடி பொலிஸார், குவைத் சர்வதேச விமான நிலைய பாதுகாப்பு பிரிவினரின் உதவியுடன் குறித்த இலங்கைப் பெண்ணை கைது செய்துள்ளனர்.

# "பாய்லின்" புயலின் கோரம்; 90 இலட்சம் பேர் பாதிப்பு





## 15 கிராமங்களைக் காணவில்லை

இந்தியாவின் ஒரிசாவில் "பாய்லின்" புயல் தாக்கியதில் 90 இலட்சம் பேர் பாதிப்படைத்துள்ளார்.

வங்கக் கடலில் உருவான "பாய்லின்" புயல் கடந்த சனிக்கிழமை இரவு ஒரிசா மாநிலம் கோபால் பூருக்கு அருகில் கரையை கடந்தது. அப்போது மணிக்கு 220 கிலோ மீற்றர் வேகத்தில் சூறாவளி காற்று வீசியது. மிக பலத்த மழை பெய்தது.

பாய்லின் புயல் வரலாறு காணாத அளவுக்கு சேதத்தை ஏற்படுத்தக் கூடும் என்று எச்சரிக்கப்பட்டதால் ஒரிசா மாநில அரசு எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்தது. சுமார் 9 இலட்சம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்து செல்லப்பட்டனர். மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன.

இதன் காரணமாக பாய்லின் புயல் தாக்குதலில் இருந்து மாபெரும் உயிரிழப்பை ஒரிசா மாநில அரசு வெற்றிகரமாக தவிர்த்தது குறிப்பிடத்தக்கது. என்றாலும் ஒரிசா மாநிலத்தின் 10 மாவட்டங்கள் பாய்லின் கோரத் தாண்டவத்தால் பலத்த சேதத்தை சந்தித்து நிலை குலைந்து போய் உள்ளன.

பாய்லின் புயல் தாக்குதலில் சிக்கி 23 பேர் உயிரிழந்து இருப்பதாக முதல் கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒரிசாவில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீரமைப்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

பாய்லின் நடத்திய கோரத்தாண்டவத்தில் சுமார் இரண்டரை இலட்சம் வீடுகள் சேதம் அடைந்துள்ளன. சுமார் ஒரு இலட்சம் வீடுகள் முழுமையாக அழிந்து விட்டன.

பாய்லின் சீற்றத்துக்கும், மழை வெள்ளத்துக்கும் 14,500 கிராமங்களில் மக்களின் சொத்துகளுக்கு கடும் நாசம் ஏற்பட்டுள்ளது. 15 கிராமங்கள் இருந்த இடம் தெரியாமல் புயல் வேகத்தால் அழிந்து விட்டதாக தெரிய வந்துள்ளது.

5 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த பயிர்கள் மழை தண்ணீரில் மூழ்கி அழிந்து விட்டன. மீனவர்களின் வாழ்வாதாரங்களிலும் சேதம் ஏற்பட்டுள்ளது. மொத்தத்தில் 2400 கோடி அளவுக்கு சொத்துக்கள் சேதம் அடைந்துள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.

இலட்சக்கணக்கான மக்கள் அடுத்த வேளை உணவு, உடைக்கு ஏங்கியபடி உள்ளனர். ஒரிசா மாநில அரசு இத்தகைய சேதத்தை எதிர்பார்த்து 5தொன் உணவு தானியங்களை கை இருப்பு வைத்திருந்தது.

அந்த உணவு தானியங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. ஒரிசா மாநில அரசு மிகத் திறமையாக எல்லாவித ஏற்பாடுகளையும் செய்திருந்ததால், மாபெரும் உயிரிழப்பு தவிர்க்கப்பட்டுள்ளது.

## மத வழிபாட்டு தலத்தில் சன நெரிசல் உயிரிழப்பு 115 ஆக அதிகரிப்பு



இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்திலுள்ள மத வழிபாட்டு தலமொன்றில் நவராத்திரி விழா அன்று ஏற்பட்ட சன நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 115 ஆக உயர்வடைந்துள்ளது.டாட்டியா மாவட்டத்தின் ரத்தன்கர் பகுதியிலுள்ள குறித்த மதவழிபாட்டு தலத்திற்கு அருகிலிருந்த பாலத்திற்கு அருகில் ஏற்பட்ட அமைதியின்மையை அடுத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது. மத வழிபாடுகளில் கலந்துகொண்ட பல இட்சக்கணக்கான பக்தர்களை சமாளிக்க பொலிஸார் தடியடி மேற்கொண்ட போது பலர் சிதறி ஒடியுள்ளனர்.


இதனையடுத்து சிந்து நதிக்கு குறுக்காக உள்ள பாலத்தின் ஊடாக நூற்றுக்கும் அதிகமானவர்கள் செல்ல முயன்ற போதிலும், சிலர் ஆற்றில் விழுந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

30 சிறுவர்களில் இதில் அடங்கியுள்ளதுடன், நூற்றுக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளதாக இந்தியத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

கடந்த 2006 ஆம் ஆண்டிலும் இந்த மத வழிபாட்டில் தலப் பகுதியில் நீரில் அடித்துச் செல்லப்பட்டு 50 பேர் பலியாகியிருந்தனர். ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் சன நெரிசல் ஏற்பட்ட போது மத வழிபாட்டுத் தலத்தில் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் சன நெரிசலுக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை என இந்தியத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

## இங்கிலாந்தின் விமான நிலையத்தை மேம்படுத்தும் முயற்சியில் சீனா



சீனா தனது முதலீடுகளை அதிகரித்துள்ள வெளிநாடுகளில் முதல் பத்து இடங்களுக்குள் இங்கிலாந்தும் இடம் பெற்றுள்ளது.எரிசக்தித்துறை, வங்கி, தேம்ஸ் நீர்வள மேலாண்மை போன்றவற்றில் சீனாவின் முதலீடு உள்ளது. அதுதவிர சில தனியார் நிறுவனங்களிலும் சீனாவின் முதலீடு அதிகரித்துள்ளது.

இதுமட்டுமின்றி லண்டன் நகரிலும் சீன நிறுவனங்கள் பெரிய அளவிலான முதலீடுகளைத் துவக்கியுள்ளன. தற்போது மான்செஸ்டர் விமான நிலையத்தின் வர்த்தக மேம்பாட்டிற்காக 800 மில்லியன் பவுண்ஸ் மதிப்பிலான முதலீட்டினை அளிக்க சீன நிறுவனம் ஒன்று ஒப்புக்கொண்டுள்ளது.

இங்கிலாந்தில் சீனாவின் முதலீட்டை அதிகரிக்கவும், சீன முதலீட்டாளர்களை இங்கிலாந்திற்கு வரும்படி ஊக்கப்படுத்தவும் சீனாவிற்கு செல்லக் கிளம்பியபோது மான்செஸ்டர் நகரின் அதிபரான ஜார்ஜ் ஒஸ்போர்ன் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.


வளர்ந்துவரும் பொருளாதாரத்துடன் வர்த்தகம் என்ற இங்கிலாந்து அரசின் கோட்பாடு பயனளிப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார். மான்செஸ்டர் விமான நிலையக் குழு, கிரேட் மான்செஸ்டர் பென்ஷன் குழு, கரில்லியன் பிக்சர்ஸ் போன்றவை பீஜிங்கின் கட்டுமான பொறியியல் குழுவுடன் இணைந்து மான்செஸ்டர் விமான நிலையத் திட்டத்தை செயல்படுத்த உள்ளன.

பிரிட்டனின் மூன்றாவது பெரிய விமான நிலையமான மான்செஸ்டரில் இதன்மூலம் அலுவலகங்கள், ஹோட்டல்கள், உற்பத்தி நிறுவனங்கள், தகவல் மற்றும் சேமிப்பு மையங்கள் போன்றவை ஏற்படுத்தப்பட உள்ளன. லண்டன் நகருக்கு வெளியிலும் அதிகரிக்கப்படும் வர்த்தக முதலீடுகள் இங்கிலாந்து நாட்டிற்கும்,இங்கிலாந்து நாட்டு மக்களுக்கும் நன்மை அளிக்கக்கூடியவையாக இருக்கும் என்று ஒஸ்போர்ன் குறிப்பிட்டார்.

லண்டன் நகர மேயரான போரிஸ் ஜான்சனும் ஆறு நாட்கள் அரசு முறைப் பயணமாக சீனாவிற்கு செல்ல உள்ளார். அங்கு அவரும் அரசியல் தலைவர்கள், வர்த்தக உயர் அதிகாரிகள் போன்றோரைச் சந்தித்து தலைநகரின் வர்த்தக முதலீட்டு மேம்பாடு குறித்து ஆலோசனை செய்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

## இன ஒன்றுமையை வெளிப்படுத்தும் 800 ஆண்டுகால "அம்மன்" ஆலயம்



பங்களாதேசிஷில் உள்ள 800 ஆண்டுகால பழமை வாய்ந்த நாகேஸ்வரி கோவிலின் பெயரே அந்நாட்டின் தலைநகரான டாக்காவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி இன ஒருங்கிணைப்பிற்கு இந்தக் கோவில் மிகப் பெரிய எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

இந்தக் கோவிலில் இருந்த பத்துக் கரங்களை உடைய தசபுஜா சிலை 1947 ஆம் ஆண்டு கொல்கத்தாவிற்கு கடத்தப்பட்டது. அதன்பின் நிர்மாணிக்கப்பட்ட துர்க்கை சிலை 1971 ஆம் ஆண்டு பாகிஸ்தானியர்களின் படையெடுப்பில் அழிக்கப்பட்டது. அதன் பின்னரும் 1975,1990 ஆம் ஆண்டுகளிலும் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளான இந்தக் கோவில் அதையும் தாண்டி மக்கள் மனதில் நிலை பெற்றுள்ளது. இங்கு நடைபெறும் துர்க்கா பூஜை பலமுறைகளிலும் தனித்துவம் பெற்று காணப்படுகின்றது.

இந்தப் பூஜை நிகழ்ச்சிகளுக்கு அந்நாட்டில் உள்ள 14 இலட்சம் இந்து மக்கள் மட்டுமின்றி, பெரும்பான்மையான முஸ்லிம் மக்களும் வருவார்கள் .நாட்டின் முக்கியக் கட்சிகளான சுவாமி லீக் மற்றும் வங்காள தேசியக் கட்சியின் மூத்த தலைவர்களும் இங்கு வந்து பூஜையாளர்களை வாழ்த்தி செல்வார்கள்.

## பாகிஸ்தானை விட்டு முஷாரப் தப்பிச் செல்ல முடியாது



பாகிஸ்தானின் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப் பாகிஸ்தானை விட்டு வெளியில் எங்கும் தப்பிச் செல்ல முடியாது என்று அந்நாட்டு உட்துறை அமைச்சர் சௌத்ரி நிஸார் அலி கான். தெரிவித்துள்ளார்.

அந்நாட்டு சட்டத்துறை அவர் மீதான வழக்குகள், விசாரணைகள் குறித்து ஆய்வு செய்யுமாறும், ஊழல் வழக்குகளை விரைந்து விசாரிக்குமாறும் அறிவுறுத்தியுள்ளது. நாட்டை விட்டு வெளியில் செல்ல தடை செய்யப்பட்டோர் பட்டியலில் 70 வயதான முஷாரப்பின் பெயரும் இடம்பெற்றுள்ளது. எனவே, நீதிமன்ற உத்தரவு இல்லாமல், அவரால் எங்கும் வெளிநாடுகளுக்குச் செல்ல முடியாது. அண்மையில் வெளிநாடு செல்லவிருந்த அவர், வேறொரு வழக்கில் மீண்டும் கைது செய்யப்பட்டார். இந்நிலையில், பாகிஸ்தான் உட்துறை அமைச்சர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

# வரவு - செலவுத் திட்டத்தில் சம்பளம் அதிகரிக்க வேண்டும்

## இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கம் மகஜர்

(கொழும்பு)

2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் 40 வீதம் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டுமென இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கம், நிதித் திட்டமிடல் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள திட்ட வரைபுக்கான ஆலோசனைகள் அடங்கிய மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கம் அனுப்பி வைத்துள்ள மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, எமது சங்கத்தின் சார்பில் முன்வைக்கப்படும் ஆலோசனைகள் 2014 ஆண்டுக்கான திட்ட வரைபில் சேர்க்கப்படுமாயின் அது இந்த நாட்டினுடைய பெரும்பான்மை அரச உத்தியோகத்தர்களான ஆசிரியர், அதிபர் ஆகியோருக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

அதிபர் சேவை, ஆசிரியர் சேவை ஆகிய இரு சேவைகளையும் தரம் 1, 2, 3 ஆகிய தரங்களாக தரப்படுத்துவதுடன்,

அதிபர், ஆசிரியர்கள் 25 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருந்தால் 9 வீதம் ஓய்வூதியம் வழங்குவதுடன் ஆசிரியர் சேவையில் ஆகக் குறைந்தது 10 வருட கால சேவையைப் பூர்த்தி செய்திருப்பின் ஓய்வுநிலை பெறத் தகுதியுடையவராக கருதப்பட வேண்டும். ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையை ஏழாம் தரத்தில் நடாத்துவதற்கும் சிங்கள மொழிப் பாடசாலைகளில் தமிழ் மொழியும் தமிழ் மொழி பாடசாலைகளில் சிங்கள மொழியும் கற்பிப்பதற்கான ஆசிரியர்களை நியமிப்பதோடு தரம் மூன்றிலிருந்து கற்பிக்கப்படுதல் வேண்டும். அப்பாடங்கள் க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு ஒரு பாடமாக பாடத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டு உயர்தரத்தில் கல்வி பயில்வதற்கு சாதாரண தர சித்தி கட்டாயப்படுத்தல் வேண்டும்.

வருடாந்த உயர்ச்சிப்படி ஆசிரியர் சேவை தரம் 3க்கு 300 ரூபாவும், தரம் 2 இக்கு 600 ரூபாவும், தரம் 1 இக்கு 900 ரூபாவாகவும் அமைவதுடன் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் 40 வீத சம்பளம் அதிகரிக்கப்படல் வேண்டும்.

வரவு செலவுத் திட்டத்தில் அதிகரிக்கப்படும் கொடுப்பனவில் அடிப்படைச் சம்பளத்தில் 50 வீதத்தையும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவில் 50 வீதத்தையும் வழங்க ஆவன செய்ய வேண்டும்.

எனவும் இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கம் 2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்திற்காக நிதித்திட்டமிடல் அமைச்சுக்கு முன்வைத்துள்ள பிரேரணையில் குறிப்பிட்டுள்ளது.

## பனங்கிழங்கு உற்பத்தி பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

பனங்கிழங்கு உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக பலரும் கவலை வெளியிட்டுள்ளனர்.

இம்முறை மழை பொழியாமையால் பனங்கிழங்கு உற்பத்தி தாமதமாகியுள்ளதாகவும், இதனால் விளைச்சலில் பாதிப்பு ஏற்படக்கூடும் எனவும் உற்பத்தியாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இக்காலப்பகுதியில் பனம் பாத்திகள் அமைக்கப்பட்டு உற்பத்தி ஆரம்பிக்கப்படும். ஆனால் இம்முறை மழை இன்மையால் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ)

## உரும்பிராய் வாசி மீது இனந்தெரியாதோர் வாள் வெட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோண்டாவில் பகுதியில் வாள்வெட்டு தாக்குதலுக்கு இலக்கான நபர் ஒருவர் காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.கோண்டாவில் டிப்போவுக்கு முன்னால் இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில், உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த எஸ்.யோகராஜா என்பவரே காயமடைந்துள்ளார்.

யாழ். பலாலி வீதி, கோண்டாவில் டிப்போவிற்கு முன்னால் சென்றுகொண்டிருந்த மேற்படி நபரை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் வாளினால் வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (25)

## பொதுநலவாய மாநட்டில்...

உள்ளூர் காங்கிரஸ் தலைவர்களும் இலங்கை பயணத்தை கைவிடுமாறு பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இந்திய மத்திய அமைச்சில் அங்கம் வகிக்கும் ஜீ.கே.வாசன், மற்றும் வி.நாராயணசாமி ஆகியோரும் மன்மோகன் சிங் இலங்கைக்கு செல்லக்கூடாது என்று வலியுறுத்தி வருவதாக இந்துஸ்தான் ரைம்ஸ் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்பது குறித்து தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கப்படுமென பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு எழுதிய கடிதத்தில் தியாகு உண்ணாவிரதத்தைக் கைவிட கருணாநிதி முயற்சிக்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

## பொதுநலவாய மாநாடு...

பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் பிரதம நீதியரசரை பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைக்கு விரோதமான முறையில் பணி நீக்கம் செய்ததாகத் தெரிவித்துள்ளார். அமர்வுகளை புறக்கணிப்பதாக கனடா விடுத்துள்ள அறிவிப்பு வரவேற்கப்பட வேண்டியதாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய அரசாங்கமும் இதனையே பின்பற்றுவதாகத் தெரிவித்துள்ளார். எதற்காக அமர்வுகளை கனடா புறக்கணிக்கின்றது என்பதனை இந்தியா ஆராய்ந்து தீர்மானம் எடுக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மனித உரிமை...

பட்டமாக மறுக்கும் இலங்கை அரசின் போக்கு, இந்த விவகாரம் தொடர்பான ஏனையவர்கள் கொண்டுள்ள உறுதிப்பாட்டையே அதிகரிக்கச் செய்யும் என்று குறிப்பிட்டுள்ளார்.

போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கையில் ஐ.நா. தோல்வியைத் தழுவிவிட்டது என்ற ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் ஒப்புக்கொண்டுள்ளது இதற்கு முன் நிகழ்ந்திராதது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் ஜனநாயகத்தை மீளக் கட்டியெழுப்பவும், தமிழ், முஸ்லிம்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும் இது சரியான தருணம் என்றும் அவர் கூறியுள்ளார்.

## ஐ.நா.குற்றச்சாட்டு

வில்லை என அதன் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்திருந்தர்.

மோதல்களில் சிக்கிக் கொள்ளாமல் மக்களை வெளியேற அனுமதிக்கும் பொருட்டு மோதல்கள் கட்டாயமாக நிறுத்தப்படக்கூடிய பாதுகாப்பு வலயங்களை ஏற்படுத்துவது குறித்து சமாதானத்திற்கான இடைவழிகளுக்கு அழைப்பு விடுக்கும் வகையில், அந்த நேரத்தில் தாம் வெளியிட்ட அறிக்கைகள் குறித்தும் அவர் தெரிவித்திருந்தார்.

பர்ஹான் ஹக்கின் மேற்படி கருத்து குறித்து அரசின் நிலைப்பாடு என்ன என்று அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஐக்கிய நாடுகள் சபை இதுபோன்ற பல குற்றச்சாட்டுகளை எம்மீது சுமத்திவருகிறது. இந்தக் குற்றச்சாட்டுகள் என்ன அடிப்படையில் எம்மீது சுமத்தப்படுகின்றன எனத் தெரியவில்லை.

எனவே, அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளுக்கு எம்மால் பதிலளிக்க முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வட்டுக்கோட்டையில்...

உறுப்பினர்களுக்கான சத்தியப்பிரமாண நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வினை புளொட் உறுப்பினர்கள் இருவர் உட்பட ஒன்பது வட மாகாண சபை உறுப்பினர்கள் புறக்கணித்திருந்தனர்

இந்த நிலையிலேயே புளொட் அமைப்பின் இரண்டு உறுப்பினர்கள் நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

## முள்ளிவாய்க்காலில்...

கோரியதாகத் தெரிவிக்கப்படுகின்ற மன்னார் ஆயர் அவர்களோ அல்லது இதுபற்றி மன்னார் ஆயருடன் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனோ எனக்கு கூறவில்லை இந்த நிலையிலேயே நான் சத்தியப்பிரமாணத்தை முள்ளிவாய்க்காலில் மேற்கொண்டேன்.

அதேநேரம் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்குள் பிளவு எதுவும் ஏற்படவில்லை மக்கள் அளித்த தீர்ப்புக்கமைய அரசாங்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்காகவே இவ்வாறு தான் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள 30 மாகாணசபை உறுப்பினர்களும் மக்களுக்கான சேவையை சரியான முறையில் செய்யவுள்ளதாகவும் சிவாஜிலிங்கம் கூறினார்.

## வடமாகாண...

யளவில் இச்சத்தியப்பிரமாணம் இடம்பெற்றுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பாக முல்லைத்தீவுலு மாவட்டத்தலி தெரிவு செய்யப்பட்ட ரவிகரனும், மன்னார் மாவட்டத்தில் ரெலோ சார்பாக தெரிவு செய்யப்பட்ட வைத்தியகலாநிதி குணசீலனுமே இவ்வாறு சத்தியப்பிரமாணம் செய்துள்ளனர்.

இது விடயம் குறித்து மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிக்கையில்,

துரதிஷ்டவசமாக வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற சத்தியப்பிரமாண நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை. ஆனாலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும், எனக்கும் வாக்களித்த மக்களுக்கும் துரோகம் இழைக்காத வகையில் நானும், குணசீலனும் நேற்று மாலை வடமாகாண முதலமைச்சரின் கொழும்பு இல்லத்திற்குச் சென்று சத்தியப்பிரமாணம் செய்துள்ளோம். எமது சேவை எப்போதும் மக்களுக்குக் கிடைக்கும் எனத் தெரிவித்தார். (இ,125)

## முன்னுக்குப் பின்...

லேயே தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வாறு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவிக்கையில்,

நடைபெற்ற வடமாகாண சபைத் தேர்தலை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி புறக்கணித்திருந்தது. தேர்தல் தொடர்பாக அது நடைபெற்றால் எத்தனையோ ஆபத்துக்கள் இருக்கிறது என்று தெளிவுபடுத்தியிருந்தோம்.

இதனால் தமிழ் அரசியலே கேள்விக்குறியாக மாறும் நிலைவரும் என்று ஊடகவியலாளர் சந்திப்பில் மக்களுக்கு கூறியிருந்தோம். இருந்தும் இந்தத்தேர்தலை பகிஷ்கரிக்க மக்களை கோரவில்லை. நாங்கள் கூறும்படி நடக்கவேண்டும் என்றும் சொல்லவில்லை. அந்த வகையில் தேர்தலில் மக்களின் செயற்பாடு குறித்து எங்களது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறோம். வடக்கில் வாழும் மக்கள் பெருமளவில் இந்தத் தேர்தலில் பங்குபற்றியதன் ஊடாக ஒரு தெளிவான செய்தியை வெளிக்காட்ட முயற்சி எடுத்திருக்கிறார்கள்.

விசேடமாக போர் முடிவுற்று நான்கு வருடங்கள் கழிந்தும் எத்தனையோ நெருக்கடிக்குள் இருக்கத்தக்கதாக தாங்கள் காலம் காலமாக எந்த நிலைப்பாட்டை ஆதரித்து அரசியல் அபிலாசைகளை விரும்பியிருந்தார்களோ அந்த நிலைப்பாட்டில் இருந்து ஒரு அங்குலம் கூட விலகாது இன்னும் உறுதியாக இருக்கின்றனர் என்ற செய்தி இந்தத்தேர்தல் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

தமிழ்த்தேசிய அரசியலைப் பிரதிபலித்து ஒரு கட்சியாக சொல்லப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக் கூட தங்களது தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொண்டபோது கூட அந்த மக்கள் போராட்டம் பற்றிப் பேசவேண்டும். இயக்கத்தைப் பற்றிப் பேசவேண்டும் என்ற பல அழுத்தங்களைக்கூட நேரடியாகக் கொடுத்திருந்தனர். ஆகவே மக்கள் இந்தத் தேர்தலில் தெளிவாகக் கொடுத்திருக்கும் செய்தியாக இலங்கை அரசாங்கத்தின் அரசியல் ஆட்சி என்பனவற்றை முற்று முழுதாக புறக்கணித்திருக்கின்றனர்.

இரண்டாவது தமிழர்களது அரசியல் அபிலாசையாகிய சுயநிர்ண உரிமைக்காக மீண்டும் பெருமளவு சரித்திரத்தில் இல்லாத வகையில் வாக்களித்துள்ளனர். ஆகவே இந்த இரண்டு தெளிவான செய்தியை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி புறக்கணித்திருந்தும் மக்கள் ஆணைக்குத் தலைவணங்குகின்றோம்.

இந்த இரண்டு செய்திகளுக்காகவே பயந்து ஒதுங்கியிருந்த மக்கள் வாக்களித்திருக்கின்றனர். ஆனால் தேர்தலின் பின்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இந்தத்தேர்தலில் ஒட்டுமொத்தமாக வாக்களித்த மக்கள் பிரிக்கமுடியாத ஐக்கிய இலங்கைக்குள் பதின்மூன்றாவது அரசியல் சீர்திருத்தத்தை ஆரம்பப் புள்ளியாகக் கொண்டு தமிழ் மக்களது பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஆணை வழங்கியிருக்கின்றனர் என்று தெரிவித்துள்ளார். இவ்வாறு தேர்தலிற்கு முன்னர் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் ஒன்றையும் தேர்தலில் வெற்றி பெற்றதன் பின்னர் வேறு ஒன்றையும் கூறி வருகிறது தமிழ்த்தேசிக் கூட்டமைப்பு .

எனவே மக்களுக்கு கொடுத்திருக்கும் வாக்குறுதிகளை தேர்தலின் பின்னர் நிறைவேற்றவேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடு. தேர்தலில் வாக்களித்ததன் பின்னர் அடுத்த தேர்தல் வரும்வரை ஒதுங்கியிருந்து காத்திருக்காது மக்களின் பங்களிப்பு இந்த அரசியல் களத்தில் இருக்க வேண்டும் என்பதே தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் கோரிக்கையாகும் எனவும் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், மணிவண்ணன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (பா)

# பயங்கரவாதத்தை அடக்குவது அடிப்படை உரிமை மீறலாகாது

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு



சிறைச்சாலையில் ஏற்படும் கலவரங்களை அடக்கும்போது மரணங்கள் ஏற்படுவதைத் தடுக்க முடியாதெனவும், பயங்கரவாத செயற்பாடுகளுக்கு மனித உரிமை மீறலென அர்த்தம் கற்பிக்கக் கூடாதெனவும் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியா சிறைச்சாலையில் கடந்த ஆண்டு ஏற்பட்ட மோதலையடுத்து தாக்கப்பட்டு உயிரிழுந்த தமிழ்க் கைதி நிமலரூபனின் பெற்றோர் தாக்கல்செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கினை இலங்கை உச்சநீதிமன்றத்தில் நேற்று நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றைய தினம் மனு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, நிமலரூபனின் மரணத்திற்கான காரணங்களை வெளிப்படுத்துவதற்கு அரசாங்கம் தவறியுள்ளதாகக் குற்றஞ்சாட்டினார்.

உயிரிழந்த நிமலரூபனின் உடலில் 20 இற்கும் மேற்பட்ட காயங்கள் காணப்பட்டதாகவும் நீதிமன்றத்திடம் விளக்கினார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த தலைமை நீதியரசர் மொஹான பீரிஸ்,

சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரமொன்றை அடக்கும்போது இவ்வாறான மரணங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

இவ்வாறான பயங்கரவாத செயற்பாடுகளுக்கு மனித உரிமை மீறல் என்று அர்த்தம் கற்பிக்க வேண்டாம் அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளில் பயங்கரவாதத் தாக்குதல்களை முறியடிக்கும்போது இவ்வாறான மரணங்கள் ஏற்பட்டன.

இவ்வாறான வழக்குகளை தொடர்ந்தும் விசாரிப்பதன்மூலம், உயிரிழந்தவர்களின் உறவினர்கள் வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் கோரக்கூடிய வாய்ப்பு உள்ளது.

எனவே, குறித்த மனுவை தொடர்ந்தும் விசாரிப்பதற்கு நியாயமான காரணங்கள் இல்லை என்று தெரிவித்த அவர் உள்ளிட்ட மூவரடங்கிய நீதியரசர்கள் குழு வழக்கை தள்ளுபடி செய்துள்ளது.

# இரண்டு வார காலப்பகுதியில் பரிந்துரைகள் அமுலாக்கம்

## இலங்கை மனித உரிமை ஆணைக்குழு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் முன்வைக்கப்படும் பரிந்துரைகள் இரண்டு வாரங்களில் அமுல்படுத்தப்பட வேண்டும் என அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அப்படி செய்யத் தவறினால் உரிய நிறுவன பிரதானிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது. மனித உரிமைகள் ஆணைக்குழு விடுக்கும் பரிந்துரைகளை சில அரச நிறுவன பிரதானிகள் செயற்படுத்தாது புறக்கணிப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதென ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். அந்த முறைப்பாடுகள் குறித்து தனியாக விசாரணை மேற்கொள்ளப்படும் என ஆணைக்குழு கூறியுள்ளது.

இது குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். மனித உரிமைகள் ஆணைக்குழு எடுத்துள்ள இத்தீர்மானத்தை சட்டமூலத்தில் உள்வாங்கிக் கொள்வதான தீர்மானம் சட்ட மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் பின் குறித்த சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# சுரேஷ் எம்.பியை விமர்சித்து வன்னியில் சுவரொட்டிகள்

(கிளிநொச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு எதிராக வன்னிப்பகுதியில் பரவலாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

கொலைகாரர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்குவதற்காக மக்கள் வாக்களிக்கவில்லையென குறித்த சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கிளிநொச்சி, பரந்தன் மற்றும் முல்லைத்தீவு பகுதிகளிலேயே அதிகளவில் இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

# வெளிநாட்டு ஊடகவியலாளரின் பின்னணி அறிந்தே அடையாள அட்டை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுநலவாய மாநாட்டில் செய்திகளை சேகரிப்பதற்காக அனுமதி கோரும் சர்வதேச ஊடகவியலாளர்களின் பின்னணியை ஆராய்ந்தே அவர்களுக்கான அடையாள அட்டைகள் வழங்கப்படும் என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அவுஸ்ரேலியாவின் பேர்த் நகரில் 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டிலும் இந்த நடைமுறையே பின்பற்றப்பட்டிருந்தது. எனினும் மாநாட்டுக்கு எந்த ஊடகத்திலிருந்து ஊடகவியலாளர்கள் வருகிறார்கள் என்பதை நாம் பொருட்படுத்தப் போவதில்லை.

ஆயினும் வெளிநாட்டு ஊடகங்கள் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களை மீளாய்வு செய்த பின்னர் லண்டனில் உள்ள பொதுநலவாய நாட்டு செயலகத்தின் நடைமுறைக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட ஊடகவியலாளர் அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

நாம் கடைப்பிடிக்கும் வழிமுறைக்கு ஏற்புடைய வகையில் அமைந்துள்ள விண்ணப்பங்களுக்கே அனுமதி அளிப்போம். தேவை ஏற்படும் போது சகல சர்வதேச ஊடகவியலாளர்கள் பற்றியும் விரிவான ஆய்வுகள் நடத்தப்படும்.

எனினும் பொதுநலவாய நாடுகளின் 2013 ஆம் ஆண்டு மாநாட்டுக்கான கொழும்பில் உள்ள செயலகம் மாநாட்டின் செய்திகள் எழுதுவதற்கு யார் தகுதியுடையவர்கள் என்பது பற்றி தீர்மானிக்கும்.

அதன்படியே உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் விண்ணப்பிக்கும் போது அவற்றை ஆய்வு செய்து அதற்கான அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டைகள் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கடமையை பொறுப்பேற்ற வடமாகாண அமைச்சர்கள்

(யாழ்ப்பாணம்)

வடமாகண சபை அமைச்சர்கள் நால்வரும் நேற்று யாழ்ப்பாணத்தில் தமது அலுவலகத்தில் உத்தியோகபூர்வமாக தமது கடமைகளைப் பெறுப்பேற்றுக் கெண்டுள்ளனர்.

வேளாண்மை, கால்நடை, நீர்ப்பாசனம், சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கண்டி வீதியில் புறுடிலேனில் அமைந்துள்ள அமைச்சின் அலுவலகத்தில் முற்பகல் 10.30 மணிக்கு தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டதுடன், கல்வி கலாசார அமைச்சர் தி.குருகுலராசா கல்வியங்காட்டில் அமைந்துள்ள வடமாகாண கல்வி அமைச்சின் அலுவலகத்தில் முற்பகல் 10.30 மணிக்கும், சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் யாழ். பண்ணை வீதியில் உள்ள சுகாதார அமைச்சின் அலுவலகத்தில் முற்பகல் 10.30 மணிக்கு தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

இதேவேளை மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி அமைச்சர் டெனீஸ்வரன் நல்லூர் செட்டித்தெருவில் உள்ள அமைச்சர் அலுவலகத்தில் நண்பகல் 12.30 மணிக்கும் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

மேலும் அமைச்சர்களின் இந்த உத்தியோகபூர்வ கடமைகளைப் பெறுப்பேற்கும் நிகழ்வில் அந்தந்த அமைச்சின் செயலாளர்கள், உத்தியோகத்தர்கள் பிரசன்னமாகியிருந்தனர். (பா)

# இலங்கையை முன்னிறுத்தி மேற்குலக ஊடகங்கள் பிரசாரம்

## பாதுகாப்பு அமைச்சு குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டை இலக்குவைத்து மேற்குலக ஊடகங்கள் இலங்கைக்கு எதிரான பிரசாரத்தை மேற்கொண்டுவருவதாக பாதுகாப்பு அமைச்சு குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளதாவது,

படையினருக்கு எதிராக பல்வேறு வழிகளில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன. விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இளைய மகன் கொலை உள்ளிட்ட பல்வேறு போலிப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

சர்வதேச அரங்கில் நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும், நிராயுதபாணியான பின்லேடனை, அமெரிக்கத் துருப்பினர் ஹெலிகொப்டர் மூலம் சென்று பாகிஸ்தானில் தாக்குதல் நடத்தியிருந்ததாக பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் எவ்வித குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படவில்லை என குறிப்பிட்டுள்ளது.

# யாழ். மக்களுடன் நட்புரீதியாக இராணுவத்தினர் பழகவேண்டும்

## தளபதி ரத்னாயக்க அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினர் யாழ்ப்பாண மக்களுடன் நட்புரீதியாக பழகுவதுடன், சமூகம் சார்ந்த சேவையினையும் வழங்க வேண்டும் என இராணுவத் தளபதி லெப். ஜெனரல் தயாரத்நாயக்க தெரிவித்தார்.

இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட பின்னர் முதற்தடவையாக நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அவர் இராணுவ அதிகாரிகள் மத்தியில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது,

யாழிலுள்ள படையினர் எல்லா நேரங்களிலும் தமது ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். நாட்டின் எந்தப் பகுதியிலும் பயங்கரவாத செயற்பாடுகள் இல்லை. எனினும் படையினர் தாம் பெற்றுக் கொண்ட பயிற்சிகள்ள மனதில் வைத்து செயற்படவேண்டும்.

நாட்டில் இன்று பூரண ஜனநாயகம் ஏற்பட்டுள்ளது. அதே போன்று வடக்கும் அபிவிருத்தியில் துரித வளர்ச்சி கண்டு வருகிறது எனத் தெரிவித்தார்.



இராணுவத் தளபதி வெற்றிலைக்கெணி, தென்மராட்சி, பண்ணைப் பகுதிகளுக்கும் விஜயம் செய்து இராணுவ வீரர்களுடன் கலந்துரையாடினார். தென்மராட்சிக்கு விஜயம் செய்த அவர் விடத்தற்பளையில் படையினருக்கான பயிற்சி நிலையமொன்றையும் திறந்துவைத்தார்.

# பிரதி அமைச்சர் குழுவை அனுப்புகிறது கனடா

எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் உச்சி மாநாட்டைப் புறக்கணிக்கப் போவதாக, கனேடியப் பிரதமர் அறிவித்துள்ள நிலையில், பிரதி அமைச்சர் ஒருவர் தலைமையிலான கீழ்மட்டக் குழுவே, கனடாவின் சார்பில் பங்கேற்கவுள்ளது.

வெளிவிவகார அமைச்சுக்கான நாடாளுமன்றச் செயலராக உள்ள, தீபக் ஒப்ராய் தலைமையிலான குழுவே கனடாவின் சார்பில் கொழும்பு மாநாட்டில் பங்கேற்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



கொன்சர்வேட்டிவ் கட்சியின் சார்பில் கல்கரி கிழக்குத் தொகுதியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட தீபக் ஒப்ராய், பிரதி அமைச்சர் பதவிக்கு சமமான, நாடாளுமன்றச் செயலர் பதவியை வகித்து வருகிறார்.

கொழும்பில் நடக்கவுள்ள கொமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிக்க கனேடியப் பிரதமர் எடுத்துள்ள முடிவுக்கு, இலங்கையின் மோசமான மனித உரிமைகள் நிலையே காரணம் என்று அந்த நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஒக்ரோபர் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.